# அம்மையும் அப்பனும்

அ. மு. பரமசிவானந்தம்

# அம்மையும் அப்பனும்

அ. மு. பரமசிவானந்தம்

தமிழ்க்கலைப் பதிப்பகம்
சென்னை-30

முதல் பதிப்பு ஜூன் 1994

பக்கம்—160 (D/c-1/16)

கிர்வாண் சொற்பொழிவுகள்

விலை—20/-

இதன் வருவாய் அனைத்தும் வள்ளியம்மாள் கல்வி அறத்துக்கே உரிய தாகும்.

திருமலை தெய்வம் ஆர்ட் பிரிண்டர்ஸ், சென்னை-29

ஆந்திர மாநில உயர்நீதி மன்றத்தின் தலைமை நடுவரும்
சென்னை நிர்வாண் சங்கத்தின் புரவலருமான
மாண்பமை உயர்திரு S. **நயனார் சுந்தரம்** அவர்கள்
வழங்கிய

# முன்னுரை

முன்னுரை தருவது அவ்வளவு எளிதான காரியம் அன்று. அணு அணுவாகச் சேகரித்து அள்ளிக் கொடுத்திருக்கும் ஆசிரியரின் கருத்துகளை உருக்குலைத்து, சிதைத்து, தன் பெருமைகளை வெளிப்படுத்துவதாக இருக்கக் கூடாது முன்னுரை. ஒரு கழைக் கூத்தாடியின் வித்தை போலிருக்க வேண்டும் முன்னுரை. இது என் கருத்து. முன்னுரை தருமாறு எனக்குக் கட்டளையிட்ட பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம், காலம் சென்ற என் தந்தையின் நண்பர்; எனக்கு ஆசான் போன்றவர். அவரின் அருமை பெருமையை நான் மறந்து விடக்கூடாது. அவர் நமக்குப் பகிர்ந்தளிக்கும் கருத்துகளின் பலனை முன்னுக்கு வைக்க வேண்டும். அதே சமயத்தில் டாம்பீகம் இல்லாமல் இந்தக் கருத்துப் பரிமாறல்களுக்குக் காரணமாயிருந்த நிர்வாண் அமைப்பினையும்-இந்த அமைப்பிற்கு நான் போஷகர்-புரவலர் என்று பட்டம் பெற்றவன் என்ற பெருமையையும் சற்று இலை மறை காய் மறைவாக வெளிப்படுத்த வேண்டும். அதனால்தான் முன்னுரை ஒரு கழைக் கூத்தாடி வித்தை என்றேன்.

ஒரு பிடி இருக்கட்டுமே, அல்லது ஒரு படி இருக்கட்டுமே-மாவை ஆக்கி, அமுது படைக்கும் இல்லத்தரசியிடம் கொடுத்தால் அவள் அப்பம் சுடுவாள்; ஆப்பம் சுடுவாள். ரொட்டி சுடுவாள்; தேன்குழல் இடுவாள்; முறுக்கும் சுடுவாள். சீடையும் போடுவாள். கை தேர்ந்த சமையல்காரி அல்லவா. ஒரு கருத்தை அள்ளிக் கொடுத்

தால் ஒன்பது கருத்துகள் ஆக்கித் தருவது சாதாரண சாதனையல்லவே. ஆழ்ந்த அறிவு, பரந்த ஞானம், பண் பட்ட உள்ளம், தான் பெற்ற கல்வியின்பத்தை-ஆன்மீக இன்பத்தை மற்றவரும் பெறவேண்டும் என்ற பரந்த மனப்பான்மை கொண்ட நம் பேராசிரியர் அ.மு. பரமசிவானந்தம் இந்த அசாதாரண சாதனையை ஒரு வேள்வி போலச் செய்து முடித்திருக்கிறார்.

நிர்வாண் அளித்த மூலக்கருத்து 'அப்பன் பரப்பிரம்ம்; அன்னை பிரகிருதி, அண்டம் அப்பன் அன்னை விளை யாடும் இடம்' அப்பப்பா! பேராசிரியர் அந்தக் கருத்தைப் பட்டை தீட்டி ஆயிரக்கணக்கான கோணங்களிட்டு என்றும் மங்காத வைரக் கருத்தாக அளித்திருக்கிறார். நிர்வாண் வெறும் பெரும் மூச்சு விட்டது. பேராசிரியரோ அதை இடிமுழக்கமாக்கி விட்டார்.

இந்தக் காலத்தில் இந்த மாதிரி கருத்துகளைத் தேடித் திரியும் பித்தர்களும் இருக்கிறார்கள். அந்தப் பித்தர் கூட்டத்திற்குப் 'பித்தம் தெளிய மருந்துண்டு வாரீர்' என்று அழைப்பு விடுத்து வெளி வருகிறது இந்த நூல்.

நைந்த உள்ளங்கள் பசைபோட்டாற் போல் ஒன்றை யொன்று பற்றிக்கொள்ளும். உள்ளம் நைந்தால்தான் பண்படும்; இல்லாவிடின் முரட்டு உள்ளமாகயிருக்கும். வேதனைப்பட்டு, சோதனை தாங்கி, பஞ்சுபோல இருக்கும் உள்ளங்கள்தாம் இந்தப் பேராசிரியர் தரும் மென்மையான - மேன்மையான கருத்துகளைப் புரிந்து கொள்ளும். பேராசிரியர் அ.மு.பரமசிவானந்தம் என்னைப் பற்றிக் கொண்டாரா, நான் அவரைப் பற்றிக் கொண்டேனா தெரியவில்லை. ஆக மொத்தத்தில் சிக்கிக் கொண்டேன், அவர் கருத்துக் குவியலின் வலையில். வாழ்க அவர் பணி மென்மேலும். வணக்கம்.

சென்னை
23—4—94

**S. நயனார் சுந்தரம்.**

# நூன் முகம்

வயது எண்பதைத் தாண்டும் நிலையில் உள்ள நான் பல ஆண்டுகளாகவே, பேசுவதெற்கென எங்கும் செல்லும் நிலையினை நிறுத்தி விட்டேன். எங்கள் வள்ளியம்மை கல்லூரி, பள்ளிகளில் பிறர் நடத்தும் விழாக்கள் ஒன்றிரண்டில் மட்டும் கலந்து பேசியுள்ளேன். ஆயினும் சென்னை நகரில் பல ஆண்டுகளாகத் தொடர்ந்து, புதன் கிழமை தோறும் கூடி, தெய்வ நெறி-சமுதாய வாழ்வு-பண்பாடு - பணிவுடைமை - சான்றாண்மை போன்ற மக்கள்-நன்மக்கள் வாழ்வுக்கேற்ற பொருள்களை அலசி, ஆய்ந்து, நன்முடிவு காணும் இந்த 'நிர்வாண்' சங்கத்தினர் தம் வேண்டுகோளை மறுக்க இயலவில்லை உலக வாழ்வு, 'எந்நிலையில் நின்றாலும் எத்தவத்தைச் செய்தாலும் மக்கள் மனமிருக்கும் மோனத்தே' என்றபடி உயிர் அந்த வாழ்வில் உலவும் போது, பற்றற்று 'நிர்வாண்' நிலையில் நிலைத்து, எல்லாரும் இன்புற்றிருக்க வழிகாண-வழி வகுக்க ஆவன செய்யும் இந்த நிர்வாண் இயக்க வேண்டு கோளை மறுக்க இயலவில்லை. ஏற்றுக் கொண்டேன்.

திங்கள் தொடர் சொற்பொழிவாக நான்கு அல்லது ஐந்து பொழிவுகளை ஓர் அடிப்படையில் தொடர் பொருளாக அமைத்துப் பேச வேண்டும் என்பது அவர்கள் கட்டளை. அப்படியே பல திங்கள் அவர்கள் செயலாற்றி வருகின்றனர். 'அப்பன் பரப்பிரமம்; அன்னை பிரகிருதி; அண்டம் அம்மையப்பர் விளையாடும் இடம்' என்ற வகையில் அவர்கள் பொருள் தந்தனர். அதன் தெளி

வாகவே கடந்த ஆகஸ்டில் நான்கு தலைப்புகளை (இந்நூலில் உள்ளபடி) நான் அமைத்துக் கொண்டு நான்கு புதன் கிழமைகளும் பேசி முடித்தேன். புதன் அறிவுக்கு ஆக்கம் அமைப்பவன். எனவே அந்நாளையே 'நிர்வாண்' பற்றிக் கொண்டதில் வியப்பில்லை அல்லவா!

நான் பேசிய பேச்சுகளைப் பெரும்பாலும் ஏட்டில் வடித்து வெளியிடுவது வழக்கம். அந்த வகையில் பத்துக்கும் மேற்பட்ட என் நூல்கள் வெளிவந்துள்ளன. அந்த முறையிலே இந்த நான்கு பேச்சுகளையும் தொகுத்து நூலாக்க முயன்றேன். முன்னமே அவை பற்றியும் குறிப்பு வைத்திருந்தேன். ஆதலின் தொகுப்பது எளிதாயிற்று. நூலும் அச்சிடப் பெற்று வெளிவருகின்றது.

'நிர்வாண்' சங்கத்தைத் தோற்றுவித்து, வளர்த்து, இன்று எங்கோ வேற்று மாநிலத்தில் தலைமை நடுவராகச் சிறந்த வகையில் பணியாற்றி வரும் மாண்பமை **S.** நயனார் சுந்தரம் அவர்கள் இன்றும் இதன் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருக்கிறார்கள். இந்தத் தலைப்பினைத் தந்தவரும் அவர்களேயாவர். எனினும் நான்கு கூட்டங்கள் ஒன்றிலும் அவர்களால் கலந்து கொள்ள முடியவில்லை. ஆயினும் நூல் முடித்து, அவர்கள் கையில் நான் தந்த போது பெருமகிழ்ச்சியுற்றார்கள்.

அவர்தம் தந்தையர் திரு. எர்பர்ட் சுந்தரம் அவர்கள் காஞ்சியில் மாவட்ட நீதிபதியாக **(District Munsiff)** இருந்த போது நான் அவர்களோடு நெருங்கிப் பழகினவன். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நான் காஞ்சியில் இருந்த போது அவர் பழக்கம் நேர்ந்தது. அவர்தம்

பண்பும் தமிழ்ப்பற்றும் சமய உள்ளமும் என்னை அவர்பால் ஈர்த்தன. பின் பல ஆண்டுகள் கழித்து அவர் மகனான-உயர்நீதி மன்ற நடுவரை-மாண்பமை நயனார் சுந்தரம் அவர்களை- 'நிர்வாண்' நிறுவனராகச் சென்னையில் கண்ட போது, தந்தையைப் போன்றே தொண்டு மனப்பான்மையும் தூய உள்ளமும் பற்றற்ற வாழ்க்கை நெறியும் கொண்ட இவர்தம் சிறப்பினை அறிந்தேன். எனவே முன்பும் பலமுறை 'நிர்வாண்' சங்கத்தில் பேசியுள்ளேன். இன்றைய பேச்சுகளை நூலாகக் கண்ட அவர்கள் மகிழ்ந்தார்கள். அவர்களையே ஓர் முன்னுரை தருமாறு வேண்டினேன். தந்துள்ளார்கள். அவர்களுக்கு என் நன்றி உரித்தாகுக! பிற நிர்வாண் சங்க உறுப்பினருக்கும் நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டுள்ளேன். நான்கு வாரங்களிலும் நடைபெற்ற கூட்டங்களுக்கு வந்து வாழ்த்தி ஊக்குவித்த அனைவருக்கும் நன்றி.

இச்சொற்பொழிவுகளுக்கு உரிய குறிப்புகளைச் சேர்த்தபோதும் அச்சிடும்போதும் பலவகையிலும் நன்கு பிழைத்திருத்தியும் உதவிய பச்சையப்பன் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் திரு. டாக்டர். சா. வளவன் அவர்களுக்கும் என் நன்றி உரித்து.

இந்நூலுக்கு மூலப்பொருளாய் நின்ற அம்மையையும் அப்பனையும் வணங்கி, வழிபட்டு, அவர்கள் வழி அண்டங்கள் நலம் பெற வேண்டுமென வேண்டி, அனைவரையும் வணங்கி, இந்த நூலை இன்று உங்கள் முன்-நாட்டில் உலவ விடுகிறேன். ஏற்று நலம் காண வேண்டுகிறேன்.

பணிவுள்ள,

சென்னை-102.
11—6—94

**அ. மு. பரமசிவானந்தம்**
நிறுவனர்
வள்ளியம்மாள் கல்வி அறம்.

# நிர்வாண சொற்பொழிவுகள்

## (ஆகஸ்டு 1993)

## உள்ளே


| | பக்கம் |
|---|---|
| முன்னுரை | 3 |
| நூல் முகம் | 5 |
| அம்மை அடித்தால் | 9 |
| அப்பன் அடித்தால் | 45 |
| இருவரையும் பெற்ற ஆன்மா | 87 |
| அண்டத்தின் சுழற்சி | 125 |


---

**உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவன்**
**நிலவுலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் (என்) அம்பலத்து ஆடுவான்**
**மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்**

*(சேக்கிழார்)*

**உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்**
**நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா**
**அலகிலா விளையாட் டுடையார் அவர்**
**தலைவர் அன்னவர்க்கே சரண் நாங்களே!**

*(கம்பர்)*

ஸ்ரீ முருகா
நிர்வாண சொற்பொழிவு (1) 4–8–93

# அம்மை அடித்தால்

பெரியோர்களே! அன்னையரே! வணக்கம்.

நிர்வாண சங்கம் நெடுநாட்களாகப் புதன்கிழமை தோறும் பல அறிஞர்களைக் கொண்டு இங்கே பற்பல சிறந்த பொருள்களைப் பற்றிப் பேசவைத்து, உங்களுக்கு நலம் செய்கின்றது. அதிலும் திங்களுக்கு ஓர் அடிப்படைப் பொருளும்—மூலப்பொருளை அமைத்து, அதைப் பல கிளைகளாக்குவித்து, மாதந்தோறும் வரும் புதன்கிழமைகளில் விளக்கமுறச் செய்கின்றது. அந்த மரபின் நெறியின்—வரிசை வகையில் இந்த 1993ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்களில் நான்கு புதன்கிழமைகளிலும் பேச நான் உங்கள் முன் நிற்கின்றேன். பொருளோ மிகப் பெரிது. அதன் அணுத்தன்மை அளவினைக்கூட என்னால் எடுத்துக் காட்ட இயலாது என்பதை அறிவேன். 'அம்மையும் அப்பனும்' என்ற அத்தலைப்பில், காலமும் கணக்கும் எல்லையும் பிற வரையறை அனைத்தையும் கடந்த அம்மை அப்பரைக் காண முயலுகின்றேன். சிறு குழந்தை கடற்கரையில் கையில் ஒட்டிய மணலை எண்ண முயன்று, கடற்கரை மணலை எண்ணிக் கணக்கிடுவேன் என்று கருதும் வகையில் என் பேச்சுக்கள் அமைகின்றன. 'அம்மை அடித்தால்', 'அப்பன் அடித்தால்' 'இரண்டையும் பெற்ற ஆன்மா', 'அண்டத்தின் சுழற்சி' என்ற நான்கு தலைப்புக்களில் பேச்சுக்கள் அமையும். எல்லாச் சமயங்களும் ஏற்ற 'முப்பொருள் உண்மை' என்ற தத்துவத்தின் அடிப்படையில், சிவன், அதனுடன்

ஒரு மாத்திரை கூடிய 'சீவன்', அவற்றின் நிலை உணர்த்தும் அண்டம் எனும் மூன்றினையும் பதி—பசு—பாசம் என்ற மூன்றினையும் விளக்கி, அதன் வழி நாம் வாழ வேண்டிய வகையினை விளக்குவதே என் கடமையாக அமைகின்றது. அன்று தொட்டு இன்று வரையில் எச்சமயத்தோடும் சொல்லி விளக்கிய பொருள்கள் இவை—அறுதியிட முடியாதவை—என்றும் அழியாதவை. இவை; பற்றி நான் விளக்குவது ஒருபுறமாயினும், இது வரை விளக்கிய பல பெரியோர்தம் பாடல்கள், சொற்கள், தொடர்கள் இவையே பெரும்பாலும் எனக்கு உடன் நின்று உதவின. அவற்றின் வழியேதான் நான் என் இம் மாதத்துக்கு உரிய நான்கு பொருள்களைப் பேச இருக் கிறேன். பிழையுளதேல் பொறுத்து ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன்.

பெரியோர்களே !

இன்றைய தலைப்பு 'அம்மை அடித்தால்' என்பதாகும். 'அம்மை அல்லது அன்னை என்பவர் யார்' எனக் காணு முன் இப்பொருளின் இயல்பும் இணைப்பும் காணல் பொருந்துவதாகும். எனக்கு 'நிர்வாண்' எழுதிய முதல் கடிதத்தில் அப்பனைப் பரப்பிரமம் என்றும் அன்னையைப் பிரகிருதி என்றும் அண்டம் அம்மையும் அப்பனும் ஆடும் இடம் என்றும் குறித்திருந்தனர். ஆயினும் அப்பன் பரப்பிரமமாக மட்டும் இருப்பவன் அல்லன்; அம்மையும் பிரகிருதியாக மட்டும் இருப்பவள் அல்லள். அவர்கள் இருவரும் யாண்டும் இணைந்து நீக்கமற நிறைந்து நிற்பதால் அண்டத்தினை அவர்கள் ஆடும் இடங்களில் ஒன்றாகக் கொள்ளலாம். தாய் அல்லது அன்னை என்பவள் தோற்ற மூலமாக இலங்குகிறாள். 'பிரகிருதி' என்பது உலகத்தோற்ற மூலமாகிப் பின் உலகுக்கும் பொருந்துவதாகின்றது. 'The Positive case of the world' என்று ஆங்கில அகராதி அதற்கு விளக்கம் தரும். 'Mother' என்ற தாயினைக் குறிக்கும் ஆங்கிலச் சொல்

'Ma' என்ற வேர்ச்சொல்லிலிருந்து அள அல்லது ஆக்கு (to measure or make) என்ற பொருள் தரும் நிலையில் பிறந்தது என்பர். 'மாதா' என்ற வடமொழிச் சொல்லும் அத்தகைய பொருளோடு மேலும் சிறந்த வகையில் பொருள் கொள்ள அமைவது என்பர் அறிஞர். ஆங்கிலமும் வடமொழியும் (Indo Europeon Languages) இந்தோ ஐரோப்பிய குடும்பத்தில் சேர்ந்தன எனவும் அவற்றுள் முன்னதாகிய வடமொழியில் உள்ள 'மாதா' என்பதே ஆங்கிலத்தில் மதர் 'Mother' என அமைந்ததெனவும் கூறுவர். எல்லாச் சமயங்களும் எல்லா நாடுகளும் அன்னைக்கு முதலிடம் கொடுக்கின்றன. ஆம்! அவளின்றி வாழ்வு ஏது?

இறைவனைப் பாடும் அடியவர்கள் அவனைப் பெற்றவர்களாகவே காண்கின்றனர். அப்பர் அடிகளார் 'ஈன்றாளுமாய் எனக்கு எந்தையுமாய் உடன் தோன்றினராய், மூன்றாய் உலகம் படைத்து உகந்தான்' என்றும்

'அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ என்
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஓரூரும் நீ'

என்றும் பாடுவர்.

மணிவாசகர்,

'அம்மையே அப்பா ஒப்பிலா மணியே
அன்பினில் விளைந்த ஆரமுதே'

என்றும்,

'தாயாய் முலையைத் தருவானே'

என்றும்,

'தாதாய் மூவாழ் உலகுக்கு தாயே'

என்றும் பாடுவர்.

சடகோபர் பெரிய திருவந்தாதியில்

'பெற்றதாய் நீயே பிறப்பித்த தந்தைநீ
மற்றையார் ஆவரும்நீ'

என்று காட்டுகிறார்.

அம்மை உலகை உய்விக்கும் திறனை—தாயாய் உண்டாக்கும் திறனைச் சேக்கிழார் வாழ்வைப் பாட வந்த உமாபதி சிவனார் காஞ்சியில் அவள் அறம் வளர்க்கும் தன்மையைச் சுட்டிக் காட்டுகிறார்.

'விளைகழநி பூலோகமுழுதும் ஏரி
விரிதிரை நீர்க்கடல், வருணன் கம்புகட்டி
கிளர் கலப்பை தரு உமையாள் சுவேதராமன்
கிடா மறவசத் தரசன் வசத்தாள் என்றிங்கு
அளவறிந்து ஆண்டாண்டு தொறும் விதை
தப்பாமல்
அளக்கும் அவள் கச்சி அறம் வளர்த்த மாதா
ஒளிபெருகு கொழுமிகுதி எறும்பு ஈறான
உயிரனைத்தும் தேவரும் உண்டு உவப்பார்
அன்றே.

என்று கச்சிப்பதியில் நாழிநெல் கொண்டு நானில முழுதுக்கும் உணவு தரும் அன்னை காமாட்சியாகக் காட்சி தருவதைக் காட்டுகின்றார். கச்சியில் காமாட்சி அம்மன் சன்னதித் தெருவினை அடுத்து, அறப்பெருஞ் செலவித் தெரு இன்றும் ஒரு தெருவாக அமைந்திருப்பதை அனைவரும் அறிவர்.

இத்தகைய மூலத்துக்கு மூலமாகிய அன்னை உயிர்களை எப்படி ஓம்புகிறாள் என்பதைத் தாயுமானவர் தெள்ளத் தெளிய விளக்குகின்றார்.

'காரிட்ட ஆணவக் கருவறையில் அழிவற்ற
கண்ணிலாக் குழவியைப் போல்

கட்டுண்டிருந்த எனை வெளியில் விட்டு அல்லலாம்
காப்பிட்டு அதற்கிடைந்த
பேரிட்டு மெய்யென்று பேசுபாழ் பொய்யுடல்
பெலக்க வினை அமுதமூட்டிப்
பெரிய புவனத்திடை போக்கு வரவுறுகின்ற
பெரிய விளையாட்டு இசைத்திட்டு
ஏரிட்ட தன்சுருதி மொழிதப்பில் **நமனைவிட்டு
இடர்உற ஒறுக்கி இடர்தீர்த்து**
இரவுபகல் இல்லாத பேரின்ப வீட்டினில்
இசைந்து துயில் கொள்மின் என்று
சீரிட்ட உலகன்னை வடிவான எந்தையே
சித்தாந்த முத்தி முதலே
சிரகிரி விளங்கவரு தக்கிணா மூர்த்தியே
சின்மயா னந்த குருவே'

என்பது அவர் அன்னையை நமக்குக் காட்டும் பாடல். இங்கே யாண்டும் நிறைந்த பராபரை உலகன்னையாக நம்மை எப்படி ஓம்புகிறாள் என்பதை அவர் விளக்கு கிறார். நன்றாக வளர்க்கின்ற அன்னை குழந்தை தவறு செய்தால் பொறுக்கமாட்டாள். வருங்காலத்தின் தன் மகன் வளமான வாழ்வினைப் பெற்றுச் சான்றோனாக விளங்க வேண்டும் என ஆசை கொண்டு அன்போடு வளர்க்கின்ற தாய், அவன் தவறு செய்தால் பொறுப் பாளோ? 'ஈன்ற பொழுதில் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன் எனக் கேட்டதாய்' என்று வள்ளுவர் தாய் உள்ளத்தை விளக்கிக் காட்டுகின்றாரே! ஆம்! அதனாலே அவன் தவறு செய்தால் 'நமனை விட்டு ஒறுக்கி' என் கின்றார் தாயுமானார். ஆனால் அவனை—அவ்வுயிரை இடர்தீர்த்து இராப்பகலன்ற இடத்தே—இறைவனொடு இரண்டறக் கலக்கும் இன்ப நிலையில் வைப்பார் என்று அவள்தன் **அறக் கருணையாக** அமைவதைக் கடைசியில் காட்டுகின்றார். எனவே அம்மை அடிக்கிறாள் என்றால் அது அறக்கருணையாக மலர்ந்து உயிர்களை உய்விப் பதே எனக் கொள்ளல் வேண்டும்.

இனி, அன்னை வேறு அத்தன் வேறா என்ற வினா எழும். இருவரும் ஒருவரே என்ற உண்மை மேலே காட்டிய அடியவர்தம் பாடல் வழியே தெளிவாகும். எனினும் இரண்டாகக் கூறுவது ஏன்? இறைவன் ஒருவனே. அவன் ஆற்றலையே—சக்தியையே அன்னை என்று அழைப்பர். இந்திய நாட்டுப் பழம்பெருஞ் சமயங்கள் அனைத்தும் இந்த நெறியினைப் பற்றி வாழ்வனவே. நம் நாட்டுத் தெய்வங்களும், அவற்றின் வழிபாட்டு அமைப்புகளும் இவ்வுண்மையினையே காட்டுகின்றன. சிவபெருமான் சக்தியினை உடலில் பாதியாகவே கொண்டுள்ளார்; திருமால் உயிர்களமாகிய மார்பிடைக் கொண்டுள்ளார். சொல்லிச் சொல்லி உயிர்களை—பிறவற்றை—பிறக்க வைக்கும் பிரமனோ அச்சொல்லின் பிறப்பிடமாகிய நாவிடையில் கொண்டுள்ளான். இவ்வாறு மும்மூர்த்திகளும் தாம் வேறு சக்தி வேறு என்று பிரித்துக் காணா வகையிலே அமைகின்றனர்; அமைந்து அருள் புரிகின்றனர். எனினும் உயிர்கள் நலம் கருதி—உயர்வு கருதி இரு நிலைகளும் பிரிந்து காணும் நெறியினையும் நாம் காண்கின்றோம். சூரபன்மனை அழிக்குமாறு தேவர்கள் வேண்ட, 'வரமளித்த யாம் அழிப்பது முறையன்று' எனக் கூறி, தன் சக்தியையே வேலாக்கி முருகனிடம் இறைவன் தந்தான் என்பது புராண வரலாறு. அப்படியே பார்வதியாகவும், தாட்சாயணியாகவும், மீனாட்சியாகவும் அம்மை விண்ணிலும் மண்ணிலும் தோன்றி வளர்ந்த வரலாறுகளையும் காண்கின்றோம். எனவேதான் நம் தொடரிலும் 'அம்மை அடித்தால்' என்றும், 'அப்பன் அடித்தால்' என்றும் **இருவகை நிலையில்** நிகழ்ச்சி அமைத்துள்ளோம். வள்ளலார் அம்மையப்பனாகவே ஆண்டவனைக் காணுகின்ற நிலையில், தன்னை 'அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்' என்று கேட்டுக் கொள்ளுகின்றார். ஆம்! தாய் அடித்தால் தந்தை அணைப்பார்; தந்தை அடித்தால் தாய் அணைப்பாள் ஆனால் தனக்குத் தந்தை

யாகவும் தாயாகவும் அம்பலவன் ஒருவனே உள்ளமை யால் அவன் அடிப்பதை நிறுத்தி, அல்லல் நீக்கி, அழியா இன்பம் தந்து அணைத்திட வேண்டும் எனக் கூறு கின்றார். இதோ அவர் வாக்கு.

தடித்தவோர் மகனைத் தந்தை ஈண்டடித்தால்
தாயுடன் அணைப்பள் தாயடித்தால்
பிடித்தொரு தந்தை அணைப்பன் இங்கு
எனக்குப் பேசிய தந்தையும் தாயும்
பொடித்திருமேனி அம்பலத்தாடும் புனித
நீஆதலால் என்னை
**அடித்தது போதும் அணைத்திடல் வேண்டும்**
**அம்மையப்பா இனி ஆற்றேன்**

(விண்ணப்பம்—6-ஆம் திருமுறை)

எனவே ஒன்றாய் நின்ற இறைவன் உயிர்கள் பொருட்டு தேவையான காலத்து அம்மையாகவும் அப்ப னாகவும் மாறி மாறிக் காட்சி தருகின்றான். இவ்விரு வருக்கும் உள்ள தொடர்பினை மணிவாசகரும் குமர குருபரரும் நன்கு காட்டுகின்றனர். அப்பனுக்கு அன்னை யாக—மனைவியாக மட்டுமன்றி, தாயாக—தங்கையாக—மகளாகவும் இருக்கின்றார் என்கின்றனர். இதனால் இறைவன் நிலை நம் மனநிலையைக் கடந்து, 'துவாத சாந்த நிலை' என்கின்ற பெருநிலையில் என்னென்ன வகையிலோ இருந்து இந்த அண்டகோளத்தையும் பிற அனைத்தையும் 'படைத்தும் காத்தும் கரந்தும்' அருள் புரிகின்றான் என்ற உண்மையினை நாம் உணர்தல் வேண்டும்.

'கனகமார் கவின் செய்மன்றில்
அனக நாடகற்கு எம்அன்னை
**மனைவி தாய் தங்கை மகள்**'

(சிதம்பர செய்யுட் கோவை)

என்று குமரகுருபரரும்,

மின்னிடைச் செந்துவர் வாய்க் கருங்கண்
வெண்ணகைப் பண்அமர் மென் மொழியீர்!
என்றுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெருமான் இமயான் மக்கட்குத்
தன்னுடை **கேள்வன் மகன் தகப்பன்**
**தமையன்** எம்ஐயன் தாள்கள் பாடிப்
பொன்னுடல் பூண்முலை மங்கை நல்லீர்!
பொற்றிருச் சுண்ணம் இடித்தும் நாமே?
(திருப்பொற்கண்ணம்)

என்று மணிவாசகரும் பாடியுள்ளனர். இதன் வழியே நமக்கு மட்டும்மன்றி இறைவனாகிய அப்பனுக்கும் அவள் தாயாகின்றாள் என்பதை அறிதல் வேண்டும். அதனாலே நக்கீரர் திருமுருகாற்றுப்படையில் அம்மையினை, 'இமையறு சிறப்பில் பழைமோள் குழவி' எனப் பாடிப் பரவிப் பரவசமுறுகிறார்.

இத்தகைய அன்னையானவள் பல்வேறு வகையில் இறைவனைப் பிரியாமலேயே பிரிந்த பாவனையில் வாழ்ந்த வரலாறுகள் பல. அவற்றுள் ஒன்று மதுரையில் தடாதகைப் பிராட்டியராகப் பிறந்து, வளர்ந்து, நாடாண்டு, பின் அனைத்தையும் அப்பனிடம் ஒப்படைத்த வரலாறு. பல நாடுகளையெல்லாம் வென்ற அன்னை மீனாட்சி வடக்கு நோக்கிக் கைலைமலைக்குச் சென்று, சிவனொடு பொர நினைக்கின்றாள். அவள்முன் இறைவன் தோன்ற அவரைக் கண்ட அன்னையின் நிலையினைப் பரஞ்சோதியார் அழகுபடக் காட்டுவார்.

'ஒற்றைலார்கழற் சரணமும் பிரம்பசைத்து
உடுத்த வெம் புலித்தோலும்
கொற்றை வாண்மழுக் கரகமும் வெண்ணீறணி
கோலமும் நூல்மார்பும்

கற்றைவேணியும் தன்னையே நோக்கிய கருணை
செய்திடு நோக்கும்
பெற்ற தன் வலப்பாதியைத் தடாதகைப்
பிராட்டியும் எதிர்கண்டார். (45)

என்று இருவரும் ஒன்று என்ற நிலையினைத் 'தள வலப் பாதி' என்ற தொடரால் விளக்குகிறார். பின் இருவரும் மணப்பந்தலில் அமர்ந்திருந்த நிலையிலும் அவ்விருவரும் பிரிக்க முடியாத ஒருவரே என்பதை உறுதி செய்கின்றார்.

'பண்ணும் இன்னிசையும் நீரும் தன்மையும்
பாலும் பாலில்
நண்ணும் இன்சுவையும் பூவும் நாற்றமும்
மணியும் அங்கேழ்
வண்ணமும் வேறுவேறு வடிவுகொண்டு இருந்தால்
ஒத்தது
அண்ணலும் உலகம் ஈன்ற அன்னையும் இருந்த
தம்மா!

(திருமணம் 174)

என்று பிரிக்க முடியா இருபொருள்களின் நிலைகளை யெல்லாம் விளக்கி அந்த வகையில் அமைந்த அம்மை யப்பர் உருவினை நமக்கு அறிமுகப்படுத்துகின்றார். அவ்வாறு குறிக்கும்போது, அன்னையை உலகம் ஈன்ற அன்னையென்ற தொடரால் விளக்குகின்றார். எனவே இறைவனாகிய பரப்பிரமம் அமைதியாக யாண்டும் நிலவி நிற்க, அவர் கூறாகிய 'சக்தி' எனும் அருளே உலகை ஆக்கி ஆக்கிக் காத்துக் கரந்து அடக்கும் 'பெருஞ்' செயலைச் செய்கின்றது என்பதையும் தெளிய வைக் கிறார்.,

இந்த அன்னையைச் சத்தியமாகவே காண்கின்றான் தருமனின் தம்பி சகாதேவன்,

ஒருமொழி அன்னை வரம்பிலா ஞானம்
உற்பவகாரணன்
தருமமே துணைவன் கருணையே தோழன்
சாந்தமே நல்லூறு தாரம்
அரியதிண் பொறையே மைந்தர் மாற்றிந்த
அறுலரும் அல்லாதார் உறவென்று
இருவரில் இளையோன் மொழிந்தனன் தன்பேர்
இதயமா மலர்க்கிடை எடுத்தே.

(பழம் பொருந்து சருக்கம்)

இதில் அன்னையைச் சத்தியமாகவே காண்கின்றார் வில்லியார். ஆம்! மனிதன் சத்திய நெறியில் நின்று வாய்மையின் வழாது மன்னுயிர் ஓம்பின் இந்த அருட் சக்தியாகிய அன்னை தானே வந்து நம்மைத் தலையளித்து ஆட்கொள்வாள். வியாச பாரதத்தில் இல்லாத ஒன்றைப் புதுமையாகப் 'பழம் பொருந்து சருக்கமாக்கி' ஐவர் உள்ளத்தை அறிய வைத்தார் வில்லியார். இந்த ஐவர் அவர்தம் துணைவியார் ஆகியோர் கூற்றுக்கள், நாம் காணும் பாரதப் போர் நிலையினின்றும் வேறுபட்டு வையம் வாழும் வழியில் வகைப்படுத்தி ஆற்றுப்படுத்துகின்றன. இதுபற்றி இந்த அளவில் நின்று மேலே செல்வோம்.

நாம் அம்மையைப் பல கோணங்களில் கண்டு வாழ்த்துகிறோம். 'பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளை' என்று அன்னையை மணிவாசகர் காட்டுகின்றார். முன் தாயுமானவர் 'மெய் என்று பேசு பாழ் பொய்யுடல் பெலக்க வினை அமுதமூட்டி' என்ற வகையில் மணிவாசகரும் அம்மையைக் காட்டுகின்றார்.

இனி, இறைவன் அம்மையாக அமைகின்ற நிலையிலன்றி, ஒருவரை 'அம்மையே' என அருள்பொங்க அழைத்தார். 'புனிதவதி' என்னும் காரைக்கால் அம்மை

யார், இறைவனால் 'அம்மையே' என்றும் அழைக்கப் பெற்றமையினால்தான் 'அம்மையார்' ஆனார். கயிலை நோக்கி வரும் பேயுருவம் தாங்கிய அவரை யார் என்று பக்கத்திலிருந்த சக்தி கேட்க, இறைவன் பதில் சொல்லுகிறார்,

'வருமிவள் நம்மைப் பேணும் அம்மைகாண்
உமையே மற்றிப்
பெருமைகொள் வடிவுவேண்டிப் பெற்றனர்
என்று பிள்ளை
அருகுவந்து அணைய நோக்கி அம்மையே
என்றும் செம்மை
ஒரு மொழி உலகமெல்லாம் உய்யவே அருளிச்
செய்தார்

(பெரியபுராணம்)

எனவே இறைவனுக்கு முன் காட்டியபடி பார்வதி அன்றி வேறு அன்பால் வழிபட்ட அம்மையும் உளரானார் அல்லரோ!

இனி, இறைவனைக் குழந்தையாக்கிப் பாடியும் பரவியும் பாதுகாத்தும் நிற்கின்ற பக்தர்களும் உள்ளனர். குலசேகர ஆழ்வார் தாமே தாயாகி இராமனையும் கண்ணனையும் தாலாட்டுகின்றார்.

'மன்னுபுகழ் கோசலை தன் மணிவயிறு
வாய்த்தவனே
தென்னிலங்கைக் கோன்முடிகள் சிந்துவித்தாய்,
செம்பொன்சேர்
கன்னிநன்மா மணிமுடிசேர் கணபுரத்தெம்
கருமணியே
என்னுடைய இன்னமுதே இராகவனே தாலேலோ'

என்று இராமனையும்,

'ஆளைநீர் கரும்பு அன்னவன் தாலோ
அம்புயத்தடம் கண்ணினன் தாலோ

வேலைநீர் நிறத்தன்னவன் தாலோ
வேழப் போதக மன்னவன் தாலோ
ஏல்வார் குழல் என்மகன் தாலோ

என்று கண்ணனையும் தாலாட்டுகின்றார். எனவே இறைவன் அப்பனாகவும் அம்மையாகவும் இருப்பதன்றி அவர்தம் அன்பில்பட்டுக் குழந்தையாகவும் ஆகின்றார். பரஞ்சோதியார் தம் திருவிளையாடலில் இறைவன் குழந்தையாகி அழுத நிலையினைத் 'விருத்த குமார பாலரான படலத்தில்' அழகுறக் காட்டுகின்றார்

'எழுதரிய மறைச்சிலம்பு கிடந்து புறத்தலம்ப
அன்பர் இதயமென்னும்
செழுமல ரோடையின் மலர்ந்து சிவானந்தத்
தேன் ததுப்ப தெய்வக்கஞ்சத்
தொழுதரு சிற்றடிப் பெரியவிரல் சுவைத்திட்டு
மைக்கணிர் துளும்ப வாய்விட்டு
அழுதாணையில் கிடந்தான் அனைத்துலகும்
ஈந்து காத்து அளிக்கும் அப்பன்'

என்று இறைவனாகிய சோமசுந்தரக் கடவுள் கௌரி என்னும் பெண்ணின் கையில் குழந்தையாக விளங்கி அழுத தன்மையை விளக்குகின்றார். பின் அக்கௌரி தன் மாமியாரால் தெருவிடைத் தள்ளப்பட்ட பொழுது,

தாயில்லாப் பிள்ளை முகம் தனை நோக்கித்
தெருவினிடத் தளர்வாள் உள்ளக்
கோயிலாக் கொண்டுறையும் கூடல் நாயகனை
மனக்குறிப்பில் கொண்டு மனம் குறிட்டாய் கண்டு
வேயிலாகிய தடந்தோள் கௌரிதிரு
மந்திரத்தை விளம்பலோம்
சேயிலாக் கிடந்தழுத் குழவி விசும்படை
விடைமேல் தெரியக் கண்டார்

என்று காட்டுகின்றார். எனவே இறைவன் தானே அன்னையாவதோடு, அன்பரை அன்னையாக அழைப்பதும் அன்னையாகக் கொள்வதும் உண்டு என அறிதல் வேண்டும்.

இனி இந்த அன்னையே யாவுமாகிறாள் என்பதைப் பாரதியார் காட்டும் வழியில் கண்டு மேலே செல்வோம். அவரே—காளியாகியும் பிற உருவத்தராகியும் தோற்றம் அளித்தும் அவளாக நின்றும் அருள்புரிவதைப் பலப்பல வகையில் பலப்பல பாடல்களில் பாரதியார் விளக்குகின்றார். அவற்றுள் ஒன்றிரண்டினை மட்டும் இங்கே காணலாம்.

'யாதுமாகி நின்றாய் காளி—எங்கும் நீ
நிறைந்தாய்
தீதுநன்மை எல்லாம்—காளி—தெய்வலீலை
யன்றோ!
பூதம் ஐந்து மானாய்—காளி—பொறிகள்
ஐந்துமானாய்
போதமாகி நின்றாய்—காளி—பொறியை
விஞ்சி நின்றாய்
யாதுமாகி நின்றாய்—காளி—எங்கும்நீ
நிறைந்தாய்
தீது நன்மை எல்லாம்—நின்றன்—செயல்கள்
அன்றி இல்லை
போதும் இங்குமாந்தர்—வாழும்—பொய்மை
வாழ்க்கை எல்லாம்
ஆதிசக்தி தாயே—என்றும்—அருள்புரிந்து
காப்பாய்!

என்றும்,

சக்தி தனக்கே அடிமையாக்கு—அது
சத்திய நல் மெய்க் கொடியை நாட்டும்'

என்றும்,

ஆதி பரம்பொருளின் ஊக்கம்—அதை—அன்னை
எனப் பணிதல் ஆக்கம்
சூதில்லை காணும் இந்த நாட்டீர்—மற்றத்—
தொல்லை மதங்கள் தூக்கம்

என்றும்,

'ஓம்சக்தி என்பவர் உண்மையைக் கண்டார்
ஒண்மை கொண்டார் உயிர் வண்மை
கொண்டார்'

என்றும்,

நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணிப் பூண்
பஞ்சுக்கு நேர்பல துன்பங்களாம், இவள்
பார்வைக்கு நேர் பெருந்தீ
வஞ்சனை இன்றி பகை இன்றி சூதின்றி
வையக மாந்தர் எல்லாம்
தஞ்சமென்றே சமைப்பீர் அவர்பெயர் சக்தி
ஓம்சக்தி ஓம்சக்தி ஓம்!

என்றும், பல வகையில் காட்டுகின்றார். 'நன்றே செய்வாய் பிழை செய்வாய், நானோ இதற்கு நாயகமே' என்று மணிவாசகர் கூறியாங்கு பாரதியும் 'தீது நன்மையெல்லாம் உனது தெய்வ லீலை யன்றோ' என்கிறார். பராதியின் பாடல்கள் எளிமையாக உள்ளாமையின், அவர் காட்டிய சக்தியின் தன்மையினை நன்கு உணர்ந்திருப்பீர்கள். இனி மேலே செல்லலாம்.

இத்தகைய அருள் நிறைந்த 'அன்னை அடிப்பாளா?' என்ற ஐயம் எழுதல் இயல்பு. தாய் மகனை அடிக்கிறாள் என்றால் எதற்காக அடிக்கிறாள்? தன் மகன் தவறு செய்தால், அதைத் தவிர்க்க, திருத்த, செம்மைப்படுத்த அடிக்கிறாள் என உலகம் நன்கு அறியும். சாதாரண இப் பிறவியில் அமைந்த தாயே அப்படி என்றால் எப்பிறவிக்கும் தாயாகிய அன்னையின் அடி கருணையின் வயப்

வயப்பட்டதாகவே இருக்கும். ஆம்! இப்பிறவியின் தாய், என்றென்றும் உயிர் பிறக்கும் தொறும் நமக்குத் தாயாக மாட்டாள்.

எனக்குத் தாயாகியாள் என்னை ஈங்கு இட்டுத்
தனக்குத் தாய்நாடியே சென்றாள்—தனக்குத்தாய்
ஆகியவளும் அதுவானால் தாய்தாய்க் கொண்டு
ஏகும் அளித்து இவ்வுலகு'

என்ற பாடலின்படி நம் தாய் தனக்கு வேறு தாயை நாடி வேறு பிறவிக்குச் செல்லுகின்றாள். அவளைப் பெற்ற அந்தத் தாயும் அவ்வாறே அவளுக்கு வேறு தாய் நாடிச் செல்கின்றாள். எனவே நிலையற்ற இந்தத் தாயே தன் மகன் தவறினை அடித்துத் திருத்துகிறாள் என்றால், அனைத்துலகுக்கும் என்றும் தாயாகிய தயாபரி அடிக்கிறாள் என்றால் நாம் திருந்துவதற்குத்தானே? குலசேகர ஆழ்வார்,

அரிசினத்தால் ஈன்றதாய் அகற்றிடினும்
மற்றயர்தன்
அருள்நினைந்து அழும்குழவி அதுவே
போன்று இருந்தேனே

என்கிறார். 'அரிசினம்' பெறுதற்கரிய நல்ல சினம், திருத்த உதவும் சினம், கருணையோடு கூடிய சினம் எனப் பல வகையில் பொருள் கொள்வர். 'ஈடு' இதன் சிறப்பை நன்கு விளக்குகின்றது. அவ்வாறு கருணை உள்ளத்தோடு, தாய் 'தூரே போ' என அதட்டி அகற்றினாலும், அடித்தாலும் அக்குழந்தை, அன்னையின் அருள நினைத்து அழுதுகொண்டே அவளைப் பற்றி நிற்கும் காட்சி உலகில் நாடோறும் நாம் காணும் காட்சியாகும். எனவே குலசேகரர் இந்த உவமையைக் காட்டுகிறார். குழந்தைக்கு தாய் மருந்து கொடுக்கிறாள் என்றால் அதன் கசப்பினைத் தாங்காது குழந்தை அழுவது இயல்பு. ஆனால்

தாய் விடுவாளா? தன் குழந்தை நலமுற்று வாழ வேண்டும் என்பதல்லவா அவள் குறிக்கோள். அன்னை அடித்தாயினும் அம்மருந்தை ஊட்டுவாள். அப்படியே குழந்தை—பெற்ற மகன் பிழை செய்வானேயானால் அடித்துத் திருத்துவாள் நான் ஒரு குடிக்கு ஒரு மைந்தன் ஆயினும் என் அன்னை என்னை அடித்துத் திருத்தி, பின் அணைத்து மகிழ்வாள். ஒருமுறை பெருந்தவறு செய் திருப்பேன் என எண்ணுகிறேன். கரண்டியைப் பழுக்கக் காய்ச்சிக் கையில் சூடும் வைத்தாள். ஆம்! அந்த வடு இன்றும் என் கையில் உள்ளது. அன்று அவர் அப்படிச் சூடிட்ட போது நான் அலறி இருப்பேன். அன்னையைப் பழித்து மிருப்பேன். ஆனால் அவள் அடியும் சூடும்தான் என்னை மனிதனாக்கின. இன்று உங்கள் முன் நின்று பேச வைக்கின்றன.. இன்றேல் எங்கோ எப்படியோ ஊரில் சுற்றித் திரிந்து என்றோ மறைந்திருப்பேன். ஆம்! அவள் தன் அறக்கருணை, மறக்கருணை கலந்த செயல் களை எண்ணியே இன்று அவர் பெயரால் 'வள்ளியம்மாள் அறக்கட்டளை' அமைத்து, பள்ளிகளையும், கல்லூரி யினையும் நடத்தி வருகின்றேன்; அவர்களை நினைந்து 'வெள்ளம் விடு தூது' என்ற நூலினையும் பிற பாடல் களையும் பாடியுள்ளேன். இன்றும் அவர்கள் வழி நடந்த, அவர்கள் வழி ஆண்டவன்—அம்மை அருள் கொழிக்கவே நான் என் செயல்கள் அனைத்தையும் செய்வதாக நம்பு கிறேன், நம்பி வாழ்கின்றேன்.

இறைவா! இதுபோல நீ என்னை அடித்தாலும் தண்டித்தாலும் உன் அருள் நினைத்து உன்னைப் பற்றிக் கொண்டு இருப்பேன் என்கின்றார் ஆழ்வார். அவர்தம் 'திருவித்துவக்கோடு' என்றும் தலத்தைப் பற்றிய பதிகப் பாடல் ஒவ்வொன்றும் இத்தகைய உவமை காட்டி, உற்ற இறைவனைப் பற்றி வாழும் உயிர்த் தன்மையைச் சுட்டுவதாகும். எனவே இப்பிறவியில் வந்த அன்னை யிலும் ஆயிரமாயிரம் மடங்கு உயர்ந்த, என்றும்

அணைக்கும் அன்னையாகிய பழையோள் அடிக்கிறாள் என்றால் அவள் அருள் கருதியன்றே அது அமையும். இனி அவள் அவ்வாறு அடித்தடித்து அக்காரம் தீட்டிய அருள் செயல் ஒன்றிரண்டு கண்டு அமைவோம்.

நாடு முழுவதும் இன்று இருபெரும் விழாக்களைக் கொண்டாடுகின்றோம். அவற்றுள் ஒன்று புரட்டாசியில் வரும் நவராத்திரி. மற்றொன்று அடுத்த ஐப்பசியில் வரும் தீபாவளி. இவை இரண்டும் நாடு தழுவிய பெருவிழாக் களாக (National Festivals) கொண்டாடப் பெறு கின்றன. இது ஏன்? இரண்டும் அம்மையின் சீற்றத்தினை யும், அவள் மறக் கருணையினையும், அழித்து அருள் செய்த திறனையும் காட்டுவதோடு, அச்செயல் என்றென் றும் நாட்டில் நினைவுற்று—நிலைபெற்றிருக்க நினைத் தாள் என்பது தேற்றம். கொடுமை செய்த மகிஷா சூரனைச் சம்மரித்து, மகிஷாசூரமர்த்தனியாக அன்னை காட்சி தருகிறாள். அவன் ஆண்ட நாடு இன்றும் 'எருமை நாடு' என்றே அழைக்கப் பெறுகின்றது. எப்பொருளும் அழிவதில்லை என்ற கோட்பாட்டின்படி மகிஷாசூரன் பூத உடல் நிலை கெட்டாலும், அவன் உயிர் அன்னையின் அடியில் ஒன்றி, அவன் அன்னை யுடன் போரிட்ட நாள்களையும் அவன் அவள் அடி அடைந்து, நலமுற்ற நாட்களையும் . என்றென்றும் நமக்கு நினைவூட்டிக் கொண்டிருக்கின்றதல்லவா! பெரு வரம் பெற்ற அவனை நிலைகுலையச் செய்ய, மற்றவர் சிந்தித்த போது, அன்னையே காளியர்கி—துர்க்கை யாகி—மகிஷாசூரமர்த்தனியாகி, அபயம் கொடுத்து— நலம் கண்டு நானிலத்தை வாழச் செய்து, அந்நாட்களை யும் விழா நாட்களாகக் கொண்டாடச் செய்தனள்.

தீபாவளியும் அப்படியே! நரகாசூரன் பெற்ற வரத் தால் நாட்டில் பேரிடர் இழைக்க, அவனை நிலைமாற்றித்

அ—2

தன் நிழல் அமைக்க, அன்னை திருவுளம் கொண்டு வெற்றி பெற்ற நாளே தீபாவளி. அவன் தன் பெயரும் அன்னையின் அருளும் என்றென்றும் நிலைக்க வேண்டும் என வரம் வேண்ட, அப்படியே 'நரக சதுர்த்தசி' என்று அந்நாளை அமைத்து, உலகம் உள்ளளவும் அன்னையின் அருள் கருணை விளங்கச் செய்த சிறப்புப் போற்றுதற் குரியதன்றோ! ஆம்! அந்நாளில் அவன் அழியவில்லை; அன்னையின் கழலடைந்து என்றென்றும் நாமெலாம் நினைக்க வாழ்கின்றான். முன்கண்ட மகிஷாசூரனும் அப்படியே! அவன் வாகனமாக அமைந்து, அவள் ஊர்ந்து உலாவரும் நிலையில் அன்னையுடன் ஒன்றியே வாழ்கின்றான். எனவே அன்னை அடித்தாலும் அதனால் அடிபட்டவருக்கு மட்டுமன்றி அவனி முழுதுக்குமே நலம் விளையும் என்பதை எண்ணி மகிழ வேண்டுமன்றோ!

இனி அன்னையின் சீற்றம் பற்றியும், அடித்தலைப் பற்றியும் முடிவில் கருணை பொழிவதைப் பற்றியும் இரண்டொரு நிகழ்ச்சிகளைக் காணலாம்.

அம்மை தக்கனுக்கு மகளாகப் பிறந்து தாட்சாயணி என்னும் திருப்பெயரோடு இறைவனைக் கலந்தாள். எனினும் தக்கன் சிவனோடு மாறுபட்டான். சிவனை எதற்கும் ஒதுக்கினான் அவன் ஒரு பெரும் யாகம் செய்தான். அதற்குச் சிவனைத் தவிர, மற்றவர் அனைவரையும் அழைத்தான் சிவன் அதுபற்றிக் கவலைப்படவில்லை. ஆனால் உமையோ தன் தந்தையின் யாகத்துக்குச் செல்ல விழைந்தாள். இறைவன் மறுத்தும், அன்னை செல்ல இசைந்தமையால் 'செல்லுக' என்று அனுப்பினான். இருவருக்கு மிடையே என்ன நடக்கப் போகும் என்பது தெரியும். அதுதானே இறைத்தன்மை. எனினும் உமை அப்படிச் செல்ல விழைந்தமைக்குக் காரணம் இறைவனின்றி யாகம் நடைபெறக் கூடாது என்பதேயாகும். அதைத் தடுக்கத் தான் ஒரு காரணமாக— கருவியாக விளைப்பட்டாள்; அவ்வளவே!

தக்கன் யாகம் செய்யுமிடத்தில் அன்னை சென்ற போது அவன் ஏறெடுத்தும் காணவில்லை; மதிக்கவில்லை; பேசவும் இல்லை!

உடனே அன்னை சீற்றமுற்றாள். அவள் சீற்றத்தினைக் கந்தபுராணம் காட்டிய வழி நம்மை நடுங்க வைக்கிறது. அம்மை சீற்றங்கொள யாவும் நடுங்கின—நலனழிந்தன.

'சீற்றமாய தீச்செல உயிர்ப்பொடே
காற்றினோ டழல் கலந்த தாமென
தோற்றி அண்டமும் தொலைவில் ஆழியும்
மாற்ற வானெழீஇ மல்கி ஓங்கவே.

(உமைவரு படலம் 30)

பாரும் உட்கின பரவு பௌவமும்
நீரும் உட்கின நெருப்பும் உட்கின
காரும் உட்கின கரிகள் உட்கின
ஆரும் உட்கினர் அமரரா யுளோர்.

(உமைவரு படலம் 40)

அருகிருந்த தோழி கருணையே வடிவான அன்னைக்கு இச்சீற்றம் பொருந்துமோ எனக் கேட்கின்றாள்.

'ஞாலம் யாவையும் நல்கும் உன்றனுக்கு
ஏலு கின்றதோ இனைய சீற்றமே'

(உமைவரு படலம் 41)

என்பது அவள் வாக்கு. மேலும் நீயே சீற்றம் கொண்டால் உய்யார் யார்? உதவுவார் யார் என்று கேட்கின்றாள்.

'மைந்தர் யாரையும் வளங்கள் தம்முடன்
தந்து நல்கிய தாய் சினங்கொளா
அந்த யாற்றுவான் அமைந்துளாய் எனில்
உய்ந்திடும் திறம் உண்டு போலுமால்'

(உமைவரு படலம் 43)

என்கிறாள்.

அருள் உருவாய அன்னையார் உடன் சீற்றம் தணிந்து திரும்பிச் சென்று சிவனிடம் முறையிடுகின்றாள். அவரோ அடிக்கத் தொடங்கி வீரபத்திரனை உண்டாக்கி யாக சாலைக்கு அனுப்புகிறார். அவன் செய்த அழிவு எல்லையற்றது (வேண்டுமாயின் அப்பன் அடித்தால் என்ற தலைப்பில் சிறிது காணலாம்.) எல்லாரையும் அழிக்க, திருமால் அவன் முன் வந்து கேட்க,

'எல்லை இல்லாதோர் பரமனை இகழ்ந்தவன்
இயற்றும்
மல்லல் வேள்வியில் அவிர் நுகர்ந்தோர்க்
கெலாம் மறைமுன்
சொலலும் தண்டமே புரிந்தனன்; நின்னையும்
தகைப்பான்
வல்லையேல் அதுகாத்தி என்றனன்
உமை மைந்தன்'

(யாகம் அழி படலம் 105)

என்று பதில் கூறுவதாகக் கந்த புராணம் காட்டுகிறது.

திருமால் வேண்ட, சிவன் அம்மையுடன் அங்கே காட்சி தருகிறான். இங்கே அம்மையின் கருணை உள்ளத்தைக் காண்கிறோம். உமையம்மையார்தம் தந்தை தமையன்மார் உட்பட அனைவரும் மடிய, மற்றவர்களும் இல்லையாக ஒழிய, யாகசாலையே—ஏன் அந்தப் பக்கமே நிலை கெட்டிருப்பதைக் காண்கிறோம். அவள் எண்ணம் சிவனில்லா யாகத்தை நிறுத்த வேண்டும் என்பதே. ஆனால் வீரபத்திரனின் கோர தாண்டவத்தால் நிகழ்ந்த கொடுமையைக் கண்ட, அவள் உள்ளத்தில் அருள் சுரக்கிறது; கருணை பிறக்கிறது. கணவனை வேண்டுகிறாள்.

முந்தை இவ்வேள்வி முடித்தின
வெஃகியதும்
தந்து முடித்தாய்! தனிவிரகா அன்னையர்

உய்ந்து முறைபோல் உயிர்பெற்று
எழுவகையான்
இந்த வரமும் எனக்கருளாய் எம்கோவே.
(142)

என வரம் வேண்டுகிறாள். இறைவனும் வீரபத்திரன் வழி அனைவரையும் எழுப்புகிறார். எனினும் எல்லாவற்றிற்கும் மூல காரணமாய் நின்ற தக்கனைத் தண்டிக்க நினைத்தார்—அழிக்க அன்று. அவன் தலை காணாமற் போகச் செய்தார். பதிலாக ஆட்டுத் தலையை எடுத்து அவன் உடலில் பொருத்தி வாழ வைத்தார். எழுந்த தக்கன் இறைவனைப் போற்றி வணங்குகிறான்.

'அஞ்சலென்றருள லோடும், அசமுகத் தக்கன்
எங்கோன்
செஞ்சரண் முன்னர்த்தாழ்ந்து தீயனேன்
புரிந்த தீமை
நெஞ்சினும் அளக்கொணாதால்
நினைதொறும் சுடுவதையா
உஞ்சனன் அவற்றைநீக்கி உனதருள்
புரிந்த பண்பால்'
(160)

என்பார் கச்சியப்பர் 'நீர் கிழிய எய்த வடுப்போல மாறுமே சீர்ஒழுகு சான்றோர் சினம்' என்று உலகச் சான்றோரைப் பற்றி ஔவையார் கூறியுள்ளார். உலகுக்கெல்லாம் ஒருவனாய்—ஒருத்தியாய் நிற்கும் அந்த அம்மை அப்பர் சினம்—மக்களைக் காக்கவென முன் எழுந்த கோபம் மாறாதிருக்கும் கொல்! ஆம்! சீற்றத்தோடு, தந்தையாயினும் தவறு செய்தால் தண்டனை உண்டு என்ற உண்மையை உணர்த்த அன்னையார் இந்த விளையாட்டினைச் செய்து, பின் அனைவரையும் உயிர்ப்பித்துக் கருணை காட்டியருளினார்.

இவ்வாறு அளவிலா விளையாட்டுடைய அன்னை யார் சீற்றமும் அடித்தலும் அவனிக்கும் அண்டத்துக்கும் நன்மையாக முடியும் நிலையினை அறிந்த வகையில் அமைய, உலகில் மானுடராக வாழ்ந்த அன்னையர்தம் சீற்றத்தினையும் அதனால் உலகு பெற்ற மாற்றத்தினை யும் ஒரு சிறிதளவு கண்டு இன்றைய விளக்கத்தினை முடிக்கலாம் என எண்ணுகிறேன். உலகில் எத்தனையோ சம்பவங்கள் பெரிதும் சிறிதுமாக நாள்தோறும் நடை பெறுகின்றன—எனினும் அவற்றையெல்லாம் யாரும் ஏட்டில் எழுதி வைப்பதில்லை. நாட்டைக் காக்கும் நல்லரசர்களும், அமைச்சர்களும், பிறரும் தவறுவார் களாயின் அவர்தம் வரலாறு ஏட்டில் இடம்பெறும். சில காலத்துக்கு ஏற்ப மாறுபடுவதும் உண்டு. ஆங்கிலேயர் காலத்தில் நிகழ்ந்தவற்றை—அன்று எப்படி எழுதி இருந் தாலும், இன்று உரிமை பெற்றபின் மாற்றி எழுத வேண்டும் எனச் சிலர் கூறுகின்றார்க ளல்லவா? அந்த வகையில் மாற்றம் பெற்றோ பெறாமலோ சில பல நூற்றாண்டுகளுக்கு முன் எழுதிய வரலாற்று இலக்கியங் கள் நமக்கு அக்காலத்திய நாட்டு நிலையினை நன்கு உணர்த்துகின்றன. அவற்றுள் வடநாட்டுக் காப்பி யங்கள்—தமிழில் மொழி பெயர்த்தவை—இராமாயணமும் பாரதமும், தென்னாட்டில் சிலப்பதிகாரமுமாகும். எனவே இவற்றின் வழியே இரண்டொன்று—அவை தோன்றுவதற்கு அடிப்படைக் காரணமாக அமைந்த இரண்டொரு நிகழ்ச்சியைக் கண்டு அமையலாம். ஆம்! சூதாட்டமும் துகில் உரிதலும் இல்லையாயின் பாரதம் இல்லை. கைகேயி தன் மனம்மாறிக் கேட்ட இரு வரங்கள் இல்லையாயின் இராமாயணம் இல்லை. பாண்டியன் தவறு இல்லையாயின் சிலம்பு இல்லை எனவே இவை காணல்—இந்த அன்னையர்தம் சீற்றமும் அதன் மாற்றமும் காணல் இன்றைய தலைப்பிற்குப் பொருத்த மானதாகும் என எண்ணுகிறேன். எப்படி அன்னை

பார்வதியின் சீற்றமும் செயலும் உலகுக்கும் ஊழிஊழிக் காலமாக மாறிவரும் அண்ட கோளத்துக்கும் கொடுமை யாகத் தோன்றினும் முடிவில் நலம் பயப்பதாக அமை கின்றதோ, அப்படியே இவர்தம் சீற்றமும் முடிவில் நாட்டுக்கு—உலகுக்கு, மறம் நீக்கி அறம் காக்கும் வகையில் அமைகின்றன. அவ்வாறு அமைவதாலேயே அவை என்றும் வாழும் காப்பியங்களாக நிலை பெற்றுள்ளன.

பாண்டவரைச் சூதுக்கு அழைத்த துரியோதனன் அதன் வழி நாட்டையும் பிறவற்றையும் கவர்ந்த பின், பத்தினி திரௌபதியினையும் பணயம் வைக்கச் சொல்லி, அதிலும் அவன் வெற்றி கண்டான். எனவே அவளைத் தன் தம்பி வழி அரசவைக்கு அழைத்து வந்து அவள் துகில் உரிய முயல்கின்றான். கண்ணன் அருளால் அது நிறைவேறவில்லை அந்தச் சபையிலே திரௌபதி கூறுகிறாள், பாரதி தன் 'பாஞ்சாலி சபதத்தில் இதை அழகுற—அவள் உள்ளம் அவதியுறக் காட்டுகின்றான்.

பேயரசு செய்தால் பிணம்தின்னும்
சாத்திரங்கள்
மாயம் உணராத மன்னவனைச் சூதாட
வற்புறுத்திக் கேட்டதுதான் வஞ்சனையோ?
நேர்மையோ?
முற்படவே சூழ்ந்து முடிந்த
பெருஞ்செய்கையோ?
மண்டபம் நீர் கட்டியது மாநிலத்தைக்
கொள்வதற்கோ?
பெண்டிர் தமைஉடையீர்! பெண்களுடனே
பிறந்தீர்!
பெண்பாவ மன்றே ! பெரியவசை
கொள்ளீரோ!
கண்பார்க்க வேண்டும்' என கதறிக்
அழுதாள்

பின் கண்ணபிரான் அருளால் துகில் வளர, தம்பி சோர, துரியோதனன் திகைக்க, சபையில் உள்ள—பீஷ்மன் முதலியோர்—நடுங்கச் சபதம் செய்கிறாள்.

'தேவிதுரௌபதி சொல்வாள்—ஓம்
**தேவி பராசக்தி** ஆணை உரைத்தேன்
பாவி துச்சாதனன் செந்நீர்—அந்தப்
பாவி துரியோதனன் ஆக்கையின் ரத்தம்
மேவிஇரண்டும் கலந்து—குழல்
மீதினில் பூசி நறுநெய் குளித்தே
சீவிக் குழல் முடிப்பேன்யான்—இது
செய்யும் முன்னே முடியேன்'

என்றுரைத்தாள். இங்கேயும் அவள் அன்னை பராசக்தியின் பேரில்தான் ஆணையிட்டு உரைக்கின்றாள். அவள் தலை விரிந்தது—தரணி நலிந்தது—விண்ணும் மண்ணும் அதிர்ந்தன. இதைப் பாரதி,

'ஓமென்றுரைத்தனர் தேவர்—ஓம்
ஓம் என்று சொல்லி உறுமிற்று வானம்
பூமி அதிர்ச்சி யுண்டாச்சு—விண்ணைப்
பூழிப்படுத்தியதாம் சுழற்காற்று
சாமி தருமன் புவிக்கே—என்று
சாட்சி உரைத்தன பூதங்கள் ஐந்தும்
நாமும் கதையை முடித்தோம் இந்த
நானில முற்றும் நல்லின்பத்தில் வாழ்க'

என்று தருமத்தை—தருமனை, உலகத் தலைவனாக்கி இவ்வுலகம் இன்பத்தில் திளைக்க வாழ்த்தி முழக்குகின்றார்.

திரௌபதியின் சபதத்தின் முன் வீமன் மேற்கொள்ளும் சபதத்தினையும் ஈண்டு காணல் ஏற்புடைத்தாகும். பாரதியார்,

'வீமன் எழுந்துரை செய்வான்—இங்கு
விண்ணவர் ஆணை பராசக்தி ஆணை
தாமரைப் பூவினில் வந்தான்—மறை
சாற்றிய தேவன் திருக்கழ லாணை
மாமகளைக் கொண்ட தேவன்—எங்கள்
மரபுக்குத் தேவன் கண்ணன் கழலாணை
காமனைக் கண்ணழலாலே—சுட்டுக்
காலனை வென்றவன் பொன்னடி ஆணை!'

என்று பராசக்தி மீதும் மும்மூர்த்திகள் மீதும் ஆணையிட்டு அவன் கூறுகின்றான்.

'ஆணையிட்டு இஃதுரை செய்வான்—இந்த
ஆண்மையில்லாத் துரியோதன் தன்னை
பேணும் பெருங்கனல் ஒத்தாள்—எங்கள்
பெண்டு துரெளபதியைத் தொடைமீதில்
நாணின்றி வந்திரு என்றான்—இந்த
நாய் மகனாம் துரியோதன் தன்னை
மாணற்ற மன்னர்கள் முன்னே—என்றன்
வண்மையினால் யுத்த அரங்கத்தின் கண்ணே

தொடையைப் பிளந்துயிர் மாய்ப்பேன்-தம்பி
சூரத்துச்சாதனன் தன்னையும் ஆங்கே
கடைபட்ட தோள்களைப் பிய்ப்பேன்-அங்குக்
கள்ளென ஊறும் இரத்தம் குடிப்பேன்
நடைபெறும் காண்பீர் உலகீர்...இது
நான் சொல்லும் வார்த்தை என்
றெண்ணிட வேண்டா
தடை யற்ற தெய்வத்தின் ஆணை—இது
சாதனை செய்க பராசக்தி'

என்று வஞ்சினம் கூறி முடிக்கின்றான். இவ்வாறு இருவர் ஆணைகளும் பராசக்தியின் துணையாகவே அமைகின்றன. உலகில் அநியாயம்—கொடுமை நிகழும் போதெல்லாம் அந்த அன்னையை அழைப்பதே மரபு.

குழல் விரித்தால் இயற்கை மாறும்—போர் நிகழும்—பஞ்சம் பட்டினி உண்டாகும்—பார் நடுங்கும். இவை இன்றும் காணும் நிகழ்ச்சியாகும். (இது பற்றி தனிக் கட்டுரை பின் வருகிறது). எல்லாக் கொடுமைகளும் நிகழும். இதற்குப் பாரதத்தில் இந்த நிகழ்ச்சியும் இனி காண இருக்கும் சிலம்பில் மதுரை எரிந்த நிகழ்ச்சியும் பிறவும் சான்றுகளாகும். துக்க வீட்டில் தலை விரித்து அழுதல் இயல்பே! நாடே இன்று துக்கத்தில் உள்ளது—கொள்ளை, கொலை, குண்டு வெடிப்பு, பாராளுமன்ற—மாநில மன்றங்களில் அடிதடி—இன்னும் சாதி சமயத்தின் பேரால் கொடுமைகள் நிகழ்கின்றன. ஏன்? எங்கும் பெண்கள் தலைவிரி கோலம். ஏனென்று கேட்பாரில்லை. பராசக்தி விரைவில் கேட்டு உரிய தண்டனையை வழங்குவாள்—வழங்கத் தொடங்கி விட்டாள்—ஆனால் நாம் இன்னும் திருந்தவில்லை.

இந்த அன்னை துரௌபதியின் செயலைப் பாரதியார் காட்டியதைக் கண்டோம். இதையே வில்லியார் தம் பாரதத்தில் காட்டிய வகையும் கண்டு மேலே செல்வோம். துரௌபதி கூறுகிறாள்,

'புன்தொழிலோன் யான் இருக்கக்
காட்டியதன்
தொடைவழியே புள்வாய் குத்திச்
சென்றிடுக ஆருயிர் என்று எவரும் வெருவுறச்
சபித்தாள் தெய்வம் அன்னாள்'

(சூது 1195)

என்று அவளைப் பராசக்தி ஆக்கி—ஆம் அவள் சபதம் பலிப்பதனால் அவளை அன்னை பராசக்தியாக்கி—சபதம் செய்ததை வில்லியார் காட்டுகிறார். மேலும் அவள்

'அரசவையில் எனை ஏற்றி அஞ்சாமல்
துகில் தீண்டி
அளகம் தீண்டி
விரைசெய்அளி இளம்படித்தார் வேந்தெதிரே
தகாதெனவே விளம்புவோரை
பொருசமரின் முடிதுணித்து புலால் நாறு
வெங்குருதி
பொழிய வென்றி
முரசறையும் பொழுதல்லால் விரித்த
குழல் இனிஎடுத்து
முடியேன் என்றாள்'

எனக் காட்டுவர்.' அதுகாலை நடந்த இயற்கையின் சீற்றத்தை (இன்று ஒரே வேளையில் நாட்டில் ஒரு பகுதியில் பெருவெள்ளமும் ஒரு பகுதியில் குடிநீரும் இல்லாக் கொடுமையும் வராத இடமெல்லாம் பூகம்பம் வருவது போன்ற கொடுமையும் நிகழ்வதைப் போன்று) எடுத்துக் காட்டுகின்றார்.

'மேகங்கள் வழங்காமல் விண் அதிர்ந்திட்டு
ஊர் கோளும் வெயிலைச் சூழ்ந்து
பூகம்பம் பிறந்து உருவும் அரும்பகலே
விழுந்து உடனே பொய்கை வாடி
யாகம் செய் நெடுஞ்சாலை யின்பாலும்
செந்நீராய் இருந்த வேந்தர்
ஆகங்கள் ஒளிமழுங்கிற்று, 'அவிதா' என்று
அணங்கனையாள் அழுத போதே'
(1200)

என்பது அவர் வாக்கு. இவ்வாறு நாட்டில் உற்பாதங்கள் நிகழ்வதற்கு நாமே—சிறப்பாக ஆளுவோரே காரணமாக அமைகின்றனர் என்ற உண்மையினை இருவரும் எடுத்துக் காட்டியுள்ளனர். 'எவ்வழி நல்லவர் ஆடவர், அவ்வழி

நல்லை வாழிய நிலனே' என்று இதை அன்றே நம் சங்க காலப் புலவரும் பாடிக் காட்டி விட்டார் அல்லவா?

இனி, தமிழ் நாட்டில் தலைவிரித்து சபதமும் ஆணையும் இட்ட அன்னை கண்ணகியைப் பற்றிக் காண்போம். 'குழலும் யாழும் அமுதும் குழைத்த மழலை' மொழி பேசிய அந்தக் கண்ணகி கொடுமை நிகழ்ந்த போது வெடிக்கிறாள் அவள் வாயிலிருந்து சொற்கள் வெடிக்கின்றன.

'மட்டார் குழலார் பிறந்த பதிப்பிறந்தேன்
பட்டாங்கி யானு மோர் பத்தினியே
ஆமாயில்
ஒட்டேன் அரசொடு ஒழிப்பேன் மதுரையும்
என் பட்டிமையும் காண்குறுவாய்'

என்று வெடித்துரைக்கின்றாள். இவ்வாறு அவள் சக்தியாகவே – காளியாகவே— துர்க்கையாகவே மாறி மறம் மாற்றி அறம் உரைக்கப் போகின்றாள் என்பதை முன்னரே இளங்கோவடிகள் வேட்டுவ வரியில் அந்த அன்னையின் அருள் நிலையை நமக்கு விளக்கிக் காட்டுகிறார்.

'ஆனைத்தோல் போர்த்துப் புலியின்
உரிஉடுத்துக்
கானத் தெருமைக் கருந்தலைமேல் நின்றாயால்
வானோர் வணங்க மறைமேல் மறையாகி
ஞானக் கொழுந்தாய் நடுக்கின்றியே நிற்பாய்'

'வரிவளைக்கை வாளேந்தி மாமகிடற் செற்ற
கரியதிரி கோட்டுக் கலைமிசைமெய்
நின்றாயால்

அரி, அரன், பூமேலோன் அகமலர்
மேன்மின்னும்
விரிகதிர்ச் சோதி விளாக்காகியே நிற்பாய்!'

'சங்கமும் சக்கரமும் தாமரைக் கையேந்தி
செங்கண் அரிமால் சினவிடைமெய்
நின்றாயால்
கங்கை முடிக்கணிந்த கண்ணுதலோன்
பாகத்து
மங்கை உருவாய் மறைஏத்தவே நிற்பாய்'

என்று அன்னையின் ஆற்றலையும் அற நிலையினையும் அவள் அருட்சக்தியாகி மூவர் தம் உடனிருந்து படைத்துக் காத்து மறைந்து அருளும் திறத்தினையும் இளங்கோ வடிகள் விளக்கிக் காட்டுகின்றார். பின் பாண்டியன் முன் நிலையில் கண்ணகி கனல் உருவாய் நிற்கும்போது இவ்வன்னையின் சீற்ற உருவிலேயே காட்டுகின்றாள். பாண்டிய மன்னனின் வாயிற்காவலன் இக்கண்ணகியின் தோற்றத்தை அம்மன்னனிடம் கூறும்போது இவ்வன்னை யின் பல்வேறு கோலங்களையே காட்டுகின்றான்.

'அடர்த்தெழு குருதி அடங்காப் பசுந்துணி
பிடர்த்தலைப் பீடம் ஏறிய மடக்கொடி
வெற்றிவேல் தடக்கைக் கொற்றவை அல்லள்
அறுவர்க் கிளைய நங்கை; இறைவனை
ஆடல்கண் டருளிய அணங்கு; சூருடைக்
கானகம் உகந்த காளி; தாருகன்
பேருரம் கிழித்த பெண்ணும் அல்லள்;
செற்றனள் போலும் செயிர்த்தனள் போலும்
பொற்றொழில் சிலம்பு ஒன்று ஏந்தியகையள்'

(வழக்குரை காதை)

என நம் முன் அவளைக் காட்ட நாமும் நடுங்குகிறோம் அவள் தோற்றத்தையும் அது கண்டு பாண்டியன் அழிந்ததையும்,

மெய்யிற் பொடியும் **விரித்த கருங்குழலும்**
கையில் தனிச்சிலம்பும் கண்ணீரும்—
வையைக்கோன்
கண்டளவே தோற்றான் காரிகைதன்
சொற்செவியில்
உண்டளவே தோற்றான் உயிர்'

எனக் காட்டுகின்றார். இவ்வாறு அவனும் நாடும் அழிந்த நிலையினை அன்னையின் தோற்றத்தில் வந்த கண்ணகி மேல் ஏற்றாது விளக்குகிறார். ஆயினும் ஒரு முலை குறைத்த திருமா பனியாகிய அவள் அங்கியக் கடவுளுக்கு ஆணையிட்டு மதுரையை அழிக்கின்றாள். ஆனால், அங்கும் அன்னையின் அருள் சுரக்கிறது. அனைவரையும் அழிக்கச் சொல்லவில்லை.

'பார்ப்பார் அறவோர் பசு பத்தினிப் பெண்டிர்
மூத்தார் இளையோர் எனும் இவரைக்
கைவிட்டுத்
**தீத்திறத்தார்** பக்கமே சேர்க'

என ஆணையிடுகின்றாள். இந்நிகழ்ச்சிகள் எல்லாம் முன்பிறவியின் காரணமே எனக் காட்ட நினைந்து வந்த மதுராபுரிக் காவல் தெய்வமே இச்சீற்றம் தாங்கிய அன்னையின் முன்வர அஞ்சிற்று. பின் வந்து பேசுகிறது.

'ஒரு முலை குறைத்த திருமா பத்தினி
முன்னிலை ஈயாள் பின்னர்த் தோன்றி
கேட்டிசின் வாழி'

என்று வாழ்த்தித் தன் வரவினைக் கூறுகின்றாள். எனவே தெய்வங்களும் அஞ்சும் தெறுகண் உடையவளாய்—

அறம் காட்டி மறம் வென்ற கண்ணகி பின் உலகம் போற்றும் தெய்வமானாள். நம் கடற்கரையிலும் தலை விரித்து ஒற்றைச் சிலம்பேந்திய காட்சி இன்றும் நாம் காண உள்ளதன்றோ! அதைக் கண்டும்கூட நம் பெண் களுக்கு விரித்த கூந்தலை முடிக்க வேண்டும் என்ற உணர்வு தோன்றவில்லையே! இது நாட்டிற்கு இனி வரும் பெருங் கேட்டினை உணர்த்துவதாகும்; உணர்ந்து அரசும் பிறரும் திருந்தினால் உண்டு. இன்றேல்—அந்த அவல நிலையை நான் சொல்ல வேண்டா?

இனி, இத்துணைச் சிறப்பின்றாயினும்—துரௌபதி, கண்ணகி போன்று கடுஞ்சினத்தால் சபதமும்—சாபமும் இடவில்லையாயினும் தன் கணவனைப் பொய்யனாகா திருக்க, தான் பழியேற்று, சீற்றமடைவாள் போலத் தன்னைக் காட்டிய கைகேயிதன் நிலை கண்டு அமை வோம்.

இராமனுக்குப் பட்டம் என்பதை அறிந்த தோழி—கூனி, கைகேயி தன்னுடன் கேகய நாட்டில் இருந்து வந்தவள்—அங்கே நடந்தவற்றையெல்லாம் நன்கு அறிந் தவள், கைகேயியிடம் வந்து 'உனக்கு இடர் வந்துள்ளது' என்கின்றாள். கைகேயியோ 'இராமனைப் பெற்ற எனக்கு இடர் உண்டாகுமோ!' என்று இராமனைத் தன் மகனாகவே கொண்டு, அவன் பட்டமேற்கும் செய்தி யினைக் கூறியபோது பரிசுகளை வழங்குகிறாள். 'நாயக மனையதோர் மாலை நல்கினாள்' என்பார் கம்பர்.

'பராவரும் புதல்வரைப் பயக்க யாவரும்
உலாவரும் துயர்விட்டு உறுதி காண்பரால்
விராவரும் புவிக்கெலாம் வேதமே என
**இராமனைப் பயந்த எற்கு இடருண்டோ'**

என்றாள்.

(மந்தரை சூழ்ச்சி 54)

கூனியாகிய மந்தரை அதனால் அமைதியுறாது, மேலும் கூற வேண்டியவற்றைப் பலவகையில் சுட்டிக் காட்டுகிறாள். இராமனுக்குப் பட்டம் என்றால், கோசலையின் புகழ் ஓங்கும். கைகேயிதன் புகழ் மங்கும் என்றும் இவள் சுற்றத்தாரும் பழிக்கப்படுவர் என்றும் இன்னும் பலவகையினும் பலபல எடுத்துக் கூறுகின்றாள். ஆயினும் அவற்றால் எல்லாம் கைகேயி மனம் மாறவில்லை.

கைகேயிதனைத் தசரதன் மணந்த ஞான்று அவள் தந்தை கேகயனிடம் ஒரு சத்தியம் செய்து தருகின்றான். தனக்குப் பின் கோசல நாட்டைக் கைகேயிதன் மகனுக்கே உரிமையாக்கி, அவள் மகனே ஆளவேண்டும் என வாய்மை கூறுகின்றான். ஆம்! தசரதனுக்குப் பல மனைவியர் இருந்தமையின், கேகயன் தன் மகளை அவனுக்குத் தர இசையவில்லை. எனவேதான் இந்தச் சத்தியத்தை— உறுதிமொழியினைத் தசரதன் தருகின்றான். பின்னரே தசரதன் கைகேயி திருமணம் நடைபெறுகின்றது. இந்த உண்மையினை அங்கு அப்போது உடனிருந்த கூனி அறிவாள். கைகேயியோ இராமன்மேல் இருந்த அளவற்ற அன்பினாலும், கணவனிடம் கொண்ட பாசத்தாலும் இன்று இராமன் பட்டமறிந்து மகிழ்ந்தாள். ஆயினும் அப்பட்டமளிப்பு நடந்திருந்தால் தசரதன் என்றென்றும் சொன்ன சொல்லைத் தவறினான் — வாய்மையினை வழுவினான் என்ற பழிச் சொல் வராதா? பின் வாலியால் 'வாய்மையும் மரபும் காத்து மண்ணுயிர் துறந்த வள்ளல்' என்று எவ்வாறு இவன் சிறப்பிக்கப் பெறுவான்.

தசரதனுக்கு, இராமன் முடிசூட்டிக் கொண்டால் உண்டாகும் பழியும் பாவமும் உலகம் உள்ளளவும் நீக்க முடியாது என்ற உண்மையை மந்தரை உணர்த்திய பிறகே கைகேயி நினைக்க ஆரம்பித்தாள்.

'கெடுத்தொழிந்தனை உனக்கரும் புதல்வனை, கிளர்நீர்
உடுத்த பாரகம் உடையவன் ஒருமகற்கு எனவே
கொடுத்த பேரரசு அவன்குலக் கோமைந்தர் தமக்கும்
அடுத்த தம்பிக்கும் ஆம் பிறர்க்கு ஆகுமோ என்றாள்

என்பது கம்பர் வாக்கு. கைகேயி தன் கணவனுக்கு உலகம் உள்ளளவும் பழிச்சொல் உண்டாவதைக் காட்டிலும், தானே அப்பழியினை ஏற்பதில் தவறில்லை எனக் கருதினாள். கணவனை மாசற்றவனாகக் காட்ட விரும்பினாள்—காட்டி வெற்றியும் பெற்றாள்! ஆம்! அவள் செயலாலேயே தசரதன் 'வாய்மையும் மரபும் காக்கும் வள்ளலாக' இன்றளவும் வாழ முடிகின்றது. என்றும் வாழ்வான்.

மந்தரை, இவ்வாறு சொல்லித்திரிந்த நிலையில் அவள் மனம் மாறிய நிலையினைக் கம்பர்,

'தீய மந்தரை இவ்வுரை செப்பலும் செய்யாள்
தூய சிந்தையும் திரிந்தது!'

என்கின்றார். அத்துடன் அந்த மங்கை நல்லாள் மனம் திரிந்தமையால்தான் அரக்கர் அழிந்தனர்; அசுரர் உய்ந்தனர். அத்துடன் நமக்கும் அரிய செல்வமாகிய இராமாயணம் என்ற பெருங்காப்பியமும் கிடைத்தது என்கின்றார்.

'அரக்கர் பாவமும் அல்லவர் இயற்றிய அறமும்
துரக்க நல்லருள் துறந்தனள் தூமொழி மடமான்'

இரக்கம் இன்மையன்றோ இன்று
இவ்வுலகங்கள் இராமன்
பரக்கும் தொல்புகழ் அமுதினைப்
பருகுகின்றதுவே.

என்று அவளைத் 'தூமொழி மடமான்' என உயர்த்தி, அவள் மாற்றம் அரக்கர் பாவமும் தேவர் அறமுமே காரணமாயினமையும் காட்டுகின்றார்.

இது எவ்வளவு உண்மை. அன்னையாகிய கைகேயி தன் (பொய்ச்) சீற்றத்தால் அரக்கர் அழிய நாடும் உலகமும் உய்ந்தன. நமக்கும் பெரிய இராமகாவியம் கிடைத்தது.

அத்தகைய கைகேயி தன் செயலால் எப்படி வெற்றி பெற்றாள் என்பதைக் கண்டு அமைவோம். அவள் மன்னவன் உயிர் போன்றவள். அவள் வாட அவன் வாழ்வானா! வாடுவான். எனவே அவன் வரும்போது— வந்து அணைத்த போது,

'நின்று தொடர்ந்த நெடுங்கை தனைநீக்கி
மின்துவள் கின்றதுபோல் மண்ணினிடை
வீழ்ந்தான்
ஒன்றும் இயம்பலள் நீடுஉயிர்த்தல் உற்றாள்
மன்றல் அருந்தொடை மன்னவன் ஆவி
அன்னாள்'
(கைகேயி சூழ்வினை 8)

தசரதன் காரணம் கேட்ட போதும், எதுவும் தருவதாகச் சொன்ன போதும்,

'வண்டுளர் தாரவன் வாய்மை கேட்டமங்கை
கொண்ட நெடுங்கண் ஆவிகொங்கை சோர

உண்டு கொலாம் அருள் என்கண்; உன்கண்
ஒக்கின்
பண்டைய இன்று பரிந்தளித்தி என்றாள்'

(கைகேயி சூழ்வினை 10)

என்று தனக்கு முன்பொருகால் தருவதாகிய இருவரங்களையும் தர வேண்டும் எனக் கேட்டுக்கொண்டாள். அவற்றுள் ஒன்றே பரதன் நாடாள வேண்டும் என்பது; மற்றொன்று இராமன் பதினான்கு ஆண்டுகள் வனம் புக வேண்டும் என்பது. இவற்றால் உலகமே தன்னைப் பழிக்குமே என்று அஞ்சவில்லை. தசரதன் மயங்கி வீழ்ந்த போதும், தானே இராமனை அழைத்து, தந்தை கூறியதாகக் கூறி அவனைக் காட்டுக்கு அனுப்புகிறாள். அவள் அதனால் வருந்தவில்லை. கணவன் இறப்பில் வருத்தம் இருப்பினும், அவன் என்றென்றும் பழிநீங்கப் பெற்று பெருமை காத்தவன் ஆவான் என்றே பெருமகிழ்ச்சி கொண்டாள். இந்த உண்மை பரதனுக்குத் தெரியாதல்லவா! அதனால் அவளைப் பின் குகனுக்குப் அறிமுகப் படுத்திய போது,

'இடரிலா முகத்தாளை அறிந்திலையேல்
இந்நின்றாள் என்னை ஈன்றாள்'

என் அறிமுகப்படுத்துகிறான். அவள் இடர்ப்பட வேண்டுவதில்லையே! தன் கணவன் பழி தீர்ந்தான் என்று அவள் உள்ளம் மகிழ்கிறதன்றோ?

இவ்வாறு கைகேயியாகிய அன்னை சீற்றம் காட்டி, அடிப்பது போல் அழுது காட்டி நாட்டிற்கும், அவள் பிறந்த புகுந்த வீடுகளுக்கும் நன்மையே செய்தாள். எனவே நான் மேலே காட்டியபடி இந்த அன்னையின் செயலும் அறத்தோடும் அன்போடும் உலக வாழ்வின் வழிகாட்டியாகவே அமைகின்றது.

இவ்வாறு இந்நாட்டில் மட்டுமின்றி, உலக நாடுகள் பலவற்றிலும், பல சமயங்கள்—இலக்கியங்கள்—வரலாறுகள் காட்டுவது போன்று அன்னையின் ‘சுடிதோச்சி மெல்ல எறியும்’ அடி பற்றிய செய்திகள் பலப் பல உள்ளன. நம் புராண காலங்கள் தொடங்கி, அண்ணல் காந்தியடிகள் காலம் வரை நல்லவர் அடிக்க—அடிபட அதனால் விளையும் பயன்கள் உலகுக்கும், அண்ட வாழ்விற்கும் அரணாக—நலம் பிறப்பதாக அமையும் என்பதை தாம் உணர்ந்ததால் மகிழ்வார்! ஆம்! மகிழ்ந்தார் அப்பர். ‘இன்பமே எந்நாளும் துன்பமில்லை’ என்றும் பாடினார். மணிவாசகர், ‘அடித்தடித்து அக்காரமுன் தீற்றிய அற்புதம்’ என்று இதைப் பாராட்டுகின்றார். நல்லார் அடிக்க நாடு நலமுறும்! அல்லார் செய்தால்—கொடுஞ்சொல் சொன்னால் நாடு என்னாகும்?

இத்தகைய நிலையில்—நெடிது நினைத்துப் பார்க்கையில் மாரி—பராசக்தி—துர்க்கை—காளி—கொற்றவை எனப் பல வகையில் அழைக்கப்பெறும் அன்னையார்—அம்மையார் அடித்ததால் அவனி செழித்தது—செழிக்கின்றது—அண்டம் சுழல்கின்றது—பாவம் நீங்குகிறது—பழி அகல்கின்றது—உயிர் நலமுறுகின்றது அந்த அன்னையின் அங்கமாகிய நம் இலக்கியங்களின் சீற்றங்களும்—அடிகளும் அவ்வாறே நலம் தருகின்றன. அதனாலேயே அத்தகைய அறம் வளர்த்த அன்னையை இமைஅணி சிறப்பிற் பழையோளை, உலகம் போற்றி வணங்குகிறது. கிராமங்களில் மாரியாய் — நகரங்களில் காமாட்சி, மீனாட்சி, விசாலாட்சியாய்—இலக்குமியாய்—பத்மாவதியாய் பல வகையில் இறைவனோடு ஆடல் கொண்டு அருளிய அணங்கு நமக்குக் காட்சி தந்து நம்மை அடித்தும் அணைத்தும் ஆட்கொண்டு அருளுகிறாள். அவள் அருள் வழி நின்று நாம் வாழ வேண்டும். அடித்தாலும் நன்மைக்கே என்று உணர வேண்டும். அடிக்கும் கையால் அணைத்துக் காப்பாற்றுவாள் என்ற உறுதியோடு வாழ வேண்டும். ஆம்! அந்த உணர்வோடு எனை ஈன்ற அன்னையினையும், உலக மாதாவாகிய அன்னையையும் வணங்கி இன்றைய பொழிவினை முடித்துக் கொள்ளுகிறேன்.

(2) 11—8—93

# அப்பன் அடித்தால்

பெரியோர்களே!

'அம்மையும் அப்பனும்' என்ற பொதுத் தலைப்பில் சென்ற வாரம் 'அம்மை அடித்தால்' என்னாகும் எனக் கண்டோம். இன்று 'அப்பன் அடித்தால்' என்னாகும் எனக் காண வேண்டும். நான் அன்றே சொல்லியபடி 'அம்மையும் அப்பனும்' வேறு வேறு என்று கொள்ள வேண்டுவதில்லை என்றாலும் 'அம்மை அப்பனாக' உள்ள இறைவனை இருகூறாக்கி ஒன்றை மூல கர்த்தாவாகவும் மற்றொன்றைச் சக்தியாகவும் கொள்ளுகிறோம். நாம் எப்படிக் கொண்டாலும் இரண்டும் ஒன்றாக உள்ளமை உணர்கின்றோம். இந்த ஈருருவினையும் இறையின் தன்மையினையும் அவன் தம்மை வந்து ஆட்கொண்ட நிலையினையும் வள்ளலார் அழகுறக் காட்டுகின்றார்.

'ஒருமையிலே இருமைஎன உருக்காட்டிப்
பொதுவில்
ஒளிநடம் செய்தருளுகின்ற உபயபதம்
வருந்த
அருமையிலே நடந்து எளியேன்
இருக்குமிடத் தடைந்தே
அணிக்கதவம் திறப்பித்துஎன்
அங்கையிலொன் றளித்து

'பெருமையிலே பிறங்குக நீ' எனத்
திருவாய் மலர்ந்த
பெருங் கருணைக்கடலே நின்பெற்றியை
என்சொல்வேன்
கருமையிலே நெடுங்காலம் கலந்து கலக்குற்ற
கலக்க மெலாம் தவிர்த்து எம்மைக்
காத்தருளும் பதியே'

(4-ம் திருமுறை—அருட்பிரகாச மாலை 33)

சிவன் உடலில் பாதியை உமைக்குத் தந்துள்ளான்; திருமால் மார்பைத் தந்துள்ளான்; பிரமன் நாவைத் தந்துள்ளான். எனவே பிரிக்க முடியாத நிலையில் உள்ள சக்தியைப் பிரித்து, ஆணும் பெண்ணும் இணைந்ததே ஆண்டவன் உருவம் எனக் காண்கின்றோம். கயிலைக் காட்சியினைக் காணச் சென்ற அப்பர் பெருமானை—நாவுக்கரசரை இறைவன் அங்குள்ள குளத்தில் மூழ்கச் செய்தார். அவர் எழும்போது, ஐயாற்றங் கரையில்—திருவையாற்றில் நின்றிருந்தார். எதிரில் கயிலைக் காட்சி அமைந்தது. ஆம்! அக்கயிலைக் காட்சியினை அப்பர், அம்மையப்பராக—ஆணும் பெண்ணுமாகவே காண்கின்றார். 'காதல் மடப்பிடியோடும் களிறு வருவன கண்டேன், 'கோழி பெட்டையோடாடிக் குளிர்ந்து வருவன கண்டேன் 'வரிக்குயில் பேடையோடு ஆடி வைகி வருவன கண்டேன்' என்று பிடியும் களிறும் சேர்ந்த காட்சியை—பெட்டையும் சேவலும் சேர்ந்த காட்சியை—ஆண் குயிலும் பெண் குயிலும் இணைந்த காட்சியினை நமக்குக் காட்டுகின்றார். எனவே யாண்டும் நீக்கமற நிறைகின்ற இறைவன் அப்பனாகவும் அம்மையாகவும் அமைந்து காட்சி தருவதால், நாமும் அவ்வழியில் அன்று அம்மையைக் கண்ட நெறிவழியே இன்று அப்பனைக் காணலாம். 'சக்தியாகிச் சிவமாகித் தனிப்பர முத்தியான முதல்) என்று கூறியபடி முன்னே சக்தியைச்

கண்ட நாம் இன்று சிவனை—அவன் அடித்தலை—அவன் கருணையைக் காண முயல்வோம்.

அப்பன் அல்லது தந்தை யார்? சதகங்கள் ஒருவருக்கு ஒன்பது தந்தையரை அறிமுகப்படுத்துகின்றன. அவர்களுள் பெற்றவன், குரு, வித்தை கற்பித்தவன், அரசன், துயர் தீர்த்தவன், மனைவியைப் பெற்றவன், அஞ்சல் என்றருள்பவன் போன்றோர் தந்தையாகின்றனர் தந்தை என்பதற்கு மூதாதை, தோற்றுவித்தவர், வழிபாட்டுக்குரியவர், முன்னோன், கடவுள் எனப் பல பொருள் உள்ளமையை அறிகிறோம். ஆங்கிலத்தில் ஏறக்குறைய இதே பொருள் தரும் வகையில் 'Father' என்ற சொல் விளக்கப் பெறுகின்றது. **'The word is used of male anchestor more remote than the actural parent'** எனக் குறிப்பர். மேலும் தந்தையாகிய இறைவனைக் குறிக்கும் சொல்லாக இதை **First person of the TRINITY** என்பர். எனவே பெற்ற தந்தை என்பது மட்டுமின்றி வேறு பல உயர்ந்த பொருள்களிலும் இச்சொல் வழங்குகின்றது. நாமும் தந்தை அல்லது அப்பன் என்ற சொல்லை ஆண்டவனைக் குறிப்பதாகக் கொண்டு மேலே செல்லலாம்.

எனக்கு இப்பொருளைத் தந்தவர்கள், அப்பன் பரப்பிரமத்தைக் குறிக்கும் என எழுதி இருந்தனர் என்றேன். அதுவும் ஏற்புடைத்தே. இறைவன் பரப்பிரம்மாகத் தானே இருக்கிறான். 'பரம' என்ற சொல்லுக்கு test, **Most excelent, chief** — திவ்விய—**that which is Force eminent** என அகராதிகள் பொருள் தருகின்றன. எனவே எந்த வகையில் நோக்கினாலும் 'அப்பன்' உயர்ந்தவன், உத்தமன், உயிர்க்கெல்லாம் உதவுபவன், உயிர்க்குயிராய் இருப்பவன் என்பது தெளிவாகும்.

இறைவன் தானே வந்து ஆட்கொண்டு தன்னைத் தந்தையாக, மாமனாக இருந்து அருள் செய்த காட்சிகள் நம்முன் நிற்கின்றன. சண்டேச்சுரர் பசுவின் பாலை

யெல்லாம் தவம் செய்த மணல் இலிங்கத்துக்கு அபிடேகம் செய்ய, அது கண்ட அவர் தந்தை, அச்சிவலிங்கத்தைக் காலால் உதைத்துத் தள்ளினார். அது பொறாத அன்பர் தந்தை என்றும் பாராது அவர் காலை துணித்து இறைவனை அணைக்க, இறைவன் செயலை,

'அடுத்த தந்தை இனிஉனக்கு யாமென்றருள்
செய்து அணைத்தருள
மடுத்த கருணையால் தடவி உச்சிமோந்து
மகிழ்ந்தருள'

என்று சேக்கிழார் அழகுறக் காட்டுகின்றார். அது மட்டு மன்றி இறைவனை வழிபடுவோர்க்கு அருள் செய்யும் பெற்றியினை அவருக்குத் தந்து, தன்மேல் இடும் **திருமாலியமாகிய** அன்பர்சூடும் மலர் இதழ்களை அவருக்கு இட்டு வணங்கி, வரம் பெறுமாறு நம்மையெல்லாம் ஆற்றுப்படுத்துகின்றார்.

குமரகுருபரர் இவர் பெருமையைச் சிதம்பர செய்யுட் கோவையில் நன்கு விளக்குகிறார். தில்லை அம்பலவன் வழியில் வலம் வர, அவனைக் கண்டு மையலுள்ள மகள், அவன் மாலை வேண்டிக் கேட்க, அன்னையார்,

'தன் தந்தை தாள் எறிந்தார்க் கன்றித் தாரா' னென்று கூற, அத்தலைவி பகை நோக்களித்தாள் என்று பாடுகின்றார். ஆக உலகில் யாருக்கும் இல்லாப் பெரு நிலையைத் தானே தந்தையாகி, சண்டேச்சுரருக்குச் **சிறப்பினைத்** தந்துள்ளார் நம் அப்பர். அப்படியே மதுரைச் சுந்தரர் மாமனாக வந்து வழக்குரைத்து, தன் தங்கை யினையும் அவள் மகனையும் காத்தார் எனக் காண்கின்றோம். எனவே அன்புடையாருக்கு அப்பனாய்—மாமனாய்—மற்ற வகையாய் வந்து அருள்புரிவான் என்பதைக் காண முடிகிறது. இத்தகைய அருளுருவாய அப்பனும் அடிப்பானோ! ஆம்! அடிப்பான்! எப்போது? காண்போம்.

அவன் அடிப்பதைக் காணுமுன் அவன் தன்மை யினைக் காணல் ஏற்புடைத்தாகும். அவன் தன்மையைப் பற்றி அன்றும், இன்று தொடக்கத்திலும் ஓரளவு கண்டோம். அவனே அனைத்துமாய் அங்கிங்கெனாதபடி எங்கும் நிறைந்துள்ள தன்மையினை மெய்யடியார்தம் பாடல்கள் வழியே காணலாம்.

'பூதங்கள் ஐந்தாகிப் பொறியாகிப் புலனாகிப்
பேதங்கள் அனைத்துமாய்ப் பேதமிலாப்
பெருமையன்'

என்றார் மாணிக்கவாசகர்.

முன் தாயைப் பற்றிச் சொல்லியது போலவே, இங்கே நம் உலகத் தந்தை நம்மைவிட்டு மற்றொரு தந்தையை நாடிச் செல்வதையும் அந்த மரபு எவ்வாறு தொடர்கிறது என்பதையும் எண்ணிப் பார்க்க வேண்டும்.

'எந்தை தந்தை தந்தை தன்மூத்தப்பன்
ஏழ்படிக்கால் தொடங்கி'

என்றும்

'எந்தை தந்தை தந்தை தந்தை தந்தைக்கு
முந்தை'

என்றும் ஆழ்வார் பாடித் தந்தை உறவு எப்படி எப்படி முறையாகச் செல்லுகிறது எனக் குறிக்கின்றார். இவ்வாறு இந்த உலகத் தந்தை மாறி மாறி வந்தாலும் ஒன்றான தந்தை—அம்மை அப்பனாகிய ஆண்டவன் ஒருவனே என்பதையும் அவன் நம்மை அடித்தும் அணைத்தும் அருள்புரிகின்றவன் என்பதையும் அவன் என்றும் நம்மை விட்டுப் பிரியாமல், என்றும் உடன் இருப்பவன் என்பதை யும் நன்கு உணர வேண்டும்.

ஆணினோடு பெண்ணுமாகி அல்லவோடு
நல்லவாய்
ஊணொடோசை ஊனும் ஆகி ஒன்றலாத
மாயையால்
பூணிபேணும் ஆயனாகி, பொய்யினோடு
மெய்யுமாய்
காணிபேணும் மாணியாய் கரந்துநின்ற
கள்வனே.

(திருச்சந்த விருத்தம் 26)

'பூநிலாய ஐந்துமாய் புனற்கண்நின்ற
நான்குமாய்
தீநிலாய மூன்றுமாய் சிறந்தகால்
இரண்டுமாய்
மீநிலாய நன்றுமாய் வேறுவேறு தன்மையாய்
நீநிலாய வண்ணன் நின்னையார்
நினைக்கவல்லரே!'

(திருச்சந்த விருத்தம் 47)

எனத் திருமழிசைப் ஆழ்வார் பாடியுள்ளார் வேறு வேறு தன்மையாய் என்பதில் ஆழ்வார் ஒளிவிளக்கம் காண்கின்றார். ஆம்! தீயை நீர் அணைக்கும். ஆனால் தீயிலிருந்து நீர் தோன்றுகிறது என்பது அவர் காட்டியுள்ள உண்மையான கருத்து. அப்படியே பெருங்காற்று நெருப்பை அணைக்கும். ஆனால் நெருப்பு காற்றிலிருந்து தோன்றுகிறது. இவ்வாறு ஒன்றினுள் ஒன்றாய் வேறாம் தன்மையாயினும் இணைந்து செயல்படும் ஐம்பூத நிலையை விளக்கி அவற்றில் நம்மை ஆளும் ஆண்டவன் தன்மையைக் காட்டுகிறார். மற்றும் நல்லனவும் அல்லனவும் அவனே என்றும் அங்கங்கே ஒளிந்து நின்று, அடியவர்தம் அல்லல் அறுப்பான்என்றும் பலவகையில் ஆடல் புரிகின்றான் என்றும் அவர் காட்டுகின்றார்.

இறைவனைத் தந்தையாக—அப்பனாக மட்டுமின்றிக் குழந்தையாகக் கொள்வதை முன்னரே காட்டியுள்ளோம். ஈண்டும் ஆழ்வார் பாடல்கள் எண்ணத்தக்கன. இறைவனைக் குழந்தையாகப் பெரியாழ்வார் நினைத்து அவனைத் தொட்டிலில் இட்டுத் தாலேலோ பாடுகிறார்.

'மாணிக்கம் கட்டி வயிரக் கிடைகட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச்
சிறுதொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக் குறளனே தாலேலோ
வையம் அளந்தானே தாலேலோ'

என்பது அவர் வாக்கு. இவ்வாறே 'நந்தகோபன் அணி சிறுவா நான் சுரந்த முலை உண்ணாயே' எனப் பால் உண்ண அழைத்தும், 'தேனில் இயை பிரானே செண்பகப் பூச்சூட்ட வாராய்' என்று பூச்சூட்ட அழைத்தும் மகிழ்கின்றார்.

இனி, நாம் இறைவனை எண்ணுங்கால் அரியாகவும் அரனாகவும் காண்கின்றோம். கம்பரோ 'அரனதிகன் உலகளந்த அரிஅதிகன் என்றுரைக்கும் அறிவிலார்' என வேறுபாடு கற்பிப்போரை அறிவிலார் என்கின்றார். 'அரியலால் தேவியில்லை ஆறன் ஐயாறனாற்கே' என்று அப்பர் இருவரையும் சிவனும் சக்தியுமாகக்காண்கின்றார். பொய்கை ஆழ்வார்,

'ஏற்றான் புள்ஊர்ந்தான் எயில்அடர்த்தான்
மார் படர்த்தான்
நீற்றான் நிழல்மணி வண்ணத்தான்
சாற்று ஒருபால்
மங்கையாள் பூமகளான் வார்சடையான்
நீள்முடியான்
கங்கையான் நீள்கழலான் காப்பு'

என இருவரையும் இணைத்துப் பாடிப் பரவுகின்றார்.

'திரண்டருவி பாயும் திருமலைமேல் எந்தைக்கு
இரண்டுருவும் ஒன்றாய் இசைந்து'

எனத் திருப்பதியில் இணைந்த உருவினைக் கண்டு பாடு கின்றனர். ஆய்ந்து நோக்கில் மணிவாசகர் 'தென்னா டுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி' எனக் கூறியாங்கு எச்சமயத்தோரும் வழிபடும் தெய்வம் ஒன்றேயாகும். நம் தமிழ்நாட்டின் தென்கோடி யில் உள்ள சுசீந்திரம் என்னும் ஊரில் இறைவனைத் தாணுமாலயன்' என்றே அழைப்பர். மும்மூர்த்திகளும் ஒரு மூர்த்தியாகக் காட்சி தருவதால் அப்பெயரிட்டழைப் பர். 'தாணு' சிவனையும் 'மால்' திருமாலையும் 'அயன்' பிரமனையும் குறிப்பனவாம் இவ்வாறே பல இடங்களில் இறைவன் பலவகையில் பேசப் பெறினும் ஒருவனே என்ற உணர்வில் மக்கள் வாழ்ந்து வந்துள்ளனர். இந்த உண்மையினை உணராமையினாலேதான் இன்று நாட்டில் சமயத்தின் பேரால் மாறாட்டங்களும், போராட்டங்களும் நிகழ்கின்றன. பரந்த பாரதம் மூன்றாக்கப்பட்டது. மக்களாகப் பிறந்த நாம் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்ற உணர்வில் வாழ்ந் தால் நாடு நாடாகும்; நாமும் உய்வோம்! எங்கோ சென்று விட்டேன் மன்னியுங்கள்!

இந்த இறைவன்—சிவன் உடலின் ஒரு பாகத்தில் உமையாகிய சக்தியைக் கொண்டுள்ளான் என்று அன்றும் கண்டோம்; இன்றும் கண்டோம். இந்த உருவினைக் கண்ட குமரகுருபரருக்கு ஓர் எண்ணம் உருவாகின்றது. இந்த உமையொரு பாகனை அவன் அல்லது ஒருவன் என்பதா, அவள் அல்லது ஒருத்தி என்பதா என்ற எண்ணம் தோன்றுகிறது. தமிழ்ச் சொற்களை எண்ணிப் பார்க்கிறார். 'ஒருவர்' என்ற சொல் தமிழில் இருவரையும்-இருபாலரையும் குறிக்க இருப்பதைக் காண்கின்றார்.

உள்ளம் மகிழ்கின்றது; உதட்டில் பாடல் உருண்டோடி வருகிறது.

'அருவருக்கும் உலகவாழ்வு அடங்க
நீத்தோர்க்கு
ஆனந்தப் பெருவாழ்வாம் ஆடல் காட்ட
மருஅருக்கன் மதிவளி வான் யமானன் தீநீர்
மண்எனும் எண்வகை உறுப்பின்
வடிவுகொண்ட
ஒருவனுக்கும் ஒருத்திக்கும் உருவென்றால்இவ்
உருவை இஃதொருத்தன் என்கோ
ஒருத்திஎன்கோ
இருவருக்கு உரித்தாக ஒருவர்' என்றோர்
இயற்சொல் இலதெனில்யான் மற்று
என்செய்கேனே

(சிதம்பர செய்யுட் கோவை)

அவர் வாக்கு. இவ்வாறு இருவர் இணைப்பு இருப்பது மட்டுமன்றி எல்லாமாகவும் அவன் இருக்கிறான் என்பதை மேல் இரண்டு அடிகள் காட்டுகின்றன. இவ்வாறாக இறைத்தன்மை பெற்ற அம்மையின் அருள் நலத்தை அன்று கண்டோம்! இன்று அப்பன் அருள் நலத்தைக் காண இருக்கின்றோம்!

இந்த அப்பனாகிய இறைவன் எத்துணை கருணையாளன் என்பதை முன்னர்க் காண்போம். திருவிளையாடலில் 'மாபாதகம் தீர்த்த படலம்' என்றொரு பகுதி உள்ளது. ஒருவன் தாயைப் பெண்டாகக் கொண்டு தகப்பனையும் வெட்டி விட்டு, ஊரை விட்டே மதுரை நோக்கிப் புறப்பட்டான். ஆனால் வழியில் கொள்ளைக்காரர்கள் அவர்களை மறித்து, பொருள்களையும், தாயையும் உடன் கொண்டு, அவனையும் அடித்துத் துரத்தி விட்டனர். அவன் மயங்கி, பீதியுற்று, அழுது, புலம்பி

மதுரையை நோக்கி வருகின்றான். அதைக் கண்ட சொக்கேசன் அவனுக்கு அருள் செய்ய அம்மையோடு புறப்படுகின்றார். அவன் செயல்கண்ட அன்னையார் இத்தகைய கொடுமையாளனுக்கு—மாபாவிக்கு—மாபாதகம் செய்த பாவிக்கு விமோசனம் தருதல் பொருந்துமா என்று கேட்கிறாள். அப்பனோ இப்படி யாதொரு துணையுமின்றி, தன் தவறு எண்ணிப் புலம்பி அலக்கண் உறுபவனுக்கு அருள் செய்வதொன்றே உண்மையான அருள்—காப்பு என்று கூறி, அவன் பாவ நீக்கத்துக்கு வழி காட்டி ஆற்றுப்படுத்துகின்றார். பரஞ்சோதி முனிவர் இந்நிகழ்ச்சியினை அழகுறக் காட்டுகின்றார்.

'ஐயஇக் கொடியோன் செய்த பாவத்திற்கு
அளவில்காலம்
வெய்ய நாலேழுகோடி நரகிடை
வீழ்ந்தானேனும்
உய்வகை இலாதபாவி இவனுக்கென்
உய்யும் தேற்றம்
செய் வகை' என்று கேட்பச் செங்கண்மால்
விடையோன் செப்பும்
(34)

இதற்கு அப்பன் தந்த பதில் அவன் கருணை உள்ளத்தைக் காட்டுவதாகும்.

'அடுபழி அஞ்சா நீசராயினும் நினைக்கின்
அச்சம்
படுபழி அஞ்சான்செய்த பாதகத்
தொடக்குண்டு எங்கும்
விடுவழி இன்றி வேறு களைகணும் இன்றி
வியக்
கடவனைக் காப்பதன்றோ காப்பென்றான்'
கருணைமூர்த்தி.
(35)

என இறைவனைக் கருணைமூர்த்தி என்றே காட்டி அவன் அருள் திறத்தினையும் அவர் வாக்காலேயே நமக்கு விளக்குகின்றார் பரஞ்சோதியார். அது கேட்ட அம்மை யும் அக்கருணை வள்ளலின் விளையாட்டினை வியந்து போற்றுகின்றார்.

நெய்தற் போதனைய உண்கண் நேரிழை
'நீயாதொன்றும்
செய்தற்கும் செய்யாமைக்கும் வெவ்வேறு
செயற்கும் ஆற்றல்
மெய்தக்க **கருணைவள்ளல்** வேண்டிய
வினைஞரேனும்
உய்தக்கோர் ஆதல் செய்வாய் உன்னருள்
விளையாட்டன்றோ'

(36)

என்பது அன்னையின் வாக்கு. இவ்வாறு இறைவன் அருள் செய்யும் ஆடல்கள் பல திருவிளையாடற் புராணத்தும், பெரிய புராணத்தும், பிற இலக்கியங் களிலும் கூறப்பெறுகின்றன. இயேசு பெருமானும் 'நோயாளிக்கு வைத்தியன் தேவை' என்று கூறிப் பாவி களை ரட்சித்தார் என்று விவிலிய நூல் சான்று பகர் கின்றது. அவ்வாறு பிற சமய நூல்களும் சகத் ரட்சக னான இறைவனை எண்ணற்ற வகையில் கருணை வள்ள லாகப் போற்றிப் புகழ்வதைக் காண்கிறோமே!

அப்பனுடைய அருள் நிலையை, கரிக்குருவிக்கும், நாரைக்கும், பன்றிக்கும்கூட அருளிய பண்பைக் காட்டிப் பரஞ்சோதியார் பலவாறு நன்கு விளக்குகின்றார். இவை பற்றியெல்லாம், ஆன்மாவைப் பற்றி அறியும்போது, அடுத்த நாள் விளக்கமாகப் பார்ப்போம். இங்கே, எல்லா உயிருக்கும் கருணை புரியும் அப்பன் அடிப்பானா என்பதை மட்டும் நாம் அறிதல் வேண்டும். 'அடித்தடித்து அக்காரமுன் தீற்றிய அற்புதம் அறியேனே' என்று

மணிவாசகர் கூறியபடி, அவன் அடித்துத் திருத்தி இனிப்பையே அளிப்பான் என்பதை உணர்ந்தால் அவன் அடியையே நாம் நாடி நிற்போம். 'களிப் பெலாம் மிகக் கலங்கிடுகின்றேன், கயிலை மாமலை மேவிய கடலே' என்று மணிவாசகரே காட்டியபடி இன்பம் வரின் கலங்கி, துன்பம் வரின் சிரிப்புடன் ஏற்றுக் கொள்ளும் மனப் பான்மை நமக்கு வேண்டும். வள்ளுவரும், 'இடுக்கண் வருங்கால் நகுக' என்கின்றார். அப்பரும் 'நினைந்துருகும் அடியாரை நைய வைத்தாய்' என்கிறார்.
நம்மாழ்வார் இதனை,

'நண்ணாதார் முறுவலிப்ப நல்உற்றார்
கரைந்தேங்க
எண்ணாறாத் துயர்விளைக்கும் இவைஎன்ன
உலகியற்கை'

என்கின்றார். இயேசு பெருமானும் 'துயரப்படுகிறவர் பாக்கியவான்கள்; பரலோக ராஜ்யம் அவர்களுடையது' என்கிறார். கம்பர் 'துன்பமுற்றவர்கலால் இன்பமில்லை' என்கின்றார். அவரே 'துன்புள தெனினன்றோ சுகமுளது' என்றும் காட்டுகிறார்

வள்ளுவர்,

'இடும்பைக்கு இடும்பைப் படுப்பர்
இடும்பைக்கு
இடும்பைப் படாஅ தவர்' என்கிறார்.

எனவே இறைவன் அடிப்படுதெல்லாம் அவன் படைத்த— அவன் உற்றிருக்கின்ற அவனியும், அதில் வாழ் உயிர்களும் நலம் பெறுவதற்காகவேயாகும்! 'தம் புதல்வர்க் கன்றே பலகாலும் சொல்வர் பயன்' என்ற அடியும் இங்கே நினைவுகூரத் தக்கது.

அடியவர் பொருட்டாக ஆண்டவனாகிய அப்பன் மறத்தை மாய்ப்பான் வரமிருந்து பெற்று வளர்க்கப் பெற்ற மார்க்கண்டேயர் பதினாறு வயதில் இறுதி எய்து வார் என அறிந்து, இறைவனைப் பற்றுக்கோடாக வழி பட்டு நின்றார். எனினும் காலன் குறித்த நாளில் அவர் உயிர் கொல்லப் புறப்பட்டான். காலம் தவறாமல் பணி யாற்றுவதனால்தானே அவன் 'காலன்' எனப் பெற்றான். ஆனால் மார்க்கண்டேயர் இறைவனை அகத்தும் புறத்தும் போற்றி அவனை அணைத்துக் கொண்டு தன்னை மறந்து நின்ற நிலையில் இறைவனையும் பிணைத்துப் பாசக்கயிற்றால் இழுக்க முயன்றான். அது தவறுதானே! மார்க்கண்டனைப் பிரித்து அவன் உயிரை எடுத்துச் செல்ல முயன்றால் இறைவன் என்ன செய்திருப் பானோ! நாமறியோம். ஆனால் 'பற்றுக பற்றற்றான் பற்றினை' என்றபடி இறைவனை உளத்தாலும் உடலா லும் பற்றி நின்ற நிலையில் காலன் செயல் தவறு என்பதை உலகுக்கு உணர்த்தவும், என்றென்றும் அடியவர் மாட்டு அவலம் நிகழலாகாது என விளக்கவும் அவனைக் காலால் கடிந்தார். எனினும் அவனை அழிக்கவோ அன்றி வீழ்த்தவோ இல்லை. பின் அவன் பணியினைச் செய்ய அவனுக்கு ஆணை தந்தார். எனவே இந்த அப்பன் அடித்த அடி காலனுக்கு மட்டுமன்றி, காலந்தொறும் வாழும் நம் போன்ற உயிர்களுக்கும் பாடமாக அமை கின்றதன்றோ!

அப்படியே காமனை எரித்த வரலாறும். சூரபதும னுடைய தொல்லையைப் பொறுக்கலாற்றாத தேவர்கள் பிரமன், விஷ்ணு முதலிய தெய்வங்களையெல்லாம் வணங்கி, இறுதியாகத் தவம் செய்திருந்த சிவனை அடுத்தனர். சிவன் ஏன்—எதற்காகத் தவம் செய்ய வேண்டும்? அவன் யோகியாகவும் போகியாகவும் இருக் கும் நிலையைக் காட்டவே தவநிலை கூறப் பெறுகின்றது.

'யோகியாய் இருந்தெவர்க்கும் யோகத்தைப்
புரிவான் நல்ல
போகியாய் இருந்தெவர்க்கும் போகத்தைப்
பொழிவான்'

என அவனை ஆன்றோர் காட்டுவர். மணிவாசகரும் திருவுந்தியாரிலும் பிறவிடங்களிலும் இவன் இருநிலை களையும் நன்கு விளக்குகின்றார் எனவே அவன் தவ நிலையும் வையத்துக்கும் வாழும் உயிர்களுக்கும் தேவைப் படுகின்றது.

அத்தகைய தவநிலையிலிருந்த அப்பனை எப்படி எழுப்புவது? மன்மதன்—திருமாலின் மைந்தன், மக்க ளுக்கு—உயிர்களுக்குக் காமத்தை வளர்ப்பவன்—புஷ்ப பாணத்தைப் பொழிந்து சேர்த்து வைப்பவன். தேவர் அதை உணர்ந்து அவனை அனுப்பி இறைவன் தவத்தைக் கலைத்து, சூரனை அழிக்கக் குமரனைப் பெற விரும் பினர். அவன் தன் சிறுமையினையும், அண்ணலின் பெருமையினையும் நினைத்து அஞ்சி மறுத்த போதிலும், அவர்கள் சாபமிடுவதாகப் பயமுறுத்தினர். 'இவர்கள் சாபத்தால் அழிவதைக் காட்டிலும் சிவன் சாபத்தால் அழிவது மேல், என்று எண்ணி மன்மதன் அச்செயலில் ஈடுபட்டான்! சிவன் கண் விழித்தான். அந்த விழி நெருப்பில் அவன் அழிந்தான். இறைவன் அடி சற்றே வேகமாக விழுந்தது.

இறைவன் நெற்றிக் கண்ணால் நீறுபட்ட நிலையில் அவன் மனைவி 'இரதி'தேவி புலம்புவதில், கச்சியப்பர் பலப்பல நுணுக்கங்களை வைத்துப் பாடுகின்றார்.

'போ'வென்று உனைவிடுத்த தேவரெல்லாம்
இப்போது 'வா' என்று உனை
எழுப்பவல்லாரோ?

எனக் கேட்கின்றாள் இரதிதேவி. மேலும்,

'செம்பதுமத் திருக்குமரா தமியேனுக்கு
ஆருயிரே திருமால்மைந்தா
சம்பரனுக்கு ஒருபகைவா கன்னல்வரிச்
சிலைபிடித்த தடக்கைவீரா
வெம்பவளக் குன்றனைய சிவன்விழியால்
வெந்து உடலம் அழிவுற்றாயே?
உம்பர்கள்தம் விழிஎல்லாம் உறங்கிற்றோ
அயனாரும் உவப்புற்றாரோ'

என்று பாடுகிறார். இதில் கடைசியில் 'அயனாரும் உவப்புற்றாரோ' என்கின்றார். இதன் கருத்தென்ன? அயனும் மன்மதனும் திருமாலின் பிள்ளைகள். பங்குக் குரிய பங்காளிகள். எனவே ஒருவன் மறைந்தால் முழுப் பங்கும் வாழும் ஒருவனைத்தானே சாரும். அதனால் அயனாகிய பிரமன் மகிழ்ந்தானோ என்கிறாள் இரதி. மேலும் மன்மதனைச் சிவனிடம் அனுப்பியவருள் முக்கிய மானவன் பிரமனாவான்.

இறைவன் இந்த அடியால் அவனை அழிக்கவில்லை. மறுபடியும் விழிக்க வைத்தார். அவனை எழுப்பித் தந்தார். இரதி தேவியின் வேண்டுகோளை நிறைவேற்றி னார். ஆனால் அவளுக்கு மட்டும் உருவனாகவும் மற்ற வர்களுக்கு அருவனாகவும் இருப்பான் என வரம் தந்தார். ஆம்! தன் நிலையை அவனுக்குத் தந்தார். தன் அழிவில் ஆண்டவன் நிலை பெற்றான் மன்மதன். அன்பர்களுக்கு உருவில் வந்து காட்சி தந்தும் அல்லாதார்க்கு இல்லா நிலையிலும் இருந்து அனைவரையும் ஆட்டிப்படைக்கும் இறைவன் நிலையினை மன்மதன் பெற்றான். உற்ற அன்புடைய இரதிக்கு உருவுடையவனாகவும் அல்லா தார்க்கு அல்லா நிலையில் மறைந்து நின்று மலரம்பு எறிந்து அவர்களை வாழ்த்தி வாழ வைப்பவனாகவும் போக மளிப்பவனாகவும் உள்ளான் அன்றோ! இது அடித்து அணைப்பது அல்லவா! மேலும் அந்த மன்மதன்

உருவொடு இருந்து, காம வாழ்வில் காதல் வாழ்வில் நிற்பார் எதிரில் வருவானாயின் என்னாகும்? காதல் நிகழுமோ? நிகழாதோ! எனவே இந்த இறைவனாம் அப்பன் அடியினால் மன்மதன் மட்டுமன்றி அனைத்து உயிர்களும் நலம் பெற்றன என்று தானே கூறல் வேண்டும்.

'திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள்' என்று சிறப்புப் பெயர் பெற்ற இறைவன் மும்மதிலை எரித்தவன் அல்லவா! ஆம்! அந்த வரலாறும் இந்த வகையில் அண்டமெல்லாம் அல்லலற்று வாழ அமைந்த செயலேயாகும். அவர்களும் என்றென்றும் வாழ்கின்றனரன்றோ! 'போர் புரங்கள் எரித்த அன்று சிலர்க்கருள் செய்தான்' என்று இதையே ஞானசம்பந்தர், தம் திருவண்ணாமலைப் பதிகத்தில் பாடியுள்ளார்.

தமக்கு ஒப்பாரும் மிக்காரும் ஒருவரும் இலர் என்று தருக்கி வாழ்வோரைத் தடுத்துத் திருத்த இறைவன் எப்போதும் தவறியதில்லை. எச்சமயத்தோர் சொல்லும் இதுவேயாகும். எப்பிறவி எடுப்பினும் அப்பிறவியில் ஆற்ற வேண்டிய அறநெறி பற்றி வாழ்வதுதான் உயிரின் தன்மை. புல்லாயினும் கல்லாயினும் புவியின் வேறு உயிருள்ள பொருள் எதுவாயினும் அவையாவும் தத்தம் கடமைகளைத் தவறாது செய்கின்றன. வனவிலங்குகளும் ஊரும் பாம்பும் பிறவும் கூடத் தம் செயல் முறையில் கூடுமான வரையில் தவறுவது இல்லை. மரபுநெறி அங்கெல்லாம் போற்றப் பெறுகின்றன. ஆனால் மனிதன்—அனைத்திலும் உயர்ந்தவன் எனத் தன்னை எண்ணிக் கொள்ளுகின்ற மனிதன்—ஆறறிவு பெற்ற மனிதன் தன் நிலையில் தவறுவதே வாழ்வாகக் கொள்ளுகின்றான். 'முந்திரிமேல் காணி மிகினும் கீழ் தன்னை இந்திரனாப் போற்றிவிடும்' என்று வள்ளுவன் கூறியபடி வன்கண்மையும் செருக்கும் மூடி மற்றவரைக்கெடுக்க—அழிக்க—பழிக்க முற்படுகிறான். இத்தகைய தன் முனைப்பு நிலையில்—தகாத

நிலையில்—இறைவன் தடுக்க முற்படுவான். மிகத் தருக்கி வாழ்வோர் முன் தானே வந்து தகைந்து—தடிந்து—அருள் செய்வான். திருமாலின் பத்து அவதாரங்களும் அப்படியே! சிவனுடைய திருவிளையாடல்களும் அத்தகையனவே! அவற்றுள் ஒன்றே தாருகாவனத்து முனிவர்களையும் அவர்தம் மனைவியரையும் அடித்துத் திருத்தியமை. நான் முதலிலேயே சொல்லியபடி அடித்தல் என்பது கோல் கொண்டு அடித்தல் மட்டுமன்று; சொல்லடி போன்ற பிறவும் அதனுள் அமையும். இங்கேயும் அத்தகைய செயலே காட்டப் பெறுகின்றது.

தாருகாவனத்து ரிஷிகள் தாமே தவத்தில் உயர்ந்தவரென்றும் தம்மினும் மிக்கார் ஒருவரும் இலர் என்றும் தருக்கு மிக்கு வாழ்ந்து வந்தனர். அப்படியே அவர்தம் மனைவியரும் தாமே கற்பிற் சிறந்தவர் என்றும் வேறு யாரும் தமக்கு நிகர் இல்லை எனவும் தருக்கி வாழ்ந்தனர். அந்தத் தருக்கு வளர்ந்திருந்தால் என்னாகுமோ! யார் அறிவார்! ஆம்! இறைவன் அறிந்தான். அந்த அகந்தையை நீக்க முனைந்தான். திருமால் பெண் உருவம் கொண்டு ரிஷிகள் முன் செல்ல அவர்கள் மயங்கி, தவம் விட்டு அவர் பின் வந்தனர். மனையிலுள்ள மனைவியர் முன் சிவன் பிச்சை ஏற்பாராகச் சென்று அவர் வளைகளைக் கொண்டு, அவர் தருக்கழித்து உதவினார். இறைவனோடு அவர்கள் பேசியவற்றைப் பரஞ்சோதியார் அழகுறக் காட்டுவார். அவர் வாக்கினை அப்படியே தருகிறேன். சொற்கள் சிலேடையாக அமைகின்றன. இறைவன் பிச்சாண்டியாக அவர்கள் வீதியில் செல்ல அனைவரும் வீட்டிலிருந்து புறம்போந்து, கலைநெகிழ, வளைகழல, அவர் வடிவில் மயங்கி, தம் கற்பினைக் காற்றில் பறக்க விட்டு அவரைப் பின் தொடர்கின்றனர். அவர்தம் பேச்சுக்களைப் பாடல்களில் காணலாம்,

'மடமயிலனையார் எங்கள் வளையினைத்
தருதிர் என்றார்
கடல்விடம் அயின்றான் உங்கள் கந்தரத்து
உள்ள தென்றான்
தடமதிக் கொம்பனார் எம்கலையினைத்
தருதிர் என்றார்
முடமதி மிலைந்தான் உங்கள் முகமதி
இடத்தது என்றான்
'இடையறிந்து எம்மைச் சேர்மின் என்றனர்
இளையர் எங்கோன்
கடலமுதனையீர் நுங்கட்கு இடை இனிக்
காணாது என்றான்
மடநலார் அஃதேல் பண்டைவண்ணம்
ஈந்து இல்லில் செல்ல
விடை அளித்திடுமின் என்றார் வேலைபுக்கு
உறங்கும் என்றான்'
'நங்கையர் கபாலிக் கென்றும் நடுவிலை
போலும் என்றார்
அங்கணர் நடுவிலாமை நும்மனோர்க்கு
அடுத்ததென்றான்
மங்கையர் அடிகள் நெஞ்சம் வலியகல்
போலும் என்றார்
கொங்கலர் கொன்றையானும் கொங்கையே
வன்கல் என்றான்'
'காதுவேல் அன்ன கண்ணார் கங்கைநீர்
சுமந்த தேதுக்கு
ஓதுமின் என்றார் நுங்கண் உண்பலி
ஏற்க என்றான்
ஏதுபோல் இருந்தையன் இழைத்த
செப்பு என்றார் ஈசன்
கோதுறா அமுதன்னீர் நும்கொங்கை
போல் இருந்தது என்றான்

செக்கர் அம்சடையான் கண்ணுள்
தம்உருத் தெரிய நோக்கி
இக்கொடியார் போல் கண்ணுள் எம்மையும்
இருத்தீர் என்றார்
நக்கலும் தனை அன்னார்கண்
நனிவர நகைத்து நம்மின்
மிக்கவர் நும்கண் உள்ளார் விழித்தவர்
காண்மின் என்றான்'

என்ற பாடல்களில் 'வளை' என்பது சங்கு, கழுத்து போன்ற சங்கு எனவும், 'நடு' என்பது நடுநிலை, இடை எனவும், 'விடை' என்பது உத்தரவு, விடையாகிய திருமால் எனவும், 'கல்' என்பது 'கல்' மலை போன்ற கொங்கை எனவும், 'கங்கை' என்பது 'கங்கை' எனவும் கபாலத்தைக் கையில் கொண்டது எனவும், 'செப்பு' என்பது சொல் எனவும் செம்பு போன்ற தனம் எனவும், 'கலை' என்பது ஆடை எனவும் சந்திர கலை எனவும் இருபொருள் அமைந்துள்ளன. கடைசி பாட்டில் இறைவன் அவருள் இருப்பதை விழித்தறிய முடியாமல் வாடியுள்ள நிலையினை விளக்குவதாகும். இவ்வாறு பேசிக் கொண்டே அப்பெண்கள் இறைவனைத் தொடர, தவசிகளும் மோகினியாகிய திருமாலைப் பின் தொடர்ந்து வர, இரு கூட்டத்தினரையும் நேருக்கு நேர் நிற்க விட்டு, இருவரும் மறைந்தனர். தவசிகளும் மங்கையரும் தத்தம் செயலால் நாணிக் கர்வம் அடங்கினர் என்பது வரலாறு.

பெரிய புராணத்தில் வரும் நாயன்மார் வரலாறுகள் இறைவன் ஆட்கொண்ட வரலாறுகளே. அவற்றுள் சில அடித்து ஆட்கொண்டவையாக அமைகின்றன. அமைதியாக அரனருள் போற்றித் தொண்டு செய்கின்றவரை அகிலமெலாம் அறியவைக்க வேண்டும் என்ற நிலையில் இறைவன் அடித்து ஆட்கொண்டுள்ளான். திருநீலகண்டர் தில்லையில் தம் குலத்தொழிலுக்கு ஏற்ப அடிய

வர்களுக்குத் தொண்டு செய்து வந்தார். எனினும் வாழ்வின் மாறுபாட்டால் தம் துணைவியார், 'எம்மைத் தீண்டுவீராயின் திருநீலகண்டம்' என்று ஆணையிட, இளமை முதல் அவரையும் 'எம்மை' என்றதால் வேறு எந்தப் பெண்ணையும் தொடாத விரதம் பூண்டு, அதே வேளையில் உலகுக்குத் தெரியாவகையில் இல்லறத்தை நடத்தி வந்தார். இத்தகைய தூய தவ வாழ்க்கையினை உலகுக்கு உணர்த்த இறைவன் எண்ணினார். எனவே ஒரு பழைய திரு ஓட்டினை அவரிடம் தந்து, அதை வைத்திருக்குமாறும் பின்பு வந்து பெறுவதாகவும் கூறிச் சென்றார். பின் அத்திருவோட்டினையும் இல்லையாக மறைத்து விட்டார். மறுநாள் வந்து கேட்க, ஓடு இல்லையாதலால், தாம் செய்த அரிய பல ஓடுகளைத் தருவதாக நாயனார் சொல்லவும் கேளாது தாம் தந்த ஓடே வேண்டுமென வாதிட்டார். இல்லையாயின் மனைவியின் கையைப் பிடித்து, அருகில் உள்ள குளத்தில் மூழ்கி, ஓடு காணவில்லை எனச் சத்தியம் செய்யச் சொன்னார். வாழ்விலே இளமை முதலே தாம் காத்த விரதத்தை வெளியே சொல்ல நாயனார் அஞ்சினார். உடனே இறைவன் தில்லை வாழ் அந்தணர் முன் சென்று முறையிட்டு, அவரைத் தம் மனைவி கைப்பிடித்துக் குளத்தில் மூழ்கிச் சத்தியம் செய்யச் சொல்ல வேண்டினார்.

அந்தணனும் எந்தைபிரான் அருமறையோர்
முன் பகர்வான்
இந்தவேட்கோ வன்பால் யான்வைத்த
பாத்திரத்தைத்
தந்தொழியான் கெடுத்தானேல் தன்மனைவி
கைப்பற்றி
வந்துமூழ்கியும் தாரான் வலிசெய்கின்றான்
என்றார்'

எனச் சேக்கிழார் இறைவன் வழக்கிட்ட முறையினைச் சொல்லுகின்றார். பின் வயதான நாயனார் வேறு வழி யின்றித் தாம் வாழும் வாழ்வினைப் பற்றிச் சொல்ல நேர் கிறது. பின் மன்றத்தோர் கூற, ஒரு கோலை இருவரும் பிடித்துக் கொண்டு, குளத்தில் மூழ்கி எழுகின்றனர். அவர்கள் எழுந்தபோது முதுமை மாறி இளமை பொலி யக் காட்சி அளிக்கின்றனர். வானில் இறைவனும் தன் உமையொடு தோன்றிக் காட்சி அளித்து அவர் புகழை உலகுக்குப் புலப்படுத்தி மறைந்தார். அவர்கள் மூழ்கி எழுந்த குளம் இன்றும் 'இளமையாக்கினார் குளம்' என்றும் இறைவன் கோயில் 'இளமையாக்கினார் கோயில்' என்றும் சிதம்பரத்தில் சிறப்புற உள்ளமை அனைவரும் அறிவர். இவ்வாறே பல அடியவர்தம் தூய தெய்வ வாழ்வினை உலகுக்குக் காட்டி அவர்களை என் றும் வாழவைக்கும் நிலையில் இறைவன் அடிப்பது போலக் காட்டி அணைக்கும் திறன் நூல் முழுவதும் காணலாம்.

திருநாவுக்கரசர் சைவசமயத்தை விட்டு, சமணமாம் சமயம் சார்தற்குச் சேக்கிழார் 'நம்பர் அருளாமையினால் அமண் சமயம் குறுகுவார்' எனக் காட்டுவர். பின் அவருக்கு உண்டான பல்வேறு அடிகளும் அவரைத் தூயராகக் காட்டுவதற்கும் அவர் தம் தளரா உள்ளத்தை யும் இறைவனிடம் அசைக்க முடியாத நம்பிக்கையினைக் காட்டுவதற்கும் எனவே அமைந்தனவாம். 'நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்' என வீறுபேசிய அளவிற்கு இறைவன் அவரை அடித்து ஆட்கொண்டார். நீற்றறையில் இட்டதும், யானையை ஏவியதும், கடைசி யில் கல்லைக் கட்டிக் கடலிலே இட்டதும் இறைவன் தந்த அடிகளேயாம். 'கற்றுணைப் பூட்டி ஓர் கடலில் பாய்ச் சினும் நற்றுணையாவது நமசிவாயவே!' இறைவன் திரு நாமத்தைப் பற்றி அவர் கரை ஏறினார். 'சுடச்சுடரும் பொன்போல் ஒளிவிடும் துன்பம் சுடச்சுட நோற்கிற்

பவற்கு' என்ற வள்ளுவர் வாக்கின்படி, அடிபட அடிபட அப்பர்தம் தெய்வத்தன்மை உலகுக்கு நன்கு விளங்கிற்று.

இறைவன் தொண்டராகிய அப்பரை மட்டுமன்றி, மகனாகக் கொண்ட சம்பந்தரையும் 'கடிதோச்சி மெல்ல எறிந்து' திருவீழிமிழலையில் ஆட்கொண்டார் என அறிகிறோம். நாடு பஞ்சத்தால் வாட, மிழலையில் இருந்த அப்பருக்கும் சம்பந்தருக்கும் இறைவன் காசுகள் அருளினார். அவற்றை மாற்றி, வேண்டிய உணவுப் பொருள்களைக் கொண்டு அடியவரையும் பிறரையும் உண்பித்தனர். எனினும் அப்பருக்கு இறைவன் தந்த காசு எளிமையில் மாற்றக் கூடியது; மகனாகப் போற்றப் பெற்ற சம்பந்தர் பெற்ற காசுகளோ வட்டம் அல்லது வாசி தந்தே மாற்ற வேண்டியதாக அமைந்தது. சம்பந்தர்

'வாசி தீரவே காசு நல்குவீர்
மாசின் மிழலை யீர் ஏசல் இல்லையே'

என இறைவனை வேண்டி வாசற்ற காசு பெற்றார். அப்பர் காசு வாசில்லா நிலைமைக்கு அவர் ஆற்றிய தொண்டே காரணம் எனப் போற்றுகிறார் சம்பந்தர். ஒருவேளை தான் மகனாகவே இருப்பதால் தனக்குச் சலுகை இறைவன் தருவான் என எண்ணி இருப்பார். ஆம்! இன்றைய பெருந்தலைவர்கள் எல்லாம் இவ்வாறு செய்வதால் தானே நாட்டில் பல்வேறு குழப்பங்கள் உண்டாகின்றன. இறைவனாகிய பெருந்தலைவனிடம் இவ்வேறுபாடு கிடையாது. எனவே ஒரு வேளை அவ்வாறு எண்ணிய சம்பந்தரைத் திருத்தவே 'வாசி வேண்டும்' காசு, அடித் தளந்து ஆட்கொண்டார். சம்பந்தர் எண்ணத்தினை அவர்தம் தொண்டர்கள் தம் காசு வாசிபடவேண்டியதை,

'கருதிய எல்லாம் கொள்ளவேண்டிச்
சென்றால்
காசுதனை வாசிபட வேண்டும் என்பார்

பெருமுனிவர் வாகீசர் பெற்ற காசு
பேணிக் கொள்வார் இதுபிற்பா
டென்பார்'
(168)

எனச் சேக்கிழார் கூறுவர். இது கேட்ட சம்பந்தர் உடனே கூறுவதைச் சேக்கிழார் கூறுகின்றார்.

'திருஞான சம்பந்தர் அதனைக் கேட்டு
சிந்திப்பார் சிவபெருமான் தனக்குத்தந்த
ஒருகாசு வாசிபட மற்றக் காசு
நன்றாகி வாசிபடா தொழிவான் அந்தப்
பெருவாய்மைத் திருநாவுக்கரசு **தொண்டால்**
பெருங்காசாம் ஆதலினால் பெரியோன்
தன்னை
வருநாள்கள் தருங்காசு வாசிதீரப்
பாடுவேன் என்றெண்ணி மனத்துட்
கொண்டார்!'

இவ்வாறே தேவாரம் பாடிய மற்றொரு அடியவராம் சுந்தரரையும் இறைவன் அடித்தடித்தே அக்காரம் தீட்டியுள்ளார். திருவாரூர் பரவையாருடன் வாழ்ந்த சுந்தரர், திருஒற்றியூரில் சங்கிலியாரை மணந்த போது, அவரை விட்டுப் 'பிரியேன்' என இறைவன் முன் சத்தியம் செய்து கொடுக்கின்றார். பின் பரவையைக் காணத் துடிக்கின்ற உள்ளத்தைக் காட்டாது, 'எத்தனை நாள் பிரிந்திருப்பேன் என் ஆரூர் இறைவனையே' என்று இறைவன் மேல் வைத்து ஒற்றியூரைவிட்டுப் பிரிந்தார். இரு கண்களும் அவிந்தன. உடனே,

'அழுக்கு மெய்க் கொடுன் திருவடி
அடைந்தேன்
அதுவும் நான்படப் பாலதொன்றாகில்

பிழுக்கை வாரியும் பால்கொள்வர் அடியேன்
பிழைப்பனாகிலும் திருவடி பிழையேன்
வழுக்கிவிழினும் திருப்பெயரல்லால்
மற்றுநான் அறியேன் மறுமாற்றம்
ஒழுக்க என் கணுக்கு ஒருமருந்து ரையாய்
ஒற்றியூரெனும் ஊர் உறைவானே!'

என்று பாடிச் செல்கின்றார். பின் திருமுல்லை வாயிலில் 'சங்கிலிக்காக என் கண் கொண்ட பண்ப 'பாசுபதா' என்று பாடுகிறார். பின் திருவெண்பாக்கத்தில் 'கோயில் உளாயோ' என்ன, இறைவன் 'உளோம் போகிர்' என்று கூறி, ஊன்றுகோல் அளித்து அனுப்புகிறார். பின் காஞ்சியில் ஒரு கண் பெற்று. 'கால காலனைக் கம்பன் எம்மானைக் காணக் கண் அடியேன் பெற்றவாறே' என்று பாடி, பின் திருவாரூர் சென்று, 'மற்றைக் கண்தான் தாராதொழிந்தாய் வாழ்ந்த போதீரே' என்று பாடி மறு கண்ணும் பெற்று வாழ்கின்றார். எனவே இறைவன் தன் அடியவராயினும் தவறின் தண்டிப்பான் என உணர்தல் வேண்டும்.

இறைவன் சிலரை வன்மையாகவும் சிலரை மென்மை யாகவும் அடிப்பதுண்டு. வன்மையால், அவர்தம் புகழ் உயரும். அத்தகைய உயர்நிலை பெற்றவருள் சிறந்தவர் சிறுத்தொண்டர் என்பர்

'செங்காட்டங்குடிமேய சிறுத்தொண்டன் பணிசெய்ய
வெங்காட்டில் அனலேந்தி விளையாடும் பெருமானே'

என்று ஞானசம்பந்தராலேயே போற்றிப் புகழப் பெற்றவர். அவர் காலத்திலேயே வாழ்ந்தவர். பல்லவ மன்னன் நரசிம்மனுக்குப் படைத்தலைவராக இருந்து, இரண்டாம் புலிகேசியை அவன் தலைநகராகிய வாதாபி வரையில்

துரத்தி அடித்ததோடு, அப்பெருநகரையும் கைக் கொண்டு வெற்றியோடு திரும்பி வந்தவர்.

'மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுரத்து
வாதாபி
தொன்னகரம் துகளாகத் துணைநெடுங்கை
வரை உகைத்தும்
பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும்
பரித்தொகையும்
இன்னன எண்ணில கவர்ந்தே
இகலரசன்முன் கொணர்ந்தார்'
(6)

என்பார் சேக்கிழார். அங்கிருந்து பல பொருள்களைக் கொண்டு வந்ததோடு, அந்நாட்டு, இன்றை மராட்டிய நாட்டு—வழிபடு தெய்வமாகிய விநாயகரையும்—கணபதியையும் உடன் கொண்டு வந்தார். திரும்பி வந்தவர் அரசுப் பணியை விடுத்து, ஆண்டவன் பணியே சிறந்ததெனக் கண்டு, தம் சொந்த ஊராகிய திருச்செங்காட்டங்குடிக்குச் சென்றார். உடன் தாம் கொண்டு வந்த கணபதியினையும் அங்கே எடுத்துச் சென்று கோயில் அமைத்து, கணபதியையும் இறைவனையும் அமைத்து முறையாகக் குடும்பத்துடன் வழிபட்டு வந்தார். அத்திருக்கோயில் இன்றளவும் 'கணபதீச்சரம்' என்ற பெயரிலேயே போற்றப்பட்டு வருகின்றது. (அக்கோயிலின் ஒரு பகுதி வாதாபி அமைப்பை ஒட்டியதே என்பர் ஆய்வாளர்) அன்று முதல் தமிழ் நாட்டு இசையரங்குகளிலும் 'வாதாபி கணபதிம் பஜே' என்றுதான் முழங்குகின்றனர். அத்தகைய பெரும் தொண்டு செய்த சிறுத்தொண்டரை இறைவன் சற்று வலுவாகவே அடித்தான் என்று சொல்ல வேண்டும்.

செங்காட்டங்குடியில் இறைத் தொண்டும் அடியார் தொண்டும் செய்து அவர் துணைவியாருடனும் ஒரே

மைந்தன் சீராளனுடனும் வாழ்ந்து வந்தார். நாடொறும் சிவனடியாரை உண்பித்தே தாம் உண்ணும் நெறியில் வாழ்ந்தார். அதில் தான் சோதனை பிறந்தது.

சிறுத்தொண்டரின் அரும்பெறல் தொண்டினை உலகுக்கு அறிவிக்கத் திருவுளங்கொண்ட இறைவன் பைரவர் வேடந்தாங்கி,ஒரு நாள் பகல் பசித்தவர் போன்று அவர் வீதி வந்தடைந்தார் நாள்தொறும் பல தொண்டர் வருவது உண்டு எனினும், அன்று பகல்வரை யாரும் வராததால் மனம் உளைந்த தொண்டர்க்கு இவர் வருகை கோடை மழையாய்க் குளிர்ந்திருந்தது. அவரை உணவு கொள்ள அழைத்தார் அவரோ,

'பண்புமிக்க சிறுத்தொண்டர் பரிவுகண்டு
பயிரவரும்
நண்புமிக்கீர் நாம் உண்ணப் பகுக்கும்
உணவு நரப்பசுவாம்
உண்பது ஐந்து பிராயத்தில் உறுப்பின்
மறுவின்றே இன்னம்
புண்செய் கோவில் வேல் எறிந்தாற் போலும்
புகல்வ தொன்றென்றார்'

(50)

'யாதும் அரியது இல்லையினி ஈண்டை
அருளிச் செய்யும்என
நாதன் நானும் ஒருகுடிக்கு நல்லசிறுவன்
ஒருமகனை
தாதை அரியத் தாய் பிடிக்கும்பொழுது
தம்மின்மனம் உவந்தே
ஏதமின்றி அமைந்தகறி யாம்இங்கு உண்பது
என மொழிந்தார்'

(51)

இவ்வாறு ஐந்து வயதில் யாதொரு உறுப்புக் குறை பாடும் பிறவும் இன்றி, ஒரு குடிக்குத் திருமகனாய் உள்ள தம்மகனைத் தாய் பிடிக்க, தந்தை அரிய, அதனால் மனம் வாடாது மகிழ்ச்சியுடன் சமைத்து இட்டால் உண்பதாக இறைவன் கூறினார். இதைக் கேட்டு அடியவரும் துணை வியாரும் எண்ணிப் பார்த்தனர். பிள்ளையை வேண்டு மானாலும் வாங்கி விடலாம். எந்தத் தாய், தந்தை மகிழ்ச்சியோடு அந்த ஐந்து வயதுப் பிள்ளையை அரிய ஒருப்படுவார். ஒருவரும் இலரே என எண்ணி, அந்த எல்லாப் பண்புகளும் வயதும் உடைய தம் மகனையே கறியாக்க முடிவு செய்தனர். இதை அம்மையார் வாக் கால் சேக்கிழார் கூறுகின்றார்; அன்னையைத் திருவனை யார் எனவே அழைக்கின்றார்.

'என்றுகணவர் கூறுதலும் அதனுக்கிசைந்து எம்பெருமான்
நின்று தாழாது அமுதுசெயப் பெற்றிங்கு அவர்தம் மலர்ந்தமுகம்
நன்று காண்பம் எனநயந்து **நம்மைக்காக்க வருமணியை**
சென்று பள்ளியினிற் கொண்டுவாரும் என்றார் திருவனையார்'

(57)

அவ்வாறே பிள்ளையை அழைத்து வந்து, மகிழ்ச்சி யோடு அரிந்து, கறியாக்கி, ஆண்டவனாகிய அடியவரை அழைத்து, உண்மின் எனக் கலந்திருத்தி உணவளிக்க, இறைவன் கருணை இன்னும் கடியதாக அமைந்தது. ஆம்! உடன் உண்ண வேறு அடியவரை அழைக்கப் பணித்தார். யாரும் கிடைக்கவில்லை யாதலால் சிறுத்தொண்டரையே உடன் இருந்து உண்ணச் செய்தார். தம் மைந்தர் கறியை அவரே உண்ணமுடியுமா! ஆயினும் அவர் சோதனையில் வெற்றிபெற்று உடன் அமர்ந்து உண்ணத் தொடங்

கினார். ஆயினும் அதையும் தடுத்து, 'ஆறுமாதமாக உண்ணாதிருக்கும் நானே இன்னும் தொடவில்லை அதற்குள் நீ அவசரப்படுகின்றாயே' என நிறுத்தினார். பின் உன் மைந்தனை உடன் உண்ண அழையும் என்றார். ஆனால் நாயனார், 'ஈறும்முதலும் இலாதார்க்கு இப்போது உதவான் இவன்' என்றார். எனினும் இறைவன் தெருவில் சென்று அவனை அழைத்து வாருங்கள் என்றார்.

'நாமிங்குண்பது அவன்வந்தால் நாடி
அழையுமென நம்பர்
தாமுமருளிச் செய்தரியார் தலைவர் அமுது
செய்தருள
யாம்இங்கு என்செய்தால் என்னாம் என்பார்
விரைவுற்று எழுந்தருளால்
பூமென் குழலார் தமமோடும் புறம்போய்
அழைக்கப் போம்போது'
(80)

தெருவில் யாருமில்லை—நல்ல வெய்யில்—பள்ளி விடும் நேரம், பாலன் பள்ளியில் இருந்து வரும் நேரம் தான்.

'செய்யமணியே சீராளா! வாராய் சிவனார்
அடியார் நாம்
உய்யும் வகையால் உடன்உண்ண
அழைக்கின்றார் என்று ஓலமிட'
(81)

எனச் சேக்கிழார் அவர்கள் ஓலமிட்டு அழைக்கும் நிலையினை நம் உள்ளமெல்லாம் உருகும் வகையில் காட்டுகின்றார். ஆம் அடுத்த கை அணைக்கும் நேரம் வந்துவிட்டது. என்ன நடந்தது?

'பரமனருளால் பள்ளியினின்று ஓடிவருவான்
போல்வந்த
தரமில் வனப்பில் தனிப்புதல்வன் தன்னை
எடுத்துத் தழுவித்தம்
கரமுன் அணைத்துக் கணவனார் கையில்
கொடுப்பக் களியார்ந்தார்
புரமூன் றெரித்தார் திருத்தொண்டர்
உண்ணப்பெற்றாம் எனும் பொலிவால்'

(82)

உடனே மூவரும் உள்ளே ஓடினர். அடியவர் இல்லை; அவர்முன் இட்ட இலை இல்லை. இலையில் இட்ட கறி இல்லை. திகைத்தனர் யாது நேர்ந்ததோ எனக் கவலை யுற்றனர். ஆனால் இறைவன் இம்மூவரைப் போன்றே தானும் அம்மையும் சரவணத் தனயனாம் முருகனும் ஒன்றாகத் தோன்றி விண்ணில் காட்சி அளித்தனர். ஆம்! இறைவன் எங்கும் அம்மை அப்பனாகக் காட்சியளிப் பதைத்தான் காண்கிறோம். ஆனால் இங்கே தம் மகனை யும் உடன் அழைத்து, இம்மூவருக்கும் காட்சி தந்து என்றும் அவர்களை வாழ வைத்து விட்டார்.

'செய்யமௌலிக் கருங்குஞ்சிச் செழுங்கஞ்
சுகத்துப் பயிரவர்யாம்
உய்ய அமுது செய்யாதே ஒளித்து எங்கே
எனத்தேடி
மையல் கொண்டு புறத்தணைய மறைந்த
அவர்தாம் மலைபயந்த
தையலோடும் சரவணத்து தனயனோடும்
தாம் அணையா'

(84)

என்று சேக்கிழார் இடத்துக்கு ஏற்ற வகையில் நாயனாருக்கு ஏற்றம் தந்து போற்றுகின்றார். இவ்வாறே இறைவனாம் சிவனுடைய அடித்தலையும் அணைத்தலையும் காட்டக் கோடிகோடி சான்றுகள் உள்ளன. எனினும் இந்த அளவொடு நின்று, முருகன், திருமால் ஆகிய முதல்வர்கள் அடித்து அணைத்த வரலாறுகள் ஒரு சில கண்டு அமைவோம்.

வைகுண்டத்தே திருமாலின் சந்நிதியில் வாயில் காவலராக இருந்தவர்கள் இருவர். அவர்கள் ஒருகால் அங்கே நாரத முனிவரை மதியாமையால், அவர் இவர்களை உலகில் பிறக்கச் சாபமிட்டார். இதை அறிந்த திருமால் அவர்களைக் கடிந்து கொண்டார். அவர்களும் சாப நீக்கம் தந்தருள முனிவரை வேண்டினர். அவரோ கொடுத்த சாபத்தை நீக்க முடியாதென்றும், வேண்டுமாயின் இரண்டு வழிகளில் ஒன்றைக் கொள்ளலாம் என்றும் கூறினார். ஒன்று திருமாலுக்கு அடியராக—அன்பராக நூறு பிறவி எடுப்பது, மற்றொன்று திருமாலுக்கு நேர் விரோதியாக மூன்று பிறவி எடுப்பது, இதில் எது வேண்டும்? எனக் கேட்டார். இருவரும் நூறு பிறவி எடுத்து நெடுங்காலம் வைகுண்டத்தை விட்டு நீங்கி இருப்பதைக் காட்டிலும் விரோதியாக மூன்று பிறவி எடுத்து விரைந்து திரும்பவே விரும்பினர். மேலும் உற்றவரைக் காட்டிலும், விரோதியே பகைவரை எப்போதும் நினைத்துக் கொண்டிருப்பார் என்றும், எனவே திருமாலை மறவாத மாற்றுப் பிறவியாய மூன்றுமே வேண்டும் எனவும் கூறினர். முனிவரும் அவ்வாறே ஆகுக என ஆசி வழங்கினார். அவர்களே முதற் பிறவியில் இரணியாட்சன், இரணியகசிபு என்றும், இரண்டாவது பிறவியில் கும்பகர்ணன், இராவணன் எனவும், மூன்றாவது பிறவியில் கம்சன், சிசுபாலன் எனவும் உலகில் பிறந்து திருமாலாலே திருத்தப்பெற்று, பின் வைகுண்டம் சேர்ந்தனர். இந்த மூன்று பிறவிகளிலும்

திருமால் அவர்களை அடித்துத் திருத்திய வரலாறுகள் நாடு அறிந்த வரலாறுகள் அல்லவா! அவற்றுள் ஒன்றிரண்டு காண்போம்

வால்மீகி சொல்லாத இரணியன் வரலாற்றைத் தம் இராமாயணத்தில் கம்பர் புகுத்தியுள்ளார். வீடணன் இராவணனுக்கு அறிவுறுத்தும் வகையில் இரணியன் கதையினைக் கூறி அத்தகைய பெருந்தெய்வமே இன்று, 'ஆலமும் மலரும் வெள்ளிப் பொருப்பும் விட்டு அயோத்தி வந்தான்', என விளக்கும் வகையில் அவ்வரலாறு அமைகின்றது. எனினும் இராமனாகிய திருமாலின் கையிலேயே இராவணனும் கும்பகர்ணனும் அமைய விரும்பியமையால் வீடணன் சொல்லுக்கு இசையவில்லை. தன்னை இராமனுடன் வந்துசேர அழைத்த வீடணனுக்குக் கும்பகர்ணன் இராமன் கையால் மாள்வதே எனக்குப் பொருள் என்கிறான்.

'உலைவிலாத் தருமம் பூண்டாய் உலகுள
தனையும் உள்ளாய்
தலைவநீ உலகுக்கெல்லாம் உனக்கது
தக்கதே யால்
புலையுறு மரணமேனும் எனக்கது
பொருளதேயால்'

என்கின்றார் கம்பர். அப்படியே கும்பகர்ணனும் இராவணனும் இராமனுடைய அம்பினாலேயே உய்தி பெறுகின்றனர். மற்றவர்களையெல்லாம் இலக்குவன் முதலியோர் சாய்க்க இவ்விருவரையும் இராமனே ஏற்று அருள் புரிகின்றான் அவன் வைகுண்டத்தில் செய்த தவற்றுக்கு அடித்துத் திருத்தலே இராமாயணம்.

இரணியனும் அவன் தம்பியும் திருமாலின் வெவ்வேறு அவதாரங்களால் திருத்தப் பெறுகின்றனர். தம்பி உலகினைப் பாயாகச் சுருட்டிச் செல்ல, அவனை வராக

அவதாரத்தில் நிலை மாற்றினார். இரணியனை நரசிங்க மாக நின்று, அவனைத் தானே மடிமீது வைத்து ஏற்று அருள் புரிந்தார். இவை இரண்டும் அவர்கள் செய்த பிழைகளை அடித்துத் திருத்தியதேயாம். இறைவன் தன் மையினைப் பிரகலாதன்,

'உலகு தந்தானும் பல்வேறு உயிர்கள்
தந்தானும் உள்ளூற்று
உலைவிலா உயிர்கள் தோறும் அங்கங்கே
உறைகின் றானும்
மலரினில் மணமும் எள்ளில் எண்ணெயும்
போல எங்கும்
அலகில்பல் பொருள்கள் பற்றிமுற்றிய
அரிகாண் அத்தா'

என்று கூறுகின்றான். மேலும்,

'சாணினும் உளன் ஓர் தன்மை அணுவினைச்
சதகூறிட்ட
கோணினும் உளன் மாமேருக் குன்றினும்
உளன் இந்நின்ற
தூணினும் உளன் நீசொன்ன சொல்லினும்
உளன் இவ்வுண்மை
காணுதி விரைவில்' என்றான்.

அருகில் உள்ள தூணிலும் உளன் என்பதைக் கேட்டதும் இரணியன் எளிமையில் அதைப் பற்றிக் கொண்டு தனக்கும் வழிதேடிக் கொண்டான். இப்பாடலில் கம்பர் அன்றே அணுவைப் பிரிக்க முடியும் என்றும் காட்டி, பல ஆயிரமாயிரம் துகளாக அணு பிரிக்கக் கூடிய தொன்று எனக் காட்டி, அதன் மிக நுண்ணிய அந்தச் சிறுகூறுக்குக் கோன் எனப் பெயரும் கொடுத்துள்ளார் என்பதை எண்ணத் தமிழகம் அறிவு நிலையில் அன்றே முன்னேறி இருந்தது என மகிழ வேண்டியுள்ளது. அணு

வைப் பிரித்து இன்று அணுகுண்டினைச் செய்ய உதவி யவன் ஓர் இத்தாலியனேயாவன். கடந்த உலகப் போரை நிறுத்தியதே அணுதானே. அணுகுண்டு அடித்து அழிவு தராவிட்டால் அப்போர் இன்னும் எத்தனை ஆண்டுகள் நீடித்திருக்குமோ! யார் அறிவார்? அன்று பிரகலாதன் கூறிய அந்தக் 'கோன்' தான் இன்றும் நம்மைப் போரால் தடிந்துத் தணிய வைத்தது. அமெரிக்காதான் அதைத் தயாரித்தது என்றாலும், அணுவைப் பல கூறாகக், கம்பன் காட்டியபடி, பிரிக்க முடியும் என்று பிரித்துக் காட்டி யவன் அன்று அமெரிக்காவில் வாழ்ந்த ஓர் இத்தாலி யனே. சிகாகோ நகரத்திலே அவனுக்கு ஒரு சிலையும் உண்டு என நினைக்கிறேன். அங்குள்ள பெரிய அணு ஆய்வுக்கூடத்தில் அந்த அணுவினால் என்னென்ன ஆக்கப் பணி செய்யலாம் என ஆராய்ந்து கொண்டே உள்ளனர். நம் பல பழங்கருத்துக்கள் அங்கே விஞ்ஞான வழி மெய்ப் பிக்கப் பெறுகின்றன. 'கூர்தல் அறம்' என்ற Evalution கொள்கையே தசாவதாரம் என நான் முன்னமே காட்டி யுள்ளேன். அந்த உண்மை ஆய்வின் மூலமும் வரை படங் கள் மூலமும் நன்கு விளக்கப் பெறுகின்றன. மறுபடியும் எங்கோ சென்று விட்டேன்.

இராவணன், கும்பகர்ணன் இருவருமே மூன்றாவது பிறவியில் கண்ணனுக்கு நெருங்கிய உறவினராக, கம்சன் சிசுபாலன் எனப் பிறந்தனர். கம்சன் தாய்மாமன், சிசு பாலன் அத்தைமகன். இவ்விருவரும் திருமாலாகிய கண்ண னாலே அடித்துத் திருத்தப் பெற்றனர். பின் அவர்கள் பழையபடியே வைகுண்டத்தே திருமாலின் வாயிற் காவலராகச் சென்றார்கள் என்று சொல்லவும் வேண் டுமோ! சிசுபாலனை வென்ற திருமாலாகிய கண்ணனின் சக்கரச் செயலை வில்லியார் அழகுறக் காட்டி, அது அவனை அழைத்துக் கொண்டு வைகுந்தம் சென்று திருமாலின் திருக்கரத்தில் பொருந்தி நின்றது என்கின் றார். ஆம்! இனி அடுத்து வரும் கல்கி அவதாரம் இன்று

வருமோ- அன்றி நாளை வருமோ என்று அஞ்சக் கூடிய நிலையில் அவனியின் வாழ்வு அவல வாழ்வாக மாறிச் கொண்டு வருகிறது.

'ஏவிய திகிரி வீரரைத் துறக்கம் ஏறவிட்டிடும்
இரவியைப் போல்
மேவிய பகையாம் மைத்துனன் முடியை
விளங்கு கோளகையுற வீசி
ஆவிகள் அனைத்தும் நிறைத்தொளி சிறந்த
அச்சுதன் அலைகொள் பாற்கடலுள்
தீவிய அமுதம் அமரருக் களித்தோன்
திருக்கரம் சென்று சேர்ந்ததுவே'

(வில்லிபாரதம்)

என்ற பாட்டில் வில்லியார் உவமை வாயிலாகச் சிசுபாலன் துறக்கம் எய்தி, திருமாலின் கோயிற் காவலனாயினான் என்பதைக் குறிப்பாக வெளியிடுகிறார். வீரரைத் துறக்கம் அனுப்பும் சூரியனைப் போலச் சிசு பாலனைக் கண்ணனின் சக்கரம் வைகுண்டம் அனுப் பிற்று என்பதாகும். எனவே இறைவனது மிகக் கொடு மையான அடியும் மிக மிக உயர்ந்த வாழ்வைத் தரும் என்பது தெளிவு.

இனி, முருகன் சூரபதுமனை அடித்துத் தனக்கே ஆளாக்கிக் கொண்டதைக் காண்போம். சிவபெருமான் திருக்குமரன் முருகன் என்று புராண மரபு கூறினாலும் அவன் அனைத்துக்கும் அப்பாற்பட்டவன் என்ற உண் மையைப் பலர் பாராட்டியுள்ளனர். இராமலிங்க அடி களார்,

'பித்தப் பெருமான் சிவபெருமான்
பெரியபெருமான் தனக்கரிய
பிள்ளைப் பெருமான் எனப்புலவர்
பேசிக்களிக்கும் பெருவாழ்வே

மத்தப் பெருமான் நீக்குமொரு மருந்தே
எல்லாம் வல்லோனே
வஞ்சச் சமணர் வல்லிருளை மாய்க்கும்
ஞான மணி விளக்கே
அத்தக் கமலத்து அயில்படை கொள்
அரசே மூவர்க்கருள் செய்தே
ஆக்கல் அளித்தல் அழித்தல் எனும்
அம்முத் தொழிலும் தருவோனே
சத்த விகார உலகனைத்தும்
தாளில் ஒடுக்கும் தனிப்பொருளே
தணிகா சலமாம் தலத்தமர்ந்த
சைவமணியே சண்முகனே'

என்று சண்முகன் அப்பாலுக்கு அப்பாலாய் மூவர்க்கும் மேம்பட்ட மூர்த்தியாய் விளங்கி, அடியவர்களுக்கு அருளுவதற்கெனவே தணிகையில் தங்கியுள்ளான் எனக் கூறுகின்றார். இந்த இறைவன் பேர் உருக் கண்ட சூரபதுமனே—போர்க்களத்தில்,

'கோலமா மஞ்ஞை மீது குலவிய குமரன்
தன்னைப்
பாலன் என்றிருந்தேன் அன்னான் பரிசிவை
உணர்ந்திலேன்யான்
மாலயன் தனக்கும் ஏனைவானவர் தமக்கும்
யார்க்கும்
மூலகா ரணமாய் நின்றமூர்த்தி இம்மூர்த்தி
அன்றே!

எனப் புகழ்ந்து போற்றுகின்றான். எனினும் அவன் மாயையின் மைந்தனாதலால், அம்மாயையால் மறைக்கப் பெற்று மறுபடியும் போர் செய்யத் தொடங்குகின்றான். இறுதியில் மாமரமாக, முருகனின் 'சக்தி' வேல் அதை இரு கூறாகப் பிளக்க, ஒன்றை மயிலாகவும், மற்றதைக் கோழியாகவும் கண்டு, ஊர்தியாகவும் கொடியாக

வும் கொண்ட வரலாறு நாடறிந்ததே. இதன் வழி உயிர் களுக்கு அழிவு இல்லை என்பதும் நல்லுயிர் இறை வனொடு ஒன்றி எல்லாராலும் போற்றப்படும் என்பதும் நன்கு தெரிகின்றன. இவ்வாறு ஆண்டவன் அடித்தான் என்றால் அதனால் அடிபட்ட உயிர்களும் பிறவும் நலம் பெறும் என்பதை உணர்ந்து நாம் அவ்வடிகளை மகிழ் வோடு ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இனி ஆண்டவனாகிய அப்பன், அடியவரை அடித்துத் திருத்துவதோடு, அடியவர்களுக்காகத் தானும் அடிபட் டான் என்ற உண்மையினை இங்கே காணல் வேண்டும்.

> **'வில்லால் அடிக்கச் செருப்பால் உதைக்க**
> **வெகுண்டொருவன்**
> **கல்லால் எறியப் பிரம்பால் அடிக்கக்**
> **களிவண்டுகூர்**
> **அல்லார் பொழிற்றில்லை அம்பல**
> **வாணருக்கோர் அன்னைபிதா**
> **இல்லாததால் அல்லவோ இறைவா**
> **கச்சி ஏகம் பனே'**

எனப் பட்டினத்தார் 'தாயுமிலி தந்தையிலி தான்தனியன் கானேடி' என்ற இறையின் தன்மையைக் காட்டி, அவன் அடியவர்களுக்காக எவ்வெவ்வாறு அடிபட்டான் என்ப தையும் காட்டி அவன் அருட்திறத்தைப் போற்றிப் புகழ் கின்றார்

அர்ச்சுனன் தவநிலைச் சருக்கத்தைப் பாடிய வில்லி யார் அர்ச்சுனனுக்கும் இறைவனுக்கும் நடந்த சண்டை யினையும் அப்போது இறைவனை வில்லால் அடித்ததை யும், பின் இறைவன் காட்சி தந்து பாசுபதத்தைத் தந்த தையும் தெளிவாகக் காட்டியுள்ளார்.

அன்பின் வயப்பட்டு ஆறே நாளில் ஆண்டவன் அடி அடைந்த கண்ணப்பர், குறி தவறாதிருக்க, தன் மறு

கண்ணையும் தோண்டி இறைவன் கண்ணில் அப்ப நினைத்து, அன்பின் பெருக்கில் தம்மை மறந்து, குறிக்காகச் செருப்புக் காலையே இரத்தம் வழிந்த மற்றொரு கண்ணில் பொருத்தினார் இதையே செருப்பால் உதைக்க என்று சொல்கிறார்.

இனி, சாக்கிய நாயனார் வேற்றுச் சமயத்தைச் சார்ந்தவர்; உண்ணுமுன் சிவனைக் கல்லால் அடித்து விட்டே சாப்பிடுவார். ஒருநாள் மறந்து உணவு கொள்ளத் தொடங்கும் வேளையில் கல்லால் அடிக்கும் நினைவுவர, எழுந்து வந்து இறைவனைக் கல்லால் அடித்தார். அந்த நியதி மாறாத நிலை கண்ட அப்பன் அவருக்கும் முத்தி அளித்தான் எனப் பெரிய புராணம் கூறுகிறது ஆம்! அவரும் மேலே கண்ட அப்பர், சம்பந்தர், சிறுத்தொண்டரைப் போன்று சிறந்த அடியவராகி, பெரிய புராணத்தில் இடம் பெற்றுள்ளார்.

இனி, மணிவாசகர் பொருட்டு இறைவன் பட்ட பிரம்படி நாடறிந்த ஒன்று. தன் மெய்யடியாராகிய மணிவாசகர்தம் உண்மைத் தொண்டு நிலையை உலகுக்கு உணர்த்தவும், தன்னையே துணை என நம்பி இருந்த வந்திக்கு முத்தி அளிக்கவும் யாண்டும் இறையருளே நிரம்பியுள்ளது என்பதை அன்று மட்டுமன்றி என்றும் வாழ்வோருக்கு எடுத்துக் காட்டவுமே இறைவன் பிரம்படிபட்டான்.

'துணைஇன்றி மக்கள் இன்றி தமர் இன்றிச்
கூற்றமாகும்
பணை இன்றி ஏன்று கொள்வார் பிறர்
இன்றிப் பற்றுக்கோடாம்
புணை இன்றி துன்பத்தாழ்ந்து புலம்புறு
பாவியேற்கு இன்று
இணையின்றி இந்தத்துன்பம் எய்துவது
அறனோ எந்தாய்!'
(பிட்டுக்கு மண் 12)

என்று தன் பங்கு அடைக்க ஆள் இல்லா நிலையினையும் அரசனது ஆணையினையும் எண்ணிப் புலம்பும் வந்தியின் நிலையைப் பரஞ்சோதியார் சில பாடல்களில் விளக்கு கிறார். இப்பாடலில் 'எந்தாய்' என இறைவனை விளித்து, தன் நிலையினை விளக்கி, அவளைக் காப்பார் யாரும் இல்லை என்பதை, சேயாகிய தன்னை அடித்தால் தாய் பொறுக்க மாட்டாள் என்ற நினைவில் புலம்புகின் றாள். தாயாகிய இறைவன் வாராதிருப்பானோ! வந் தான். ஆம்! தன் நிலையெலாம் மறந்து மண்வெட்டியும் கூடையும் ஏந்திக் கூலியாளாய் வந்தான். அவள் அவனைக் கண்டு அவனுக்கு வேண்டிய உதிரிப் பிட்டு களையெல்லாம் தந்து வேலைக்கு அனுப்புகிறாள்.

'தந்தையொடு தாயின்றித் தனிக்கூலி ஆளாக
வந்த எனக்கு ஒருதாயாய் அருள்கூர்ந்து
மாறாத
இந்த இளைப்பு ஒழித்தனையே இனிவேலை
தலைச்சென்று
சிந்தை களிப்பெழ வேலை செய்வேன்,
என்றிசைத்து எழுந்தார்'

என்று அவர் வேலை செய்யப் புறப்பட்டதைக் குறிப்பார். ஆயினும் அங்கே சரியாக வேலை செய்யா நிலையில், அப்பங்கு அடைபடாதிருக்க, பார்க்க வந்த அமைச்சர்கள் வெகுண்டாலும் அவன் உருவம் கண்டு அஞ்சினர். ஆம்! அடிபட்டாலும், அரசன் மணிவாசகரை உணரவேண்டிய அடிகள்—அக் கையால் அடிபட வேண்டுமல்லவா!

'ஆண்டகை வனப்பை நோக்கி
அடிக்கவும் இல்லேம்; அஞ்சி ஈண்டினேம்'

என்று அமைச்சர் கூற அரசனே அந்த இடஞ்சென்று கண்டான். வந்த அரசனிடம்,

'உள்ளொடு புறங் கீழ்மேலாய் உயிர்தொறும்
ஒளித்துநின்ற
கள்ளனை இவன்தான் வந்தி ஆள் எனக்
காட்டி நின்றார்'
(51)

அரசனோ சற்றும் சிந்தியாது,

'அண்டமும் அளவில்லாத உயிர்களும்
ஆகமாகக்
கொண்டவன் முதுகில் வீசிப்புடைத்தனன்
கூடையோடு
மண்தனை உடைப்பிற் கொட்டி
மறைந்தனன் நிறைந்தசோதி'
(52)

இப்பாடல்களின் பின், அனைத்து உயிர்களிடத்தும் இவ் வடிபட்ட தன்மையைக் குறிக்க, 'உயிர்தொறும் ஒளித்து நின்ற கள்ளன்' என்றும் 'அண்டமும் அளவிலாத உயிர் களும் ஆகமாகக் கொண்டவன்' என்றும் 'நிறைந்த சோதி' என்றும் காட்டுகிறார். பாண்டியன் அடித்த அடி,

'பாண்டியன் முதுகில்பட்டது செழியன்
பன்னியர் உடம்பினில்பட்டது
ஆண்டகை அமைச்சர் மேனியில்பட்டது
அரசிளங்குமரர் மேல்பட்டது
ஈண்டிய கழற்கால் வீரர்மேல் பட்டது
இவுளிமேல் பட்டது பருமம்
பூண்ட வெங்கரிமேல் பட்டது எவ்வுயிர்க்கும்
போதன்மேல் பட்டது அத்தழும்பு'
(53)

என்று காட்டி அதற்கப்பாலும் அது சென்றதை—மண்ணுலகும் விண்ணுலகும் பிரமன், மால் உலகும் எங்ஙனும் பட்ட நிலைமையினையும் விளக்குகிறார்.

'வானவர் மனிதர் நரகர் புள்விலங்கு
மாசுணம்சிதல் எறும்பாதி
ஆனபல் சரமும் மலைமரம் கொடிபுல்
ஆதியாம் ஆரமும்பட்ட
ஊனடைகருவும் பட்டன தழும்போடு
உதித்தன உயிரில் ஒவியமும்
தானடிபட்ட சராசர மடங்கல் தமக்கு
உயிராயினோன் தழும்பு'

(53)

'துண்என மாயோன் விழித்தனன் கமலச்
சோதியும் யாதென வியந்தான்
விண்ணவர் பெருமான் வெருவினான்
வேறுளார் மெய்ப்பணிப் படைந்தார்
வண்ணயாழ் இயக்கர் சித்தர் சாரணர்தம்
வடுப்படா உடம்பினில்பட்ட
புண்ணையா தென்று தத்தமிற்காட்டி
மயங்கினார் புகுந்தவா றறியார்

(56)

என்றும் இன்னும் பலவகையிலும் காட்டி இறைவர் பட்ட அடியினை அகில அண்டத்துக்கும் அதற்கப்பாலும் உள்ளவர்க்கும் உரியதாக்குகிறார் பரஞ்சோதியார். இறைவன் மறைய—கொட்டிய மண்ணால் வையைவற்ற, பாண்டியனும் மற்றவரும் ஒன்றும் அறியாராய், அவனை ஆளாகக் கொண்ட வந்தியிடம் கேட்கச் சென்றனர். அதே வேளை விண்ணிழி விமானத்தில் வந்தியைத் தேவர்கள் இறையுலகுக்கு இட்டுச் சென்றனர். பின் இறைவன் மணிவாசகர் பெருமையினையும் அவன் பொருட்டாகவே

தாம் வந்ததையும் விளக்கிக் கூறி, அன்பர் பொருட்டு எதையும் செய்வோம் என்பதை அவனுக்கும் உலகுக்கும் உணர்த்தினார். அவனும் உடன் சொக்கேசர் கோயில் சென்று, அங்கு இறைவனை வழிபட்டு நின்ற மணிவாசகரை,

'தொல்லைநீர் உலக மாண்டு சுடுதுயர்
நரகத் தாழ
வல்லஎன் அறிவுக்கேற்ற வண்ணமே
செய்த நீர்என்
எல்லைதீர் தவப்பேறாய் வந்து
இகபரவேது வாகி
அல்லல் வெம்பிறவி நோய்க்கு
அருமருந்தானீர் ஐயா'
(78)

என வாழ்த்தி, இறைவனையும் வணங்கிப் பேறு பெற்றான்.

'வஞ்சகர்பால் நடந்தலைந்த காலில் புண்ணும்
வாசல்தொறும் முட்டுண்ட தலையில்
புண்ணும்
செஞ்சொல்லை நினைந்துருகும் நெஞ்சில்
புண்ணும்
தீரும்என்றே சங்கரன்பால் சேர்ந்தேன்
அப்பா
கொஞ்சமல்ல பிரம்படியின் புண்ணும் வேடன்
கொடுங்காலால் உதைத்த புண்ணும்
கோபமாகப்
பஞ்சவரில் ஒருவன் வில்லால் அடித்த
புண்ணும்
பார்என்றே காட்டி நின்றான் பரமன்
தானே'

என்ற பிற்காலப் புலவனின் பாடலும் இங்கே நினைவு கூர்தற்குரியதன்றோ!

இவ்வாறு இறைவன் மற்றவனை அடித்துத் திருத்தியதோடு அல்லாமல் தானே அடிபட்டும் தரணியையும் அண்டத்தையும் அருள் நெறியில் ஆட்படுத்தி வருகின்றான். இச்செயல் என்றும் நிகழும் செயலாகும். இன்றைய அண்டம் வளர்ந்து கொண்டே வருகின்றது என்பர் ஆய்வாளர். என்றும் வளரும், என்றும் வாழும் அகன்ற அண்டகோளத்தினையும் அவற்றில் நிலைபெற்று வாழும் உயிரினங்களையும் ஆண்டவன் இவ்வாறெல்லாம் அடித்தும் அடிபட்டும் திருத்திச் செம்மையாக்கிக் கொண்டே இருக்கின்றான். இன்று நாம் வாழும் உலகம் நாளையோ அன்றி என்றோ நிலைகெட்டு, மாறி, அழிவுற்று வேறு நிலை அடைந்தாலும் அதில் வாழும் ஆன்மாக்களாகிய நாம் வேறு எங்காவது எப்படியாவது அவன் அடிநிழலில் நின்று வாழ்வோம் என்பது உறுதி. எனவே, இந்த அளவில் இன்றைய பேச்சினை நிறுத்தி, அடுத்த புதன்கிழமை இந்த இருவரையும்—அம்மையையும் அப்பனையும் பெற்ற ஆன்மாவினைப் பற்றியும் அடுத்து ஆன்மா வாழும்படி வளரும் அண்டகோளத்தினைப் பற்றியும் அறிந்து காண்போம். வணக்கம்.

18—8—93

# 3. இருவரையும் பெற்ற ஆன்மா!

பெரியோர்களே!

வணக்கம். கடந்த இரு புதன் கிழமைகளிலும் இறைவனாகிய அப்பனும் சக்தியாகிய அம்மையும் நம்மை—உயிர்களை—அனைத்தையும் எவ்வெவ்வாறு அடித்துத் திருத்தி அருளாட்சியில் அமர்த்தி வாழவைத்தனர் என்பதைக் கண்டோம். இன்று அந்த அருளாட்சிக்கு உட்பட்ட அந்த அம்மையையும் அத்தனையும் பெற்ற ஆன்மாவின் தன்மையை ஓரளவு காண இருக்கின்றோம். உங்கள் அனைவர்தம் வாழ்த்தின் வலத்தால் யாவும் இனிமையாக அமையும் எனும் துணிவுடையேன். தங்கள் நல்வாழ்த்துடன் தொடங்குகின்றேன்.

'இருவரையும் பெற்ற ஆன்மா' என்ற தொடருக்கு இரு வகையாகப் பொருள் கொள்ளலாம். இருவரையும்—அன்னையையும் அத்தனையும்—தாயாகப் பெற்ற ஆன்மா என்றும் இருவரையும் தான் பெற்றெடுத்த ஆன்மா என்றும் பொருள் கொள்ள இடமிருக்கின்றது. முன்னது அனைவராலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதென்றாலும் பின்னதை ஏற்றுக் கொள்ளச் சிலர் தயங்குவர். ஆயினும் இறைவன் பிள்ளையாக வந்து குழவியாகி விளையாடிய காட்சியினை முன்பு கண்டோம்.

'எழுதரிய மறைச்சிலம்பு கிடந்து புறத்தலம்ப
அன்பர் இதயம் என்னும்
செழுமலரோடையின் மலர்ந்த சிவானந்தத்
தேன் ததும்பும் தெய்வக் கஞ்சத்

தொழுதகு சிற்றடிபெரி யவிரல் சுவைத்து
மைக்கணீர் துளும்ப வாய்விட்டு
அழுதணை யாடையிற் கிடந்தான்
அனைத்துயிரும் ஈன்று காத்தளிக்கும் அப்பன்'

(விருத்த. 28)

என்று அனைத்துலகும் ஈந்து காத்து அளிக்கும் ஆண்டவன் குழந்தையாகி அழும் காட்சியினைப் பரஞ்சோதியார் அப்படியே படம்பிடித்துக் காட்டுகிறார். இனி கண்ணனையும் முருகனையும் குழந்தையாகப் பாவித்துப்பாடிய அடியவர்தம் பாடல்கள் பல. முருகனைப் பாடவந்த அருணகிரியார் அவனை மாயோன் மருகனாகக் காட்ட விழைகின்றார். குழந்தையாகிய முருகனும் மாமனாகிய மாலும் குழந்தையாக உள்ளனர் என்பதையும் விளக்குகிறார்.

'எந்தை வருக ரகுநாயக வருக
மைந்த வருக மகனே இனி வருக
என்கண் வருக எனதாருயிர் வருக—
அபிராமா!
இங்கு வருக அரசே வருக முலை
உண்க வருக மலர் சூடிட வருக
என்று பரிவினொடு கோசலை புகல—
வருமாயன்
சிந்தை மகிழும் மருகா'

என முருகனாகிய குழந்தையை நினைக்கும் போது அவன் மாமனும் குழந்தையாகவே அருணகிரியாருக்குக் காட்சி தருகிறான். முருகனைப் பிள்ளையாகப் பாடிய பிள்ளைத்தமிழோ அளவற்றன. முழுமுதலாக எண்ணப் படும் சிவன் ஒருவனைத் தவிர்த்து மற்றைய அனைவருக்கும் பிள்ளைத் தமிழ் உண்டல்லவா! மதுரை மீனாட்சி அம்மைப் பிள்ளைத் தமிழில் குமரகுருபரர், பிள்ளைத்

தமிழின் வருகைப் பருவப் பாடலைப் பாடும் போது அம்மையே முன் வந்து அருள் செய்தாள் எனக் காண்கிறோம்.

'மலையத்துவசன் பெற்ற பெருவாழ்வே
வருக வருகவே'

என்று குமரகுருபரர் பாடிய போது மீனாட்சி கோயிலில் நேரில் இளங்குழந்தையாக—பெண்ணாக வந்து காட்சியளித்த வரலாறு நாடறிந்த ஒன்றல்லவா; எனவே இருவர் பெற்றெடுத்த ஆன்மா என்பதும் ஆன்மா பெற்றெடுத்த இருவர் என்பதும்—இரண்டும் பொருந்துவனவேயாம். இனி இந்த அளவொடு இதை நிறுத்தி அந்த ஆன்மாவினைக் காண்போம்.

நான் முன்னரே சுட்டியபடி இறைவன், ஆன்மா, அடுத்துக் காணப்போகும் அண்டம் இம்மூன்றும் என்றும் உள்ளனவேயாம். சைவசித்தாந்திகளும் பிற சமயத்தவர்களும் இதையே முப்பொருள் உண்மை என்பர். பதி, பசு, பாசம் என்ற முப்பொருள்களே இவை. இம்மூன்றும் என்றும் உள்ளனவேயாயினும் முதலாவதாகிய இறைவனுக்கும் பிற இரண்டினுக்கும் வேறுபாடு உண்டு. ஒன்றான இறைவன், என்றும் யாண்டும் நிறைந்து—யாதொரு வேறுபாடும் இன்றி — அணுவுக்கணுவாய் அப்பாலுக்கப்பாய்ப் பரவி — எல்லா உயிர்களையும் அண்டங்களையும் தன்னுள் அடக்கி, தானும் அவற்றுள் அடங்கி நின்று அவற்றை வாழ்வித்து வழிகாட்டும் தன்மை உடையவன். ஆனால் ஆன்மா, அண்டம் இரண்டும் அரைநிமிட நேரமும் கூட ஒரே நிலையில் இருப்பன அல்ல. அவை அழியாவிடினும் மாறும் தன்மை உடையன. பெருகவும் சிறுகவும் குறுகவும் அகலவும் காலந்தோறும் மாறவும் நிலை கெட்டு நிற்பனவாம். இவற்றை இயக்கு

கின்ற இறைவன் உடனே இருப்பினும், இவற்றின் வாழ்வும் வளர்ச்சியும் தாழ்வும் தன்மையும் அடிக்கடி மாறத்தக்கன. இவற்றை எல்லாம் எண்ணிய அப்பர் பெருமானார்,

'நற்பதத்தார் நற்பதமே ஞானமூர்த்தி
நலஞ்சுடரே நால்வேதத்து அப்பால்நின்ற
சொற்பதத்தார் சொற்பதமும் கடந்துநின்ற
சொலற்கரிய சூழலாய் இது உன் தன்மை
நிற்பதொத்து நிலைஇலா அண்டந் தன்னுள்
நிலவாத புலால் உடம்பே புகுந்து நின்ற
கற்பகமே நான் உன்னை விடுவேன் அல்லேன்
கனகமா மணிநிறத் தெம் கடவுளானே'

என்கின்றார்.

எனவே இந்த ஆன்மா இறைவனோடு இயைந்தும் வேறு பட்டும் வாழும் தன்மை உடையது என உணர்தல் வேண்டும்.

இனி, இந்த ஆன்மா எப்படி இயங்கும் என்பதைக் காண்போம். பிற மொழிகளின் இலக்கணங்களைப் போலன்றித் தமிழ் இலக்கணம் நம் உயிர் வாழ்வையும் வாழ்வின் நிலையினையும் காட்டும் வகையில் அமைகின்றது. எழுத்துக்களை உயிர், மெய் எனப் பிரித்தனர். இரண்டும் கூடினால்தானே வாழ்க்கை—அவ்வாழ்வை விளக்குவனதாமே இலக்கியம்; அவ்விலக்கியம் கண்டு அதற்கு விளக்கம் தருவதுதானே இலக்கணம். எனவே இலக்கணச் சூத்திரம் செப்ப வந்த தொல்காப்பியனார் உடலையும் மெய்யையும் எண்ணிப் பார்க்கின்றார். உடல் அசைவற்றது. ஆனால் உயிர் பெற்றால் உலவ வல்லது. இரண்டும் ஒன்றுவது இயல்பு. அதுவே வாழ்வு—மொழி. அப்படியே இந்த உயிர் பெறும் வினையும் அது விளையும் காலமும் கணிக்கப் பெறுகின்றது. இவற்றையெல்லாம்

எண்ணிய தொல்காப்பியர் தமிழ் எழுத்து, சொல், பொருள் இவை பற்றி எண்ணி எழுதும்போது, முதலாவதாக இவ்வுயிர்த் தத்துவத்தையே விளக்குகிறார்.

'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே'

என்றும்,

'மெய்யின் வழியது உயிர் தோன்று நிலையே'

(எழுத்து 18, 20)

என்றும், உயிர் உடலோடு பொருந்தும் நிலையினையும் மெய் இன்றேல் உயிர் தோன்ற வழி இல்லை என்றும் காட்டுகின்றார். மேலும் இந்த உடம்பிலிருந்து—மெய்யிலிருந்து, உயிர் பிரியின் அது தன் தனிப்பட்ட 'பசு' உருவிலே சென்று விடும் என்பதையும் எந்த மெய்யோடு உயிர் சேர்ந்தாலும் அதனுடைய இயல்பான இயல் திரியாது நிற்கும் என்பதையும் காட்டுகிறார்.

'மெய் உயிர் நீங்கின் தன் உருவாகும்'

(13)

என்றும்,

'மெய்யோடு இயையினும் உயிரியல் திரியாது'

(10)

என்றும் அவர் கூறுகின்றார். இனி இந்த உயிரை, அதன் வினை வந்து பற்றுவதையும், தனக்கு உரியவனையே அது வந்து காலமறிந்து, இடமறிந்து சேர்ந்து அதன் பயனை—அவ்வுயிர் நுகர வழி வகுக்கும் என்ற உண்மையினையும்

'வினை எனப்படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலை காலமொடு தோன்றும்'

(வினை 196)

என்று காட்டுவர் தொல்காப்பியனார். வேற்றுமை கொள்ளாது என்ற வழி தன்னைச் செய்தவனை விட்டு வேறு ஒருவனைப் பற்றாது என்றும் அவ்வினை பயன்தரச் காலம் பார்த்து நிற்கும் என்பதனைக் 'காலமொடு தோன்றும்' எனவும் காட்டியுள்ளார். இவ்வாறு உயிர் முன் செய்த வினையின் பயன் வழியே செயல்படுவதால் அதன் பெருமையைப் பாராட்டுவதோ சிறுமையை இகழ் வதோ தேவை இல்லை என்று சங்க காலப் புலவர் கணியன் பூங்குன்றனார் சொல்லியுள்ளார். ஆற்று வெள்ளத்திலே அடித்துச் செல்லப்படும் புணை போல்— துரும்பு போல் உடலில் புகுந்த உயிர் தன் வினை வழியே செயலாற்றுகின்றது என்கிறார் அவர்.

'கல்பொரு திரங்கு மல்லற் பேரியாற்று
நீர்வழீஇப் படும் புணைபோல், ஆருயிர்
முறைவழிப் படூஉம் என்பது திறவோர்
காட்சியில் தெளிந்தன மாதலின்
மாட்சியில் பெரியோரை வியத்தலும் இலமே
சிறியோரை இகழ்தல் அதனினும் இலமே'

(புறம் 192)

என்கின்றார். இந்த உயர்ந்த தத்துவத்தை உலகு உணர்ந் தால் கண்டவரை – பதவி, பணம் பிற காரணங்களுக் காகப் புகழ்வதும் போற்றுவதும் பெரும் உருவக் காட்சி கள் அமைப்பதும் இன்றி நாடும் உலகமும் அமைதியாக வாழுமே! உலகம் இந்தத் தமிழ்ப்புலவர் வாய்மொழிப்படி என்று வாழுமோ?

உயிர் வினையின் வயத்தால் வந்தது என்பதனைச் சாத்தனார்,

'வினையின் வந்தது வினைக்கு விளைவாயது
புனைவன நீங்கில் புலால் புறத்திடுவது
மூப்புவிளி உடையது தீப்பிணி இருக்கை

பற்றின் பற்றிடம் குற்றக் கொள்கலம்
புற்றடங்கு அரவின் செற்றச் சேக்கை
அவலக் கவலை கையாறு அழுங்கல்
தவலா உள்ளம் தன்பால் உடையது
மக்கள் யாக்கை இது என உணர்ந்து
மிக்கோய் இதனைப் புறமறி பாராய்'

(மணிமேகலை)

என்று முந்திய வினை வழியே வந்தது மட்டுமன்றி மேல் வரும் பிறவிகளுக்கும் வினையே தேடிச் செயல்படுகின்றது என்கிறார். இவ்வாறு தொல்காப்பியரும் பிற தமிழ் இலக்கணங் கண்ட நல்ல புலவர்களும் உயிர் வாழ்வே மொழியும் அதன் இலக்கணமும் எனக்கண்டு உலகுக்கு உணர்த்துவர்.

இனி இவ்வுயிர் பற்றி ஆங்கில அகராதிகளும் பிறவும் கூறுவனவற்றை ஒரு சிறிது காண்போம்.

'Life' என்ற ஆங்கிலச் சொல்லுக்கு State of Ceaseless Change and functional activity peculiar to organized Matter esp-to the portion of it constituting an animal or plant before death.

என்றும்,

Something on which its depends whether one shall live or die-Fresh Short after narrowly escaped-Individual's actions & functions, manner of existence.

என்றும்,

Active part of existence, business and pleasures of the world.

என்றும் கூறப் பெறுவதைக் காண்கிறோம். இவையும் நாம் மேலே கண்ட அப்பர், தொல்காப்பியர் போன்றோர் கூற்றுக்களை ஒத்திருப்பதைக் காணலாம்.

உயிர் என்பதற்கும் உயிர் வாழ்வு என்பதற்கும் தமிழ் விளக்கங்களும் கீழ்க்கண்டவாறு உள்ளன. 'உயிர்த்திறன்' ஈடுபாடு, உணர்ச்சிச் செறிவு, மயக்கத்தினின்று தெளிவு பெறுதல், இம்மை எனவும், கற்பனை இல்லாத—அழிவு கடந்து நினைவு மட்டான செலவில் அமைதியோடு வாழ்தல், காற்றை உண்டு வாழ்வது போலத் தோற்றம், நடைமுறை வாழ்க்கை எனவும் பொருள் கொள்கின்றனர். அனைத்தும் நாம் மேலே கண்ட அவற்றுள் அடங்குவனவே.

'ஆன்மா' என்பதற்கும் பல விளக்கங்கள் உள்ளன. சிலர் 'ஆத்தும சக்தி'யைச் சிவசத்து என்பர். 'Faculty of Soul' என்று ஆங்கிலத்தில் கூறுவர். 'ஆத்ம தரிசனம்' என்பதனை, 'the soul's perception' என்றும் 'a spritual illumination' என்றும் a Conciousness that the deity is the operator of the actions of the soul' என்றும் பொருள் கொண்டு விளக்குவர். சீவன், ஆவி, உயிர், ஆன்மா எனப் பல வகைகளில் அழைக்கப் பெறும் இப் 'பசு'வின் நிலையினைப் பலரும் பல வகையில் விளக்குவர். 'சிவன்' என்பதொடு ஒரு மாத்திரை சேர்த்தால் 'சீவன்' ஆகின்றான். எனவேதான் ஔவையார் 'இறைவன்' தொண்டர் உள்ளத்தடக்கம், தொண்டர் தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே என்று பாராட்டினார். இவ்வுயிராகிய ஆன்மாவினைப் பற்றி ஆராய்கின்ற அறிஞரெல்லாம் எப்படி இறைவன் நிலை காணாது திகைக்கின்றனரோ, அப்படியே திகைக்கின்றனர். 'ஆன்மா' வினையே நாம் என்று கொள்ளுவது இயல்பு ஆனால் அந்த ஆன்மா அல்லது உயிரைப் பற்றிப் பேசும்போது 'என் ஆன்மா' 'என் உயிர்' என்று தான் கூறுகின்றோம். எனவே நாம் வேறு, ஆன்மா அல்லது உயிர் வேறு என்று கொள்ளக் கிடக்கின்றதல்லவா! இறைவன் உருவினை நாம் காண முடிவதில்லை.

'இப்படியன் இந்நிறத்தன் இவ்வண்ணத்தன்
இவன் இறைவன் என்றெழுதிக்
காட்டொணாதே'

என்று அப்பரும், 'ஒரு நாமம் ஓர் உருவம் ஒன்றுமிலார்க்கு ஆயிரம் திருநாமம் பாடி நாம் தெள்ளேணம் கொட்டாமோ' என்று மணிவாசகரும் இறைத்தன்மையைக் கூறியபடியேதான் உயிர்த்தன்மையும் உள்ளது. இறைவன் நினைப்பவர் உள்ளபடி பல உரு, பல பெயர் பெறுவது போன்றே, உயிரும் தான் சேரும் இடத்துக்கு ஏற்ப உருவும் திருவும் செயலும் சிறப்பும் பெற்று வாழ்கின்றது. எனினும் அதைக் காண இயலாது. உயிர் போயிற்றே என்று அலறுவாரைக் கண்டு கபிலர்,

'எற்றுக் கழுவீர் ஏழை மாந்தர்காள்
உயிரினை இழந்தோ உடலினை இழந்தோ
உயிரினை இழந்தென் றோதுவீ ராயின்
உயிரினை அன்றும் காணீர் இன்றும் காணீர்
உடலினை இழந்தென் றோது வீராயின்
உடலினை அன்றும் கண்டீர் இன்றும்
காண்பீர்'

என்று கூறித் தேற்ற முற்படுகின்றார். எனவே காணா இறைவன் தன்மையை ஒத்து, உயிரும் இன்னதெனக் காணா வகையில் ஆயிரக் கணக்கான உடல் நிலைகளில் 'எண்பத்து நான்கு நூறாயிரமாம் யோனி பேதத்து' மாறி மாறி நின்று தன்னை வெளிக்காட்டாமலே, இறுதியில் இறைநிலை உறுகின்றது என்னலாம். இந்த உயிருக்கு நாற்பத்தொன்பது வகையில் விளக்கம் தந்துள்ளார் 'வின்ஸ்லோ' என்ற தமிழ் ஆங்கில அகராதி எழுதிய மேலைநாட்டு அறிஞர். இனி 'சீவன்' என்ற சொல்லுக்கு 'Vitality' என்ற பொருள் கண்டு, அது புல் முதலாகிய ஓரறிவுடைய உயிர் தொடங்கி ஆறறிவுடைய மனிதன்

வரையில் அமைந்த ஒன்று என்பதையும் விளக்குகிறார். இவ்வாறாய ஆன்மாவைப் பற்றி எப்படி நாம் சில நிமிடங்களில் அறுதியிட்டுக் காண முடியும்? எனினும் இச்சீவனைச் சிவனே ஆட்டுவிக்கின்றான் என்பது உண்மை. இதைத்தான் எல்லாச் சமயங்களும் சொல்லு கின்றன. சைவசித்தாந்திகளும் சீவன், சிவனொடு சார்ந் தால் செயலற்று ஒன்றாகும் நிலையினையும், தனக்கென ஒன்றில்லை என உணர்ந்தால் அச்சீவனுக்கு நலக்கேடு ஒன்றும் இல்லை என்ற உண்மையினையும் கூறுவர்

'நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே'

என்று மணிவாசகரும்,

அருவினை பாசக் கயிற்றின் வழி
ஆட்டுவிப்பானும் ஒருவன்
உண்டே தில்லை அம்பலத்தே'

என்று அப்பரும்,

'என்செயலாவது யாதொன்று மில்லை'

என்றும்

'ஆட்டுவித்தால் ஆர் ஒருவர் ஆடாதாரே'

என்றும் பல வகையில் இவ்வுண்மையை விளக்கியுள்ளனர். வேதாந்திகளோ இந்த உயிர் வாழ்வினை வேறு வகையில் கூறுவர். ஒரே பழு மரத்தில் இரு குருவிகள் அமர்ந்துள் ளன. ஒன்று அமைதியாக இருக்க, மற்றொன்று கிளை தொறும் தாவிப் பழம் பறித்துண்டு, நோயுற்று வருந்திப் பின் தெளிவுறுகின்றது. இதில் முன்னது பரமாத்மா என்றும் பின்னது ஜீவாத்மா என்றும் கூறுவர். இவ்வுயிர் நாம் முதலில் கண்டபடி தான் செய்த வினையின்படியே

செயல்படும் என்பதை எல்லாச் சமயங்களும் ஏற்றுக் கொள்ளுகின்றன. மணிவாசகர் இறைவன் காட்சி தந்தமைக்கும் தன் வினை ஒத்து வந்தமையே காரணம் என்பர். 'என் வினை ஒத்தபின், கணக்கிலாத் திருக் கோலம் நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே' என்பது அவர் வாக்கு. எனவே வினை வயத்ததாகிய இந்த ஆன்மா என்றும் இறைவனைப் போன்று நிலைத்துள்ளது, இன்னதையும் அவனைப் போலவே காண முடியா நிலையிலும் பலப்பல வகையில் பலப்பல பெயர்களில் வாழ்கின்றது என்பதையும், அது தொடர்ந்து பல பிறவிகள் எடுத்து வருகின்றது என்பதையும் உணர்தல் வேண்டும். இனி அத்தகைய பிறவிகளில் தன்னையும் தலைவனையும் உணரும் மானிடப்பிறவியே சிறந்ததென்பதனையும் அதற்கு முன் அது பட்டு உழலும் பான்மையினையும் சிறிது காண்போம்.

கூர்தல் அறம் (Evolution theory) பற்றி முன்னரே கூறியுள்ளேன். ஆன்மா பல பிறவிகள் எடுத்து வரும் என்பதனை மணிவாசகர்,

> 'புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
> பல் விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
> கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
> வல்ல சுரராகி முனிவராய்த் தேவராய்ச்
> செல்லா நின்ற இத் தாவர சங்கமத்துள்
> எல்லாப் பிறப்பும் பிறந்தி ளைத்தேன்
> எம்பெருமான்'

என்கிறார். இதை அப்படியே விளக்கும் முகத்தான் அமெரிக்காவில் சிகாகோவில் உள்ள கண்காட்சியில் பல வகையில் காட்சிப் பொருள் வகையில் காட்டி விளக்கி உள்ளனர். மனிதனுக்கு முன் 'கல்' வருவது முறை என்றும் அதையே இன்றைய ஆய்வாளர் 'Focil' என்கின்றனர்,

என்றும் பல ஆண்டுகளுக்கு முன் திரு. டாக்டர். A. L. முதலியார் அவர்கள் எனக்குக் கூறியுள்ளார்கள். ஆன்மா இந்த வகையில் பல்வேறு பிறவிகள் எடுத்து, தான்செய்யும் வினைகளுக்கு ஏற்ப உயர்ந்தும் தாழ்ந்தும் பின் தெளி வுற்ற நிலையில் இறை உணர்வு பெற்று, இறைவனோடு நீக்கமற நிலைபெறும் உயர் பதவியினைப் பெறும் என்பர் சமயத் தலைவர்கள். இந்த மெய்ஞ்ஞான விளக்கத்தினை இன்றைய விஞ்ஞானிகளும் ஏற்றுக் கொள்ளுகின்றனர். பல்வேறு உலக, அண்ட கோள நிகழ்ச்சிகளையும் மாற்றங் களையும் ஆய்ந்து அறிந்து உணர்த்திய பேரறிஞர்— பெரிய விஞ்ஞானி ஐன்ஸ்டைன் இந்த மாற்ற நிகழ்ச்சி களைப் பற்றிக் கூறும் போது 'இவை எப்படி நிகழ் கின்றன என்று என்னால் கூறமுடிகின்றது; ஆனால் ஏன் நிகழ்கின்றன என்று கூறமுடியாது' என்கின்றார். ஆம்! அந்த விஞ்ஞான உச்சியிலேதான் மெய்ஞ்ஞானம் பிறக்கிறது. இது பற்றிச் சற்று விரிவாக அடுத்த நாள் 'அண்டச் சுழற்சியில்' காணலாம்.

முதலில் நீரில் உயிர் தோற்றம் உண்டாயிற்று; பின் நிலத்திலும் நீரிலும் கலந்து வாழும் ஆமை போன்றவை தோன்றின; பின் விலங்குகள்; பின் விலங்கொடு கலந்த மனிதன்—முதலில் வஞ்சகன்—பழிகாரன்—பின் தெளிந்த மனிதன்; அடுத்த சுழற்சி கீழாகிறது. ஆக்கத்திற்குப் பயன் பட வேண்டியதை அழிவுக்குப் பயன் படுத்தும் இன்றை வாழ்வு—எப்படியும் உலகை—கொடிய உலகை மாற்றி மாய்க்கக் கங்கணம் கட்டும் இயற்கைக்கு மாறுபட்ட இன்றைய செயல்—அடுத்து வரப்போவது முற்றிய அழிவு. ஆம்! இந்த வளர்ச்சியைத்தான் நம் 'தசாவதாரம்' காட்டு கின்றது என மேலே காட்டினேன்

இத்தகைய உயிர் வளர்ச்சியின் உச்சியிலே மனிதன் வாழ்கின்றான். ஓரறிவுடைய புல் தொடங்கி ஐயறி வுடைய விலங்கு பறவை என்பனவற்றையெல்லாம்

கடந்து, நல்லதன் நலனும், தீயதன் தீமையும் கண்டு தெளிந்து சமுதாயமாக வாழும் மனிதனாக நிற்கின்றான். ஆம்! அவனே வையம் வாழ வழிகாட்ட வேண்டியவன்— காட்டுகிறானா?

'மனிதனே' ஆன்ம வளர்ச்சியிலே—உயிர்த் தோற்ற நிலையிலே உச்சியில் உள்ளவன். ஆயினும் மனிதனிலும் கல் உண்டு—விலங்குண்டு—பறவை உண்டு. 'நெட்டுயிர்ப் போடு உற்ற பிணம்' என்று அவனை அறிஞர் ஏசுவர்.

'மரமனையர் மக்கட் பண்பு இல்லாதவர்' என்பர் வள்ளுவர். ஆம்! 'மனிதன்' வெறும் புறத் தோற்றத்தால் மட்டும் அமைபவனல்லன்; 'மனிதப் பண்பு' உடையவனே மனிதன். ஐம்பது ஆண்டுகளுக்கு முன் 'T.K.S. பிரதர்ஸ்' என அழைக்கப் பெற்ற T. K. சண்முகம் குழுவினர் 'மனி தன்' என்றே ஒரு நாடகத்தினை நன்கு நடித்தனர். பல்லாயிரக்கணக்கான மக்கள் கண்டு களித்தனர். 'மனிதன்' என்ற சொல்லுக்கு அவர்கள் கண்ட விளக்கம் சிறந்தது. '**ம**தமிலான், மா**ணி**யான், உத்**த**மன், மன்னிப் பா**ன்**' என்ற நான்கு சொற்களில் முதல் எழுத்து, இரண்டாம் எழுத்து, மூன்றாம் எழுத்து, இறுதி எழுத்து ஆகிய நான்கும் சேர்ந்ததே 'மனிதன்' என்று விளக்கம் தந்து, நாடகத்தினையும் அதற்கு ஏற்ற வகையில் அமைத் தனர். ஆம்! மனிதன் 'யான், எனது' என்ற செருக்கு இல்லாதவனாகவும் 'மயிர் நீப்பின் வாழாக் கவரிமான்' ஒத்து மானம் உடையவனாகவும் உத்தமப் பண்புகள் உடையவனாகவும் பிறர் இழைக்கும் கொடுமைகளை மன்னித்து, நொந்நொந்து அறனல்ல செய்யாதவனாகவும் விளங்க வேண்டும். அங்கேதான் 'மனிதம்' ஒளிவிடும். நீங்கள் இன்றைய மனிதனிடம் இப்பண்புகளைத் தேடி னால் ஏமாந்துதான் போவீர்கள். அதனால்தான் நாட்டி லும் உலகிலும் பல கொடுமைகள் நடந்து கொண்டே இருக்கின்றன.

'மனிதன்' தேவரினும் மேம்பட்டவன். 'தேவர் அனையர் கயவர்' என்பர் வள்ளுவர். 'அவரும் தாம் மேவன செய்தொழுகலான்' என்று காரணமும் காட்டுவர். எனவேதான் ஆழ்வார், இறைவனைப் பாடி அந்த இந்திரலோக வாழ்வு வேண்டாம் என்கிறார்.

'இச்சுவை தவிர யான் போய் இந்திரலோக
மாளும்
அச்சுவை பெறினும் வேண்டேன்
அரங்கமா நகருளானே'

என்கிறார்.

விரைவிடை இவரும் நினைப் பிறவாமை
வேண்டுநர் வேண்டுக மதுரம்
பெறுகுறு தமிழ்ச்சொல் மலர்நினக் கணியும்
பிறவியே வேண்டுவன் தமியேன்'

என சோணசைல மாலை ஆசிரியர் வேண்டுகிறார். எனவே மனிதப் பிறவியே உலக வாழ்வில் மட்டுமன்றித் தேவலோக வாழ்விலும் சிறந்தது என்பது தெளிவு.

'மனித்தப் பிறவியும் வேண்டுவதே இந்த மாநிலத்தே' என்பர் அப்பர்.

உயர்திணை, அஃறிணையைப் பிரித்துக் காட்ட நினைத்த இலக்கண நூலார் —பவணந்தி,

'மக்கள் தேவர் நரகர் உயர்திணை
மற்றுயிர் உள்ளவும் இல்லவும் அஃறிணை'

என்று உயர்திணையில் மக்களையே முதலில் கூறுகின்றார். இதற்கு உரை கூற வந்த சிவஞான முனிவர் மக்களாய்ப் பிறந்து புண்ணிய மிகுதியால் தேவராகவும் பாவ மிகுதி

யால் நரகராகவும் செல்வதால் 'மக்களை' முதற் கூறினார் என்பர்.

'வேறுள குழுவையெல்லாம் மானுடம் வென்றதன்றே' என்று கம்பர், மனிதனை அனைத்துக்கும் மேலாகக் காட்டி அவன் ஆற்றும் அறநெறியே வையத்தை வாழ வைக்கும் என்கின்றார். அவரைப் பாராட்டிய பாரதியும் 'கம்பன் என்றொரு மானிடன் வாழ்ந்ததும்' என்பர். ஆம்! 'மனிதனாகப் பிறந்த இராமன் நிறை மனிதனாக வாழ்ந்து வரலாறு படைத்துச் சென்றான். அவனுடைய மனிதப் பண்பினைப் பல பாத்திரங்கள் வாயிலாகக் கம்பர் நூல் முழுவதும் காட்டியுள்ளார் மேலும் தேவர்களோ—வேறு யாரோ இறைவனை வணங்கி, அவனோடு இரண்டறக் கலக்கும் பேரின்பப் பெருவாழ்வு வேண்டுமாயின் மனிதனாகப் பிறந்தே செல்ல வேண்டும் என்பது உலகறிந்த உண்மை. சிவப்பிரகாசர் இந்த உண்மையினைத் தன் 'பிரபுலிங்கலீலை'யில் நன்கு விளக்கியுள்ளார்.

கயிலையில் உமையும் இறைவனும் அமர்ந்த காட்சியினை நன்கு விளக்கிக் காட்டும் சிவப்பிரகாசர், அவர்களுக்குள் நிகழும் ஒரு பேச்சினை ஏட்டில் எழுதுகின்றார். அம்மையார், 'தேவ உலகத்தில் வாழும் தேவ கணங்களும் அவர்களைச் சுற்றிய பிறரும்' இறைவனை அடைய முடியுமா?' என்று கேட்கிறார். இறைவன் அது இயலாது; அவரும் பூமியில் மனிதனாகப் பிறந்து—நல்ல குடியில் பிறவி எடுத்து வாழ்வாங்கு வாழ்ந்து வழுவாது அறம் புரிந்து, நலம்கண்டு இறை உணர்வுடன் வாழ்ந்தாலன்றிப் 'பரமுத்தி' கிடைக்காது என்கின்றார்.

'போகபூமியில் போக தனுவினால்
பொருந்தல் ஆகாது
ஏகமாம் இன்ப சித்தி; இயம்புரில் கருமபூமி

ஆகமானது கொண்டன்றி ஆதலால்
ஞாலத்து எய்தி
யோகமாம் நெறியில் நின்றோர் உண்மை
சாதித்துக் கொள்வர்'

என்று இந்த மனிதப் பிறவியினை இறைவன் வாயிலாகவே விளக்குகின்றார்.

இம்மனிதப் பிறவியிலும், செம்மையும் தூய்மையும் வாய்மையும் சான்றாண்மையும் பெற்றால்தான் இறைவனை அடைய முடியும் என்பதனையும் சிவப்பிரகாசர் விளக்கத் தவறவில்லை 'நன்னெறி' எழுதி நாட்டுக்கு வழி காட்டியவர் அல்லவா அவர். ஆம்! அப்பன் கூறியதைக் கேட்ட அம்மை தன் அருகில்உள்ள தமோ குண மாயையை அழைத்து, 'நீ உலகில் பிறந்து இறைவனின் கூறுஆகிய அல்லமனைப் பற்றி வருக' என ஆணையிடுகின்றாள். ஆனால் அவளால் அது முடியாது என்பதைச் சிவப்பிரகாசர் ஓர் உவமையால் விளக்குகிறார். மாயை 'வல்லிதின் பற்றி ஈர்த்து வருகுவன்' என்று சபதம் செய்கிறாள். அது 'வேலை கவற உண்டிடுவல் என்று புல்லிய எறும்பு ஒன்று ஆற்றல் புகல்வது போலுமன்றே' என்கின்றார். ஆம்! ஒரு சிற்றெறும்பு கடல் நீர் முழுவதையும் கடலே வற்றுமாறு உண்பேன் என்று சபதம் செய்வது போல இருந்தது மாயையின் சபதம். இதனால் தமோ குண மாயையால் இறைவனைப் பற்ற முடியாது என முதலிலேயே விளக்கி விட்டார்.

பின் அவள் பிறந்து தவழ்ந்து தளர் நடையிட்டு வளரும் போதும் மற்றொரு உவமையால் விளக்குகிறார். நாம் நம் நிழலைப் பார்க்கிறோம். ஆனால் அதனை நம்மால் பற்ற முடியாது அல்லவா! அதே நிலையில் தான் மாயையும் இருந்தாள்.

'பரவு பெருஞ்சீர் அல்லமனைப் பற்றவந்த
மதியால்தன்
உருவ நிழலைப் பற்ற நினைத்து ஓடி ஓடிக்
கலுழ்ந்திடுவாள்'

என்கிறார் சிவப்பிரகாசர். ஆம்! அண்மையிலேயே இறைவனாகிய அல்லமன் அவள் முன் தோன்றுகிறான்—நிழல் தோன்றுவது போல. ஆனால் மனித உடம்பு—போக உடம்பு பெற்றும் அவளுடைய ஆணவப் போக்கால் அவனைப் பற்ற முடியாது நிலை குலைந்து தடுமாறுகிறாள். ஆயினும் பின் மனிதப் பண்புடன் மமதை அற்று தீங்கு நீங்கி, செம்மை நலத்தில் பிறந்து, மொழி பயின்று பின்னெல்லாம் இறைவனிடம் காதல் சிறந்து நின்ற அக்கமா தேவியார் அவ்விறைவனைப் பற்றிக் கொள்ளுகிறாள் என்று சிவப்பிரகாசர் உயிர் வாழ வேண்டிய வகையினை—தெளிந்த ஆன்மாவின் தன்மையினை விளக்குகிறார். எனவே வெறும் மனித உடம்புடன் மட்டுமன்றி உணர்வால், உற்ற செயலால் மனிதன் வாழ்வானாயின் அவனே 'இருவரையும் பெற்ற ஆன்மா' ஆவான். இந்த உண்மையினைத்தான் எல்லாச் சமயங்களும் நமக்கு எடுத்துக் காட்டுகின்றன. அதனால் வெறும் மனித உடம்பினை மட்டும் பெற்றால் போதாது; வள்ளுவர் காட்டியபடி எல்லா மனிதப் பண்புகளும் பெற்றால்தான் மனிதன் மனிதனாவான். 'நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து மறைமொழி காட்டிவிடும்' என்பர்.

'நிறைமொழி மாந்தர் ஆணையில் கிளர்ந்த
மறைமொழி தானே மந்திரம் என்ப'

என்பது தொல்காப்பியம். எனவே எல்லாம் நிறைந்த உலகம் போற்றும் நல்லவர்களாகவே வாழ்பவர் மனிதர் என்பது தெளியக் கிடக்கின்றது. இத்தகைய மனிதனுக்கு அடிப்படையாக வேண்டுவன நாம் மேலே கண்டபடி அன்பு, அறிவு, பண்பு, அருள் போன்றவையே.

'அன்பின் வழியது உயிர்நிலை அஃதிலார்க்கு
என்புதோல் போர்த்த உடம்பு'

என்றும்,

'அறிவினுள் எல்லாம் தலை என்ப' தீய
செறுவார்க்கும் செய்யா விடல்'

என்றும்,

'அருள் என்னும் அன்பீன் குழவி'

என்றும்,

'சான்றவர் சான்றாண்மை குன்றின்
இருநிலம்தான்
தாங்காது மன்னோ பொறை'

என்றும் இன்னும் பலவாகவும் வள்ளுவர் இம்மனிதப் பண்பினைக் காட்டுகின்றார் 'எத்தவத்தைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனம் இருக்கும் மோனத்தே' என்று மற்றொரு புலவர் கூறுவர். சீத்தலைச் சாத்தனார்,

'கொலையே களவே காமத் தீவிழை
உலையா உடம்பில் தோன்றுவ மூன்றும்
பொய்யே குறளை கடுஞ்சொல் பயனில்
சொல்லெனச் சொல்லில் தோன்றுவ நான்கும்
வெஃகல் வெகுளல் பொல்லாக் காட்சியென்று
உள்ளந் தன்னில் உதிப்பன மூன்றும்'

பத்துக் குற்றம் எனக்கூறி மனமொழி மெய்களால் வரும் குற்றங்களை நீக்கியவனே மனிதன் எனக் காட்டியுள்ளார். சிறந்த ஆங்கிலக் கவிஞனாகிய 'ரட்யாட் கிப்ளிங்' என்பவர் (Rudyard kipling 1865-1936) 'If' என்றே ஒரு பாடல் அமைத்து, அதில் மனித குணங்களை

யெல்லாம் காட்டி, அவற்றை முற்றும் கொண்ட மனிதனை, இறைவன் தானே வந்து 'என் மகனே! மனிதனே' என அழைத்து அருள்வான் என்கின்றார்.

அவர்தம் கருத்தமைந்த நல்ல உயர்ந்த பாடலை உடன் இங்கே இணைத்துத் தருதல் ஏற்புடைத்தாகும் என எண்ணுகிறேன். இதோ காணுங்கள்.

## I F

If you can keep your head when all about you
Are losing theirs and blaming it on you;
If you can trust yourself when all men doubt you
But make allowance for their doubting too;
If you can wait and not be tired by waiting
Or being lied about, don't deal in lies,
Or being hated don't give way to hating
An yet don't look too good, talk too wise.

If you can dream and not make dreams your master;
If you can think - and make thoughts your aim;
If you can meet with Triumph and Disaster
And treat those two impostors just the same;
If you can bear to hear the truth you've spoken
Twisted by knaves to make a trap for fools,
Or watch the things you gave your life to, broken,
And stoop and buil'em up with worn-out tools.

If you can make one heap of all your winnings
And risk it on the turn of pitch-and-toss,
And lose, and start again at your beginnings
And never breathe a word about your loss;

If you can force your heart and nerve and sinew
To serve your turn long after they are gone,
And so hold on when there is nothing in you
Except the will which says to them: "Hold on!"

If you can talk with crowds and keep your virtue,
Or walk with kings-not lose the common touch,
If neither foes nor loving friends can hurt you,
If all men count with you, but none too much;
If you can fill the unforgiving minute
With sixty seconds' worth of distance run,
Yours is the Earth and everything that's in it,
And-which is more-you'll be a Man, my son.

Rudyard Kipling (1865 - 1936)

மேலே கூறிய மனிதன் புகழுடன் மனிதனாகப் பிறந்தால், அதில் வரும் துன்பங்களை நீக்கி, இறையருள் பெற்று வாழ்வதானால் பிறவி நல்லதே, இல்லையானால் பிறவாதிருப்பதே மேல் என்றும், பற்றற்ற பரம்பொருளைப் பற்றும் உள்ளத் துறவும் உலகத்துறவும் நல்லது என்றும் அறிஞர் கூறுவர்.

'வேதநூற் பிராயம் நூறு மனிதர்தாம் புகுவரேனும்
பாதியும் உறங்கிப் போகும் நின்றதில் பதினையாண்டு
பேதை பால கனதாகும் பிணி, பசி, மூப்பு, துன்பம்
ஆதலால் பிறவி வேண்டேன் அரங்கமா தருளானே'

என்று தொண்டரடிப் பொடி ஆழ்வார் கூறுவார்.

'மழலையைப் பெறுநாள் துன்பம் வளர்த்திடு
நாளும் துன்பம்
விதலை நோய் அடையில் துன்பம் வியன்
பருவத்தும் துன்பம்
கதமுறு காலர் வந்து கைப்பற்றில்
கணக்கில் துன்பம்
இதமுறல் எந்நாள் சேயால்? என்றைக்கும்
துன்பம் ஆமால்
அல்லலால் செல்வம் துன்பம் அதனில்
நல்குரவு துன்பம்
கல்வி ஆங்காரம் துன்பம் கற்றிலனாகில்
துன்பம்
மல்லன் மா ஞாலம் தன்னில் வலிமிகில்
மதத்தால் துன்பம்
இல்லையேல் வலியோர் தம்மால்
ஈடழிவுறலால் துன்பம்
சிறப்புறு நோயால் துன்பம் செடிகொள் மூப்பு
அதனால் துன்பம்
மறப்புறத்து இயக்கம் செய்யும் மரண
வேதனையால் துன்பம்
பிறப்பவர் எக்காலத்தும் பெறுவது
துன்பமானால்
துறப்பதே கருமம் துன்பப் பிறவியாம்
துயரம் தீர'

என்பது குசேலர் வியாக்கியானம்

இத்தகைய பண்புகளை விளக்கவே நம் இதிகாசங்களும் புராணங்களும் பிற சமய இலக்கியங்களும் வேத நூல்களும் உண்டாயின. இராமாயணம் பாரதம் போன்ற பெருங்காப்பியங்களிலும் பிற இலக்கியங்களிலும் இத்தகைய நல்ல மனிதர் தன்மையினையும் நிலையினையும் நன்கு காண்கிறோம். ஒரு சில கண்டு, இரண்டினையும் பெற்ற ஆன்மாவினை இறைவன் எவ்வெவ்

வாறு வந்து ஆட்கொள்ளுகின்றான் என்பதையும் சிறிது நோக்கி, இன்றைய செயலை முடிப்போம்.

இறைவன் தன்மையை விளக்கும் இரணியப் படலம் கம்பரால் இராமாயணத்தில் புகுத்தப்பட்டது என்பதை முன்னரே கண்டோம். இரணியன் போன்றவர்களை இறைநிலை உறுமுன் இறைவன் அவர்களை எப்படி எப்படி ஆட்கொண்டான் எனக் காட்டியுள்ளேன். பிரகலாதனின் தெய்வ நெறி அவனை மட்டுமன்றி அவன் தந்தையையும் மறக்கருணை வழி ஆட்கொண்டது. சில தவறுகளைச் செய்தால், அவை செய்பவனை மட்டுமன்றி அவன் குலத்தினையே அழிக்கும் என்பர் திருவள்ளுவர். அப்படியே சில நல்லவர்கள் செயலினாலே அவர்தம் குலமே வாழ்வு பெறும் என்பதை மனித நிலையில் மட்டு மன்றி, பிற உயிர் நிலையிலும் அறிஞர் எடுத்துக் காட்டு வர். நாரைக்கு முத்தி, பன்றிக்கருள், கரிக்குருவிக்கு உபதேசம் பற்றி நாம் காண இருக்குமிடத்தில், அவற்றால் அக்குலங்களே நலம் பெற அவை வேண்டும் வரங்களைக் காணமுடியும். இங்கு வேறு வகையான நல் உள்ளங் களைக் காணலாம்.

கம்பரைப் போலவே வில்லிபுத்தூராரும் வியாசர் சொல்லாத ஒரு சருக்கத்தைப் புதிதாகப் படைக் கின்றார். 'பழம் பொருத்து சருக்கம்' என்பதாகும் அது. காட்டில் இருக்கும் போது ஒரு முனிவர் தவம் செய்து பல ஆண்டுகளுக்கு ஒருமுறை பழுக்கும் பழம் முதிர்ச்சி அடை யும் போது, அதைக் கொண்டு உண்டு, மறுபடி தவஞ் செய்வார் போலும். ஒருமுறை கனிந்து நின்ற அப்பழத் தைப் பறித்து உண்ணுவதற்கு, அதற்கு முன் நீராட முனிவர் சென்ற போது, அர்ச்சுனன் வீழ்த்துகிறான். அது கண்ட கண்ணன் அதன் சிறப்பினைக் கூறி, முனிவரின் சாபத்துக்கு அனைவரும் ஆளாக வேண்டும் என எச்சரித் தார். அது கேட்ட தருமனும் பிறரும் அஞ்சி, அக்

கொடுமையிலிருந்து மீள வழி இல்லையா என அவனையே வேண்டிக் கேட்டனர். அவர் ஐவரும் திரௌபதியும் தத்தம் உள்ளத்தில் உள்ள உண்மையான கருத்துக்களைச் சொன்னால் பழம் மறுபடி மரத்தில் ஒட்டிக் கொள்ளும் என்கிறார். இதனால் கண்ணன் உலகுக்கு ஓர் உண்மையை உணர்த்த நினைக்கிறார். நாம் கண்ணில் காணும் பொருள்களின் தோற்றத்திற்கும் செயலுக்கும் உள்ள நெகிழ்வுக்கும் மாறுபாடு உண்டு என்பதை உணர்த்த நினைக்கிறார் அத்தகைய உள்ள நெகிழ்வு தான் மனிதனை மனிதனாகக் காட்டுவது என்பதையும் புலப்படுத்துகிறார்.

'எத்தவத்தைச் செய்தாலும் ஏதவத்தைப்
பட்டாலும்
முத்தர் மனம் இருக்கும் மோனத்தே—
வித்தமாய்க்
காதி விளையாடி இருகை வீசி வந்தாலும்
தாதிமனம் நீர்க்குடத்தே தான்'

என்று உவமை வாயிலாக மௌனத்தில் மனம் பதிந்த முத்தர் நிலையை நமக்கு இப்பாடல் அறிவுறுத்துகின்றது. ஆம்! ஒருவர் புறச்செயல்களைக் கண்டு அவரை இகழ்தலாகாது.

'கணை கொடிது யாழ்கோடு செவ்விது
ஆங்கு அன்ன
வினைபடு பாலால் கொளல்'

என்று வள்ளுவர் கூறியாங்கு வினைவழியால் அன்றிப் புறத்தோற்ற நெறியால் அறுதியிடுதல் தக்கதாகாது. இதே நிலையில் பழம் பொருந்துவதற்குப் பாண்டவரில் இருவர் கூறிய கூற்றுக்களைக் காணின் புறத்தில் மாற்றாரை மாய்க்கும் கோலத்தில் காணும் அவ்விருவர் தம் உள்ளப் பொலிவு எத்தகையது என்பது விளங்கும்.

பழம் பொருந்துவதற்குப் பலம் பொருந்திய வீமன் தன் உள்ளக் கிடக்கையினை உணர்த்துகிறான்.

'பிறர் மனைவியரைப் பெற்ற தாய் எனவும்
பிறர் பொருள் எட்டியே எனவும்
பிறர்வசை உரைத்தால் பெருமை அன்று
எனவும்
பிற துயர் தன் துயர் எனவும்
இறுதியே வரினும் என் மனக்கிடக்கை
எம்பிரான் இவை என உரைத்தான்
மறலியும் மடியும் மாறுமல் இயற்கை
வலிமைகூர் வாயுவின் மைந்தன்'

எனக் காட்டுவர் வில்லியார். ஆம்! இயமனையும் மாய்க்கும் வீரமுடைய—வலிவுடைய பீமன் வாயில் இருந்துதான் இச்சொற்கள் வருகின்றன. 'இறுதியே வரினும் என் மனக் கிடக்கை எம்பிரான் இவை' எனக் கண்ணனுக்குச் சொல்லுகிறான். கண்ணனுக்கு அவன் உள்ளும் புறமும் நன்கு தெரியும். அவரிடம் உள்ளொன்று நினைத்துப் புறமொன்று பேசமுடியாது. எனவே பீமன் உள்ளத்து உள்ளதையே சொன்னான் எனக் காட்டுகின்றார். ஆம்! அவன் துரியோதனனைக் கொன்று, தன் மனைவியின் குழல் முடித்து, நாட்டை ஆள நினைப்பதாக அவன் சொல்ல வில்லை. புறத்தோற்றத்தில் அவ்வாறு காட்சி அளிக்கின்ற பீமனின் உள்ளம் எவ்வளவு தூய்மையானது என எண்ணிப் பாருங்கள். 'பிறர் மனைவியரைத் தாயாகவும், பிறர் பொருளை எட்டியாக ஒதுக்கித் தள்ளுவதாகவும், பிறரைப் பழித்தல் பெருமைக்கு மாறுபட்டதாகவும், பிறர் துயரைத்தன் துயராகக் கொண்டு அதைத் துடைக்க நினைப்பதாகவும்' தான் அவன் உள்ளம் எண்ணுகிறது. இதுதானே மனிதப் பண்பு! பீமன் போரில் வெற்றி கொண்டான் என்றால் அதற்குக் காரணம் அவன் வலி,

கதை என்பன அல்ல. இத்தகைய நல்ல உள்ளமே அவனை வெற்றிப் பாதைக்கு அழைத்துச் சென்றது.

அப்படியே மற்றொரு சகோதரனாகிய சகாதேவன் கூறியதைக் காண்போம்.

'ஒருமொழி அன்னை வரம்பிலா ஞானம்
உற்பவ காரணன் என்றும்
தருமமே துணைவன் கருணையே தோழன்
சாந்தமே நலனுறு தாரம்
அரியதின் பொறையே மைந்தர் மற்றிந்த
அறுவரும் அல்லது யார் உறவு என்று
இருவரில் இளையோன் மொழிந்தனன்
தன்பேர் இதயமா மலர்க்கிடை எடுத்தே'

என்று வில்லியார், அவன் இதய மலரிலிருந்து அவனுடைய உள்ளக்கருத்து—உண்மைக் கருத்து வெளிவரக் காண் கிறார். சத்தியத்தையே தாயாகவும், அறிவையே தந்தை யாகவும், கருணையினையே துணைவனாகவும், செயலாற் றும் கரும நெறியே தோழனாகவும், சாந்த நிலை யினையே வாழ்க்கைத் துணையாகவும் பொறுமை யினையே மக்கட் செல்வமாகவும் அன்றோ அவன் உள்ளம் கொள்ளுகின்றது. போக்களத்து — குரு ஷேத்திரத்து—மாற்றாரை மடிப்பதே வாழ்வு என அவன் கருதவில்லை. பிற கொடுமைகளை அவன் உள்ளம் எண்ணவில்லை. அவன் நிறை மனிதன்—எனவே இந்த நல்ல உறவினர்களையே அவன் கொள்ளுவான். அது மனிதப் பண்பல்லவா! சகாதேவன் பாரதப்போரினை விரும்பவில்லை. அதைத் தடுக்கவே நினைத்தான். தனி யாக அவனைக் கண்ணன் அழைத்து அவன் கருத் தினைக் கேட்கிறான். ஆனால் அவன் கருத்துப்பட நடக்கப் போவதில்லை என்பதையும் கண்ணன் ஒரு முடி வோடே அங்கே வந்துள்ளான் என்பதையும் நன்கு உணர்ந்த ஞானி—சகாதேவன்.

'திருவுளத்துக் கருத்தெதுவோ அது எனக்கும்
கருத்தென்றான் தெய்வமன்னான்'

என்று வில்லியார் அவனைத் தெய்வமாக்கி அவன் கருத்து, கண்ணன் எண்ணியபடி நடக்கப் போவதாகக் காட்டுகின்றார்.

பாரதப் போர் நடவாதிருக்க வழி உண்டா என்று கண்ணன் அவனை மறுபடியும் கேட்கின்றான். அவனும் தயங்காது உண்டு என உணர்த்துகின்றான்.

'பாராளக் கன்னன், இகல் பார்த்தனை முன்
கொன்று, அணங்கின்
காரார் குழல் களைந்து, காலில் தளை பூட்டி
நேராகக் கைபிடித்து நின்னையும் யான்
கட்டுவனேல்
வாராமல் காக்கலாம் மாபாரதம் என்றான்'

என்பது வில்லியார் வாக்கு. ஆம்! அவன் தூய உள்ளம் உற்றார் மற்றார் என்னாது, நாடுநலிவின்றி—போரின்றி வாழ வழி காணுகின்றது. ஆயினும் பாரதத்தை நடத்தி நலம் காண நினைத்த கண்ணன் எண்ணமே நிறைவேறுகின்றது.

இங்கே மற்றொரு நிகழ்ச்சியினையும் வில்லியார் குறிக்கின்றார். 'இறைவன் தொண்டர் உள்ளத்தொடுக்கம், தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும் பெரிதே' என்று, உயிர்களுள்—ஆன்மாக்களுள் தொண்டரே சிறந்தவர் என்பதையும் அவர் உள்ளத்தே இறைவன் என்றும் நிலைத்திருப்பான் என்பதையும் அத்தகைய தொண்டர் இறைவனிலும் பெருமை உடையவர் என்பதையும் ஔவையார் கூறுகின்றார். சுந்தரமூர்த்தி சுவாமிகளும் இறைவன் கூறத் திருத் தொண்டர் தொகையே பாடியுள்ளார். இறைவனே 'பெருமையால் எம்மை ஒப்பார்—பேண

லால் எம்மைப் பெற்றார்' என்று அவர் பெருமையைக் காட்டுகின்றார் இத்தகைய உண்மையினை விளக்கவும், இதற்கு மேலாக, அனைவரையும் முடிக்கத் திட்டமிட்ட கண்ணனிடமிருந்து தம் ஐவரையும் காப்பாற்ற வேண்டியும் அடுத்த நிகழ்ச்சி அமைகின்றது.

பாரதம் வராமல் காக்க வழிகூறிய சகாதேவனை நோக்கிக் கண்ணன்,

'முன்னை நீ கூறியவை எல்லாம் முடித்தாலும்
என்னைநீ கட்டுமாறு எவ்வாறு?'

எனக் கேட்கின்றான்: தூய உளமுடைய மனிதனாகிய சகாதேவன்,

'உன்னை நீதானும் உணராதாய் உன்வடிவம்
தன்னை நீ காட்டத் தளைத்திடுவன் யான்'

என்கின்றான். உடனே கண்ணன் பல கோடி கண்ணன்களாக எங்கும் நிறைந்து நிற்கின்றான். நல்லான்மாவாகிய சகாதேவன் அவற்றுள் மூல புருடனின் நிலை உணர்ந்து அவன் அடியிணைகளைக் கட்டிப் போடுகின்றான்.

'மாயவனும் அன்பன் மனமறிவான்
கட்டுக என்று
ஆய வடிவு பதினாயிரம் கொண்டான்
தூயவனும் மூலமாம் தோற்றம் உணர்ந்து
எவ்வுயிர்க்கும்
தாய அடியிணைகள் தன்கருத்தினால்
பிணித்தான்'

என்றார் வில்லியார். சகாதேவனைத் தூயவன் என்றும், இறைவனின் மூல நிலையினை அவன் கருத்தினால் கட்டினான் என்றும் கூறுகின்றார். இதனால் வெறும்

மனிதனாகத் தோற்றத்தால் மட்டும் இருந்தால் அம்மை அப்பன் வரமாட்டான் என்றும் தூய உள்ளமே அவன் தங்கும் இடம் என்றும் காட்டுகின்றார். இறைவனை அறியும் நற்கல்வி அறிந்தவன் உள்ளத்தே அவன் தங்குவான் என்ற உண்மையினை அப்பரடிகள்,

'கல்லாதார் மனத் தணுகாக் கடவுள்
தன்னைக்
கற்றாரும் உற்று ஓரும் காதலானை'

என்கின்றார். ஆம்! இங்கே சகாதேவன் உற்று ஓர்ந்து பிடித்துப் பிணைத்து விட்டான். இனி, கண்ணன் அவன் பிடி விட்டாலன்றி வெளிவர முடியாது. அன்பர் உளக் கட்டு அத்தகையது. இங்கேதான் மற்றொரு கருத்தை வில்லியார் குறிப்பாகக் காட்டுகின்றார்.

கட்டப்பெற்ற கண்ணன் அங்கே தனிமையில் நடந்த நிகழ்ச்சியை—சகாதேவனால் கட்டுப்பட்ட நிகழ்ச்சியை மற்றவர் அறியின் தன்னிலை கெடுவதன்றி வந்த காரியமும் நிறைவேறாது எனக் கண்டு, அன்பனிடம் ஒரு வரம் கேட்கின்றார்.

'சகாதேவா! இங்கே நடந்தவற்றை வெளியே யாருக்கும் சொல்லமாட்டேன்' என்று சத்தியம் செய்து கொடு என்கின்றார். அவனும் சம்மதிக்கிறான். ஆயினும் அதற்கு முன் கண்ணனிடம் மற்றொரு வரம் கேட்கின்றான். 'வருகின்ற பாரதப் போரில் அனைவரையும் அழிக்க நீ திட்டமிட்டுள்ளாய்—எனவே எங்கள் ஐவரையும் காப்பதாகச் சத்தியம் செய்து தருதல் வேண்டும்' என்று வரம் கேட்டான். இருவரும் அவரவர் கேட்ட வரத்தைப் பெறுகின்றனர். பின் பாரதப் போர் நடைபெறுகின்றது. இவற்றால் இருவரையும் பெற்ற ஆன்மா தூய்மையதாய் நாடு வாழத் தான் வாழ நினைப்பதாய் இறைவழியே தன்வழி என வாழ்வதாய் அமைந்தால்

அத்தகைய நல்லவர் வாழும் நாடு—உலகம் நலமுறும் என உணர்தல் வேண்டும். உணர்ந்து அந்த நல்ல நெறியில் இன்றைய மனித சமுதாயம் வாழத் தொடங்கினால் உலகம் சிறந்த பூஞ்சோலையாக விளங்கும் என்பது தெளிவு.

இருவரையும் பெற்ற ஆன்மா அவ்விருவராலும் அவர்களால் ஆட்கொள்ளப் பெற்ற தூய்மை உள்ளமும் எவ்வுயிரையும் ஒத்து நோக்கும் பண்பும் உடைய மனிதர்களாலும் உண்டாகும் நலன்களையும் அவற்றால் ஆன்மா பெறும் நலங்களையும் நிலைகளையும் ஒரு சிறிது காணலாம். முல்லைக்குத் தேர் கொடுத்த பாரியும், மயிலுக்குப் போர்வை கொடுத்த பேகனும் எவ்வுயிரையும் ஒத்து நோக்கி ஆன்ம நலம் கண்டவர்கள். அவர்கள் உலகம் உள்ளளவும் வாழ்வதோடு முல்லையும் மயிலும் என்றென்றும் இலக்கிய உலகில் நிலை பெற்று வாழும் தகுதி பெற்றுவிட்டன அன்றோ! இந்த உண்மை நான் மேலே காட்டிய 'மக்கள் தாமே ஆறறிவுயிரே', 'ஆறறிவதுவே அவற்றொடு மன்னே' என்ற தொல்காப்பியச் சூத்திரங்களின்படி நல்லதன் நலனும் தீயதன் தீமையும் உணர்ந்து நல்லதே செய்யும் நல்லான்மாக்களே உணர முடியும். மனிதனைப் போலப் புறத்தோற்றம் இல்லையாயினும் 'ஒருசார் விலங்கும் உளதென மொழிப' என்ற சூத்திரப்படி மனித உணர்வு உடைய விலங்குகளுக்கும் இந்நிலை தெரியும். அதனாலேயே, 'நாயனையார் நட்பு' 'குளிர்நிழலைத் தந்து மறைக்கும் மரத்தின்' நிலை பெரியோர்களால் பாராட்டப் பெறுகின்றது. 'எவ்வுயிரும் பராபரன் சன்னிதியதாகும், இலங்கும் உடல் அனைத்தும் ஈசன் கோயில்' என்று வள்ளலாரும் பாடியுள்ளாரே.

அம்மை அப்பர் மனித ஆன்மாக்களுக்கு உதவிய வரலாறுகளே பெரியபுராணம் போன்ற இலக்கியங்கள். 'குகன் எனும் மனிதனுக்கும் 'சடாயு' எனும் பறவைக்கும்,

கிட்கிந்தை வானரங்களுக்கும் அரக்கனாகிய வீடண னுக்கும் உதவிய வரலாறே இராமாயணம். இன்னும் குமரகுருபரர் போன்றார் தம் பிறவியிலேயே ஊமையாக இருந்து கந்தர் கலிவெண்பாவால் பேசும் திறம் பெற்று எண்ணற்ற காவியங்கள் இயற்றிய வரலாறுகள் அம்மை அப்பரின் அருள் நலன்களேயாம்—இருவரையும் பெற்ற ஆன்மாக்கள் பெறும் வாழ்வு நிலைகளேயாம்.

மனிதனாக வந்த இராமன் மனிதனாகவே நடித்தான். அவனுக்குத் தெரியாதா வாலியின் வலிமை. இராமன் தலையசைத்தால்—வாலி வாயசைத்தால் இராவணன் சீதையைக் கொண்டு வந்து சேர்த்திருப்பானே! ஆனால் இராமன் மனிதனாகவே நடித்தான். எனவே வாலியை வதைத்தான். குரங்காகிய வாலி, மனிதனாகிய இராம னுக்கு அறிவுரை கூறியது மட்டுமன்றி மனிதனினும் மேம் பட்டுத் தன்னைக் கொல்லக் காரணமான தம்பியை அந்த இராமனிடமே அடைக்கலந்தந்து அவன் மேல் பழி வரா மல் பாதுகாக்கவும் சொல்லுகின்றான். இது அம்மையப் பர் தம் அருள் நலமேயாகும். வாலி இராமனை நோக்கி,

'வாய்மையும் மரபும் காத்து மன்னுயிர்
துறந்த வள்ளல்
தூயவன் மைந்தனே! நீ பரதன்முன்
தோன்றினாயே'

'அரக்கர் ஓர் அழிவுசெய்து கழிவரேல்
அதற்கு வேறோர்
குரக்கினத் தரசைக் கொல்ல மனுநெறி
கூறிற்றுண்டோ
இரக்கம் எங்கு உகுத்தாய் அப்பா?
என் பிழைப்பு என்ன கண்டாய்?
பரக்கநீ பழியைப் பூண்டால் புகழையார்
பறிப்பார் அப்பா'

என்று கூறி, கடைசியாகத் தன் தம்பி சுக்கிரீவனையே அடைக்கலமாகத் தந்து காக்கின்றான்.

'இன்னும் ஒன்று உரைப்ப துண்டால்
எம்பியை உம்பியர்கள்
தம்முனைக் கொல்வித்தான் என்று
இகழ்வரேல் தடுத்தி தக்கோய்'

என்று கூறி மனிதரினும் மேம்பட்டு உயர்ந்து நிற்கின்றான். அவனை அடைக்கலமாகத் தந்ததை,

'மன்னவர்க்கு அரசன் மைந்த மற்றுஇவன்
சுற்றத்தோடும்
உன் அடைக்கலம் என்று உய்த்தேன்'

என்று கூறி இராமனினும் மேம்பாடு உடையவனாகக் காட்சி தருகின்றான். இந்நிலையில் விலங்கிடைப்பட்ட ஆன்மாக்களும் இறையருளால் இருவரின் அருளால்—உயர்நிலை எய்திய காட்சி அரிய காட்சியாகும்.

இறைவன் மனிதருக்கு மட்டுமன்றி மற்றைய உயிர்களையும் அணைத்து அருள்பவன் என்பதைப் பரஞ்சோதியார் மூன்று சான்றுகளோடு விளக்குகிறார். கரிக் குருவிக்கும் நாரைக்கும் முத்தி அளிக்கின்றான், பன்றிக் குட்டிகளுக்குத் தானே தாய்ப் பன்றியாகி முலை தருகின்றான்; பின் அவர்களை அமைச்சர்களாகவும் ஆக்குகின்றான்.

இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றவர் தம்மை மறந்து—தரணியை—சமுதாயத்தை நினைப்பர் என்ற உண்மையினைக் கரிக்குருவி, நாரை இவற்றின் வாயிலாகப் பரஞ்சோதியார் நமக்கு உணர்த்துகிறார். இறைவன் அருள் பெற்ற கரிக்குருவி—'வலியை' என்று பெயரைப் பெற்ற அச்சிறு குருவி 'தான் பெற்ற இன்பம்—

பெயர் தன் இனமெலாம் பெறுக—பெறுக இவ்வையகம்' என எண்ணுகிறது. உடனே இறைவனை நோக்கி,

'வலியை என்பது என் மரபினோர்க் கெலாம்
பொலிய வேண்டும் எப்போதும் நீஎன
ஒலிய மந்திரம் ஓதி ஓதி நான்
கவியை வெல்லவும் கருணை செய்குவாய்'
(17)

என வேண்டுகிறது. 'வேண்டுவார் வேண்டுவதே ஈவான் கண்டாய்' என்ற அப்பர் வாக்குக்கு அருஞ்சான்றாக உள்ள இறைவன் அருள் செய்கின்றான். இந்தக் குருவியின் சிறப்பினை உலக உயிர்கள்—ஆன்மாக்கள் கொள்ளின் எத்துணை நலமுண்டாகும் என எண்ணிய பரஞ்சோதியார் பாடுகின்றார்.

'இக்கரிக்குருவிதான் நோற்று எய்திய
வரத்தைத் தன் போல்
ஒக்கலும் எளிதாய் எய்தப் பெற்றதால்;
உலகில் மேன்மை
தக்கவன் ஒருவன் வாழத் தன்கிளை
வாழ்வது என்று
மிக்கவர் எடுத்துக் கூறும் பழமொழி
விளங்கிற்றன்றே
(22)

என்பது அவர் வாக்கு. ஆம்! இறையருள் பெற்றார் 'எல்லாரும் இன்புற்றிருக்க நினைக்கும்' மேலான உள்ளம் உடையவர். இதுவே இருவரையும் பெற்ற—பெற்றெடுத்த ஆன்மாவின் சித்தி இலக்கணம்.

இனி நாரையைப் பற்றிக் காண்போம். (இரண்டிலும் முன் பகுதியாக உள்ள இறைவனைப் போற்றும் வரலாறுகள் விரியும் எனக்கருதி இங்கே எடுத்துக் காட்டவில்லை)

இறைவனிடம் நாரை – நலம் பெற்ற நாரை வரம் வேண்டு கின்றது. மதுரை அன்னையின் அருட்குளத்தில் மீன்கள் இல்லையல்லவா! அதற்கு அந்த நாரையின் தவமும் வரமுமே வழியாக அமைந்தன. தான் மட்டுமன்றி, தன் இனம் மட்டுமன்றி, தன் போன்ற பறவை இனமே அக்குளத்தில் உண்டாகும் மீன்களை உண்ணின் பழிவந்து சாருமே என்று அந்த நாரை கருதுகிறது. அதற்கு முத்தி அளித்த இறைவன் அதன் உள்ளத்தைத் தூய்மைப் படுத்தி விட்டான். என்றென்றும் பறவைக் கூட்டங்களுக்குப் பழி வந்து சேரா வகையில் அதில் மீன்களே உண்டாகா வரத்தை நாரை கேட்கிறது. அப்பனும் அருள் செய்கின் றான்.

'வள்ளல் என்மரபு உள்ளவும் மற்றைய
புள்ளும் இந்த புனிதமலர்த் தடத்து
உள்ள மீனுயிர் உண்ணின் எக்காலமும்
தள்ளொணாப் பழி வந்து சாருமே'

(20)

எனக் கூறி,

'என்றும் இத்தட மீன்இலா வகைநீ
நன்று சால்வரம் நல்கென' வெள்ளிமா
மன்று ளானும் வரம்தந்து போயினான்
சென்று நாரை சிவலோகம் சேர்ந்ததால்'

(21)

இவ்வாறு நாரைக்கு முத்தி அளித்த படலத்தில் பரஞ் சோதியார் கூறி, அதனால் அம்மையப்பர் அருள் நிலை யினை எண்ணி வியக்கின்றார்.

'தன்கிளை அன்றி வேறு பறவைகள் தாமும் தன்போல்
நல்கதி அடைய வேண்டிற்றே கொல்! இந்நாரை செய்த

அன்பினில் வியப்போ! ஈசன் அருளினில்
வியப்போ அன்பர்க்கு
இன்புறுவான ஈசன் அன்பினுக்கு எளிதே ஐய'
(24)

எனத் தன்னை மறந்து பாடுகின்றார். கரிக்குருவி தன் இனத்துக்கு மட்டும் வரம் கேட்டது. நாரையோ அதையும் கடந்து தன் இனமாகிய நாரைகள் மட்டுமன்றி வேறு உள்ள பறவைகள் இனங்கள் அனைத்தையும் உள்ளடக்கி வரம் பெற்றுச் சிறந்தது. இவ்வாறு இருவரையும் பெற்ற ஆன்மா பேருலகையே என்றும் போற்றும்.

இனி, இறைவனாகிய அம்மையப்பன் 'தாயாய் முலையைத் தந்து பன்றிக் குட்டிகளையும் பாதுகாத்த ஒன்றைக் கூறி அமைவோம். மதுரைக்கடுத்த சிற்றூரில் வாழ்ந்த சுகலன், சுகலை என்பாரும் தம் பன்னிருபுதல் வரும், ஒரு நாள் ஐந்தவித்து அருந்தவம் ஆற்றிய ஒரு பெரியவரை நகைத்துக், கைத்தலம் புடைத்து நிற்க, அவர் அபபன்னிருவரையும் பன்றிக் குட்டிகளாகச் சபித்தார். பின்பு தெளிவுற்ற அவர்கள், அவரை வணங்கிச் சாப நீக்கம் வேண்ட அவரும், நீங்கள் பன்றிக் குட்டிகளாகப் பிறக்கும் போது மதுரை ஏகநாயகனே தாயாக வந்து உங்களுக்கு அருள் செய்வான் என்று சாபநீக்கம் தந்தருளினார். ஆக, சாபத்திலும் அருள் நலம் கிட்டிற்று நல்லவர் சாபம் நலம் தரும் அல்லவா! அவர் கூறியது.

'என்னையாளுடைய கூடல் ஏகநாயகனே
உங்கட்கு
அன்னையாய் முலை தந்து ஆவி அளித்துமேல்
அமைச்சர் ஆக்கி
பின்னை ஆனந்த வீடு தருமெனப்
பெண்ணோர் பாகம்
தன்னை ஆதரித்தோன் சொன்னான்
பன்னிருதனையர் தாமும்'

என்று கூறும்போது, இறைவனைப் 'பெண்ணோர் பாகம் தன்னை' என்று அவன் அம்மையப்பனாக அருளும் காட்சியைக் காட்டி, அவன் கருணையைப் போற்று கின்றார்.

மதுரையில் ஒருநாள், பாண்டியன் படையோடு வேட்டையாடச் செல்கின்றான். அப்பகுதிக்குத் தலைமை தாங்கியிருந்த பன்றி அரசன் அதைக் கேள்வியுற்று, தானே அப்படையை எதிர்க்க முன் வருகின்றது. அப் பன்றியும் அதன் பேடையும் பேசும் பேச்சு, உயிரினத்தில் எங்கோ இருக்கும் அவை மனித ஆன்மாக்களுக்கு அறி வுறுத்தும் வகையில் அமைகின்றது. இங்கே அது சற்றே புறம்பாக உள்ளது எனினும் அதன் தன்மை கண்டு தாமும் உய்ய வழி உண்டாதலால்—எப்படி அம்மை அப்பர் இணைந்துள்ளனரோ அப்படியே அவை இரண்டும் இணைந்து செயல்படு நிலை நமக்குப் பாடமாக அமை கின்ற காரணத்தால் இங்கே சொல்ல நினைக்கின்றேன்.

போருக்குப் புறப்படுகின்ற ஆண் பன்றி தன் துணையை நோக்கி,

'இன்று பாண்டியனைப் போரிட்டு
இருஞ்சம ராடி வென்று
வன்திறல் வாகையோடு வருவனேயோ!
அன்றிப்
பொன்றுவனேயோ! நீ உன் புதல்வரைப்
பாதுகாத்து
நன்று இவண் இருத்தி என்ன நங்கைப் பேடு
இன்ன கூறும்'
(25)

'ஆவி அங்கு ஏக இந்த ஆகம் இங்கு
இருப்பதேயோ
பாவியோ மேனாள் இந்தப் பறழினை வகுத்த
தெய்வம்
மா அமராடி வென்று வருதியேல் வருவன்;
அன்றி
நீ விளித் திடத்து மாய்வன் நிழலுக்கும்
செயல் வேறு உண்டோ?'

(25)

இந்த இரு பன்றிகளின் குழந்தைகளே அந்தப் பன்றிக் குட்டிகளும். தலைவனாகிய பன்றி தான் போர் மேல் செல்லுவதாகவும், தலைவியாகிய பெண் பன்றியை அங்கே வீட்டில் தங்கி, குழந்தைகளைக் காத்துக் கொண் டிருக்குமாறும் கூறுகின்றது. ஆயினும் கணவனது உடலின் நிழல் போல் எங்கும் தொடரும் மனைவி, அந்த உடலை விட்டு நிழல் பிரியாதிருக்கும் நிலையில் தானும் உடன் வரும் நிலையினை 'நிழலுக்கும் செயல் வேறு உண்டோ' என்ற உவமையால் விளக்குகின்றார். மேலும் தலைவனை உயிராக்கித் தன்னை உடலாக்கி இரு நிலை யிலும் பிரியாது வாழ்வதும் முடிவு நேர்ந்தால் இருவரும் மாள்வதுமே 'வாழ்க்கைத் துணை நலத்தின்' சிறப்பத னையும் 'வென்று வருதியேல் வருவன், அன்றி நீவிளிந் திடத்து மாய்வன்' எனப் பெண் பன்றி கூறியதாகக் கூறுகின்றார் பரஞ்சோதியார். இந்த உணர்வு இன்றைய மனித ஆன்மாக்களிடம் இருக்குமானால் உலகம் எவ்வளவு சிறப்புடன் வாழும். நாம் மேலே செல்வோம்.

சென்ற பன்றிகள் இரண்டும் போரிடை மாய்கின்றன குட்டிகள் பன்னிரண்டும் தாயற்று, தந்தையற்று அலறித் துடிக்கின்றன. எவ்வுயிராயினும் அவ்வுயிர் வருந்தும் நிலை கண்டு அம்மை அப்பன் வாளா இருப்பனோ! கொடிய மாபாதகத்தைச் செய்தவனையே வாழவைத்

தார் சொக்கேசர் என்று முன்பு கண்டோமே; ஆம்! அதே சொக்கேசர் இங்கே தாய்ப் பன்றியாக உருவெடுத்துப் பாலூட்ட வருகின்றார். இதைப் பரஞ்சோதியார்,

'ஏன மென்பறழ் உறுகண் நோய்க்கு
இரங்கினார் இச்சை
ஆன அன்புதந்து அத்துயர் அகற்றுவான்
ஈன்ற
மான அன்புடைப் பேடையின் வடிவெடுத்து
அயரும்
கான வன்பறழ் கலங்கு அஞர் கலங்க நேர்
வந்தார்'
(59)

என்கிறார். ஆம்! அக்குழவிகளின் துன்பம் கலங்கி ஓடத் தான் வந்து, தாயாகி முலை ஈந்து காத்து வளர்த்து அவற்றை அமைச்சர்களாகவும் ஆக்குகின்றார் அம்மை அப்பர்.

இத்தகைய இறையுளத்தைப் பெற்ற குழந்தையாகிய ஆன்மாக்களைப் பாதுகாக்கும் பரமனின் கருணையை— அம்மை அப்பரின் அருள் நெறியை எண்ணி—நம்மையும் எண்ண வைக்கிறார் பரஞ்சோதியார்.

'இம்மை இப்ப வத்து அன்னையாய்
இனிவரும் பவமும்
செம்மை செய்து அசேதனத்தையும் சேதனம்
செய்தார்
எம்மை எப்பவத்தாயினும் எனைப்பல
உயிர்க்கும்
அம்மை அப்பராய்க் காப்பவர் அவரலால்
எவரே'
(63)

என நம்மையெல்லாம் அந்நல்வழிக்கு ஆற்றுப் படுத்து கின்றார். எப்பிறவி எடுப்பினும் இருவரையும் அம்மை யாகவும் அப்பராகவும் பெற்ற ஆன்மாவை அவன் கைவிட மாட்டான் என்பதை இப்பன்றிக் குட்டிகளின் கதை வழியே—இப்பாடல் வழியே விளக்கிக் காட்டிவிட்டார் பரஞ்சோதியார். ஆம்! இன்றைய பேச்சின் முழுக்கருத் தும் சாரமும் இப்பாட்டினுள் அடங்கியுள்ளதன்றோ!

அம்மையையும் அப்பனையும் பெற்ற—பெற்றெடுத்த ஆன்மா எப்பிறவி எடுக்கினும் அசேதனமாயினும் சேதனமாயினும் — உயர்திணையாயினும் அஃறிணையா யினும், அப்பிறவிதோறும் அம்மை அப்பன் அந்த ஆன் மாக்களை விடாது பற்றி நின்று, வினை தீர்த்து அருளி, தான் அம்மை அப்பன் என்பதை நிறுவுவன். இது முற்றி லும் உண்மை. இந்த நல் உணர்வோடு நாம் இன்று சென்று, இந்த பதி, பசு இவற்றின் செயல் உணரும் அகிலம் பற்றியும் அளவிலா அண்ட கோளங்கள் பற்றியும் அவற்றுள்ளும் அவனே உள்ளான் என்பது பற்றியும் அடுத்த புதன்கிழமை காணலாம். வணக்கம்.

---

'தாயாய் முலையைத் தருவானே
தாராதொழிந்தால் சவலையாய்
நாயேன் கழிந்து போவனோ நம்பி
இனித்தான் நல்குதியே
தாயே என்றுன் தாளடைந்தேன் தயாநீ
என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக ஆண்டாய்
நான்தான் வேண்டாவோ'

(மணிவாசகர்)

25—8—93

# 4. அண்டத்தின் சுழற்சி

அம்மையும் அப்பனும் ஆன்மாவினை அணைத்தும் அடித்தும், மன்னித்தும் அருளியும் தன்னோடு இணைத்துக் கொள்ளும் வகையினையெல்லாம் கடந்த மூன்று வாரங்களில் கண்டோம். இன்று அவற்றை உணர் வதற்காதாரமாகிய உலகினைப் பற்றியும் எண்ணற்ற அண்ட கோளங்கள் பற்றியும் அவற்றின் சுழற்சி பற்றியும் அனைத்தும் முடிவில் அவனடியில் ஒன்றும் உயர்நிலை பற்றியும் கண்டு மகிழ்வோம்.

முன்பே நான் முப்பொருள் உண்மை பற்றிக் கூறி யுள்ளேன். பதி, பசு, பாசம் எனச் சைவ சித்தாந்திகள் அவற்றைக் கூறுவர். முன்னவை இரண்டின் திறத்தினைக் கண்ட நாம் இன்று அவற்றோடு இணைந்த பாசத்தின் கூறுகளாகிய அண்டங்கள்—அவற்றின் சுழற்சி, வளர்ச்சி ஆகியவை பற்றிக் காண இருக்கின்றோம். இந்த அண்ட மும் ஆண்டவனிடத்திலிருந்து வேறுபட்டதன்று. 'அகிலாண்ட கோடியெல்லாம் தன் அருள் வெளிக்குள்ளே தங்கும் படிக்கும் இச்சை வைத்து, அவற்றின் உள்ளுயிர்க் குயிராய்த் தழைத்து' நிற்கின்றான் ஆண்டவன் எனத் தாயுமானவர் பாடியுள்ளார். ஆழ்வார்களும் தேவார திருவாசகம் பாடிய நல்லவர்களும் இந்த உண்மையினைப் பலபடப் பாராட்டிப் பகர்ந்துள்ளனர்.

'பாரிடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீரிடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி

தீயிடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளியிடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளியிடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி'

என மாணிக்கவாசகர் அனைத்தும் இறைவனே எனக் காட்டியுள்ளார். உலகும் பிறவும் ஐம்பூதச் சேர்க்கையால் ஆனவையே. எனவே இவற்றைக் காட்டி, இறைவன் தம்மை மறைத்து அருள் செய்கின்றான். இந்த உலகினையும் இதைச் சுற்றியுள்ள சூரிய மண்டலத்தையும் அதையும் கடந்த அண்டத்தினையும் அதன் வேறுபட்ட வகைகளையும் விளைவுகளையும் பெருக்கங்களையும் இன்று பல விஞ்ஞானிகள் ஆராய்கின்றனர். எனினும் அவர்கள் ஆராய ஆராய அந்த அண்டகோளம் மேலும் மேலும் விரிந்து கொண்டே செல்கின்றது.

'அறிதோ றறியாமை கண்டற்றால் காமம்
செறிதோறும் சேயிழை மாட்டு'

என்று காதல் இன்பத்தைப் பற்றி வள்ளுவர் சொன்ன உண்மை இந்த அண்டகோள ஆய்வுக்கும் முற்றும் பொருந்தும். சாதாரணக் கண்களால் காணும் நில எல்லை, தொலை நோக்குக் கண்ணாடி கொண்டு காண, மிகச் சுருங்கியதாக அமைந்து, காணாத எல்லை விரிவடைகின்றது. அதனினும் பெரிய ஆடியைக் கொண்டு பார்த்தால், முன் பார்த்ததைக் காட்டிலும் காணாதவை மிக மிக விரிந்து நிற்கின்றது. அப்படியே ஒவ்வொரு நிலையிலும் அண்டத்தின் எல்லை அளவிடற்கரியதாய் 'அறிதோ றறியாமை கண்டற்றால்' விரிந்து கொண்டே செல்கின்றது. இதை முற்றும் கண்டவர் இல்லை; இனியும் என்றும் காணவும் முடியாது. இறை நிலை ஒத்து—உயிர் நிலை ஒத்து—காணாது விரிந்து வளர்ந்து கொண்டே இருக்கும் இந்த அண்ட கோள எல்லை கண்டு விட்டதாக எவரும் முடிவு கட்டி விட முடியாது.

இந்த 'அண்டம்' என்பதை ஆங்கிலத்திலே 'Universe' என்று சொல்லுவர். இரண்டிற்கும் பல்வேறு வகையில் பொருள் கொண்டு, அறிஞர் தம் கொள்கையை நிலை நாட்டுவதைக் காணலாம். அண்டம் என்ற சொல்லுக்கே 'எல்லை இல்லாதது' என்ற பொருள் உண்டு. 'அண்ட கோளம்' என்பதற்கு 'An imaginary shell surrounding the earth and its accompanying sphere' என்று அறுதியிட முடியாத வகையிலே ஆங்கிலத்தில் பொருள் காண்கின்றனர். அப்படியே 'அண்டமுகடு' என்பதற்கும் 'Top of the imaginary shell that surrounds the Universe' என்று கற்பனைக்கு எட்டாத வகையில் அமைந்த ஒன்று எனக் காட்டுவர்.

இந்த அண்டம் என்று தோன்றியது? ஏன் தோன்றியது? எப்படித் தோன்றியது? எந்த அளவினது? என்று யாரும் கூற முடியாது. 'நான் யார்? என் உள்ளமார்? ஞானங்களார்? என்னை யார் அறிவார்? வானோர் பிரான் என்னை ஆண்டிலனேல், என்று கூறியபடி ஒருவேளை இறைவனால் காட்ட முடியும். ஆனால் அண்டத்தின் எல்லையினையே காண முடியாத நாம் ஆண்டவனை எங்கே காண்பது? இந்த உலகம் உண்டான காலத்தை ஆறாயிரம் கோடி ஆண்டுகளுக்கு அப்பால் கொண்டு செல்வர் (ஒளி ஒரு வினாடிக்கு 3 லட்சம் கிலோ மீட்டர் செல்லும் தகையது) இந்த உலகம் உள்ள இந்த அண்ட கோளம் 20 கோடி ஒளி ஆண்டுகளுக்கு அப்பாற்பட்ட தென்பர் இந்த உலகம் பற்றி, இராமாயணச் சார்புடைய ஒரு தனிப்பாடல் தமிழில் உண்டு இராமாயணத்தில் இல்லாத பல கருத்துக்கள் இலக்கியங்களில் இடம் பெறுகின்றன. அகநானூற்றுப் பாடல் ஒன்று இராமாயணத்தில் கூறப் பெறாத ஒரு கருத்தைக் கூறுகின்றது. இராமன் சேது அணை கட்டுமுன் ஆலமரத்தின் கீழ் இருந்து ஆலோசனை செய்கின்றான். ஆனால் அந்த ஆல மரத்தின் மேல் உள்ள பறவைகள் பேரொலி எழுப்ப,

ஆலோசனை தடைப்படுகிறது. உடனே இராமன் கையை உயர்த்தி, அவற்றை நோக்க அவை ஒலி அடங்கின. இதை உவமையாக வைத்து, தலைவியின் களவொழுக்கினைப் பற்றி ஊரில் உள்ளோர் ஒரே ஆரவாரப்பேச்சாக முழங்கிக் கொண்டிருக்க, தலைவன் மணம் நேர்ந்தான். இச் செய்தியை அறிந்ததும், அந்த ஆரவாரம் அடங்கிற்று என்பார் புலவர் கடுவன் மள்ளனார்.

> 'அலர்வாய்ப் பெண்டிர் அம்பல்...............
> வெல்போர் இராமன் அருமறைக் கவித்த
> பல்வீழ் ஆலம் போல
> ஒலி அவிந்தன்று இவ்வழுங்கல் ஊரே'

அகம் (70)

இவ்வாறு மற்றொரு தனிப்பாடல் உலகத் தோற்றத்துக்கும் ஓரளவு துணை செய்கின்றது. இராமன் போர் முடித்து இலங்கை சென்று வீடணனுக்கு முடி சூட்டுவதற்காக நகருள் செல்லுகின்றான். ஊர்க் கோடியில் ஒதுக்கிடத்து வாழும் மக்கள் துணி துவைப்பதற்கென ஒரு கல் இருந்தது. அது பொற்கல் போலும். அதைத் தம் அயோத்திக்கு எடுத்துச் செல்ல அவன் நினைத்தான். உடனே உலகம் பிறந்த மூன்றாம் நாளில் பிறந்தவன் எனக் கருதும் ஜாம்பவான் அவர் முன் வந்து, அன்று முதல் இன்று வரை நடைபெற்ற—இருந்த பல நிகழ்ச்சிகளைக் கூறி, இது வரையில் உதவி செய்து அதற்குப் பதில் உதவி பெறுவாரைக் காணவில்லை; 'இராமா! நீ வீடணனுக்கு அரசு தந்து, இக்கல்லை உனக்காக எடுத்துச் செல்ல, எண்ணினையே! அது தவறு இல்லையா' என்கின்றான். இராமன் உணர்ந்து, தான் அங்கேயே இருந்து, பற்றற்ற இலக்குவனை அனுப்பி முடி சூட்டி வரப் பணிக்கின்றான். ஜாம்பவான் பாடிய பாடல் இதுவாகும்.

'ஈசனார் கண்டம் காறாத நான் எங்கணன்
எழில் ஐந்து சிரமான நாள்
எம்பிரான் மேனியது தங்கமாய் நின்றநாள்
இந்திரன் இருகண் உள்ள நாள்
மாசிலாச் சோமண் களங்க மில்லாத நாள்
வாருதிகள் இல்லாத நாள்
மலைபிறவி அதுகளது சிறகோ டிருந்தநாள்
வானின்மீன் இல்லாத நாள்
காசினியில் எழுவர் சக்ரவர்த்திகள்
ஆண்டதைக்
கண்டனன் வெகுநாளதாய்
கருதி ஒருவற்குதவி பதிலுக்கு வேண்டுபவர்
கனவிலும் கண்டதில்லை
தேசிகா சரணம் புகுந்த விபீடணற்குத் தென்
இலங்கை அரசுதந்து
செம்பசும் பொற்கல்லை நம்மதிற்காம் என்று
சிந்தைதனில் எண்ணினீரே'

இப்பாடல் வழி உலகம் தோன்றி எத்தனை எத்தனை கோடி ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும் என்பது தெரிகின்றதன்றோ! ஈசன் ஆலகாலவிடம் உண்ணுமுன்—பிரமன் ஐந்து சிரத்தினைப் பெற்று இருந்த நாளுக்கு முன்—இராமன் வைகுண்டத்தில் பொன்மேனியோடு பொலிந்த நாள்—இந்திரன் இரு கண்களைப் பெற்ற நாள்—சந்திரன் களங்கமில்லாதிருந்த நாள், கடலே அன்றிக் காறுலகமே எங்கும் சூழ்ந்து—கனலே பரவி இருந்த நாள்—வானின் நட்சத்திரங்களே இல்லாத நாள்—மலை,தன் இறக்கைகளோடு பறந்த நாள்—பின் ஏழு சக்ரவர்த்திகள் வாழ்ந்த நாள், இத்தனையும் இந்த உலகம்—அண்டம் கண்டிருக்கிறது என்றால் இது தோன்றி எத்தனை எத்தனை கோடி ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும். இதில் இராமன் தோன்று முன் உண்டாகும் மாற்றங்களையும் சுட்டி இருப்பது எண்ணத்தக்கது. இது

ஜாம்பவான் சொன்னதோ! வேறு யார் சொன்னதோ! நமக்கு அது பற்றி ஆய்வு தேவை இல்லை. இதனால் உலகின் தொன்மையினை நாம் உணர்ந்து கொள்கின்றோ மன்றோ!

அண்மையில் அமெரிக்க, விஞ்ஞானிகள் ஏதோ பெரிய ஆராய்ச்சி செய்து அண்டகோள எல்லையை விரைவில் காண முடியும் என்று பேசியும் எழுதியும் வந்தனர். உயர்ந்த விஞ்ஞானியாகிய 'ஐன்ஸ்டன்' கூறியதை முன்னரே குறித்துள்ளேன். 'எப்படித் தோன்றியது எனக் கூறமுடியும். ஆனால் ஏன் தோன்றிற்று எனக் கூற முடியாது' என அவர் கூறியுள்ளார் (**I can say how it happens; but I can't say why it happens**) அங்கேதான்— அந்த விஞ்ஞானத்தின் எல்லையில் தான் மெய்ஞ்ஞானம் பிறக்கிறது. உயர்ந்த மெய்ஞ்ஞானியாகிய நம் வாதவூரடிகள் இறைவனைப் பாடும் போது, இந்த அண்டத்தினையும் எண்ணிப் பார்க்கிறார். அதன் அளவு விரிவு—பரப்பு இவர் எல்லைக்கு அப்பாற்பட்ட ஒன்றாக நிற்கின்றது. எனவே அதை ஓர் உவமையாகவே நமக்கு விளக்குகிறார். அது மட்டுமன்றி 'திருவண்டப் பகுதி' என்றே ஒரு பெரிய அகவற்பாவினை அமைத்து, அதில் இவ்வண்டச் சிறப்பினையும் பிறவற்றையும் கூறுகின்றார். அதற்கு முன் மேலை நாட்டார் இவ்வண்டத்தைப் பற்றிக் கூறுவனவற்றைக் காணலாம்.

## UNIVERSE

1. All existing things, including the earth, the heavens, the galaxies and therein, regarded as a whole, the cosmos macro cosm.

2. The earth together with all its inhabitants and created things. All mankind.

3. The sphere or realm in which something exists or takes place.

The word is derived from old French 'Universe' from Latin 'Unicersum'.

Our name for all the matter, energy & space in existence, our most powerful telescopes have revealed that the universe contains atleast 10,000 million star systems, or Galaxies. Most scientists think that the universe was created in a gigantic explosion called the Big Bang. Others think that matter is being created all the time All have agreed that the universe is expanding as astronomical observations clearly indicate that the galaxies are getting further apart all the time. It is possible that this expansion will be followed by a period of contraction and that the whole process will then repeat. This is called the oscillation theory.

(Encyclopaedia)

இவ்வாறு மேல் நாட்டு அறிஞர்கள் முடிவு காணாராய் — அறிதோறும் அறியாமை கண்டவராய் ஓயாது உழைக்கின்றனர். இறைவன் தன்மையை எப்படி உணர முடியாதோ, அதே போலத்தான் இவர்களும் இவர்தம் ஆய்வுகளும் அண்டத்தைக் காண முடியாது நிற்கும். அதனால் இவர்கள் ஆய்வை நிறுத்தல் கூடாது. அறிய அறிய அண்ட எல்லை பெருகிப் பெருகி—அனைத்துக்கும் அப்பாற்பட்ட ஆண்டவனை—இறைவனை—அம்மை அப்பனை அடைய அவர்களுக்கு வழி வகுக்கும். எனவே அவர்தம் முயற்சி தொடர்க என வாழ்த்துகின்றேன்.

இனி, நாம் மேலே கூறிய மணிவாசகர் தம் திருவண்டப் பகுதி அடிகளைக் கண்டு, அவர் காணும்—

காட்டும் அண்ட எல்லையை—விரிவினை ஒருவாறு உணரலாம்.

'அண்டப் பகுதியின் உண்டைப் பிறக்கம்
அளப்பருந் தன்மை வளப்பெருங் காட்சி
ஒன்றனுக் கொன்று நின்றெழில் பகரின்
நூற்றொரு கோடியின் மேற்பட விரித்தன
இல்நுழை கதிரின் துன்அணுப் புரைய
சிறியவராகப் பெரியோன்'

என்பது மணிமொழி. மணிவாசகர் இந்த அடிகளில் பல அறிவியல் அறிஞர்கள் இன்றும் காணா உண்மைகளையும் அண்மையில் கண்ட உண்மைகளையும் அன்றே கூறி உள்ளமை, அன்றைய தமிழர்தம் அறிவியல் திறனைப் புலப்படுத்துவதாகும். அண்டம் எல்லையற்றது. அதன் நடுப்பகுதி இந்த உலகம். அந்த உலகம் உருண்டையானது என்கின்றார் 'கொலம்பஸ் அமெரிக்காவைக் கண்டு பிடித்தான் — பின் வலம் வந்தான் — பின் உலகம் உருண்டை என்று கூறினான், இவையாவும் நேற்றைய— அண்மையில் கண்ட உண்மைகள். ஆனால் மணிவாசகர் அன்றே கண்டார். அது மட்டுமன்று, இவ்வாறாய உலகங்கள் எத்தனை? அறிவியல் அறிஞர்கள் ஒரு சில வற்றையே கணக்கிடுவர். ஆனால் அவரோ அளப்பரியன என்கின்றார். அதையும் ஓர் உவமையால் விளக்குகின்றார்

ஒரு சிறு வீடு. அதன் கூரையில் சிறு துவாரம். சூரியன் ஒளி அதன் வழியாக உள்ளே நுழைகின்றது. அதைப் பாராதவர் இரார். அனைவருக்கும் தெரிந்த அதைக் காட்டி, அச்சூரியனின் ஒளிக்கதிரைக் கூர்ந்து காணச் சொல்லுகின்றார். அதில் சிறு சிறு தூசுகள் பறந்து கொண்டே—சுழன்று கொண்டே இருக்கும். கண்ணுக்குத் தெரியும் அத்தனை தூசுகளையும் எண்ண முடியுமா? இவையன்றிக் கண்ணுக்குத் தெரியாதன எத்தனை

எத்தனையோ? அதைச் சிறு சிறு அணுத்துகள்கள் என்கிறார் அவர். அவற்றை ஒருவேளை எண்ணினால் கோடிக்கணக்கில் அமையும். அதைப்போல நூறு நூறு கோடியினும் மேலான எண்ணிக்கை உடைய அண்டங்களும் உலக உருண்டைகளும் உள்ளன என்கின்றார். எண்ணிக்கைக்காக மட்டும் இதைச் சொல்லவில்லை. அவற்றின் இயல்பு—அசைவு - சுழற்சிக்காகவும் சொல்லுகிறார். உற்று நோக்கின் அத் துகள் அனைத்தும் தாமே சுழன்று கொண்டும் அசைந்து கொண்டும்—மெல்ல இடம் விட்டு இடம் பெயர்ந்து கொண்டும் இருப்பதைக் காண முடியும். இந்தச் சிறிய வீட்டு நிகழ்ச்சியைக் காட்டி, அளவிலா அண்ட கோளங்களின் சுழற்சியை நமக்குக் காட்டி விட்டார் மாணிக்கவாசகர். அத்துடன் அவை எழில் உடையனவாயும் காட்டி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறார். இந்த வியப்பினை—விளக்கத்தினை எண்ணிய இந்நூற்றாண்டின் தொடக்கத்தில் வாழ்ந்த பாரதியார், இவற்றை ஆக்கி இயக்கும் இறைவன் பெருங் கருணையை எண்ணி வியக்கின்றார். வாய் பாடுகிறது.

'எத்தனை கோடி இன்பம் வைத்தாய்—எங்கள்
இறைவா! இறைவா! இறைவா!
சித்தினை அசித்தொடு இணைத்தாய்—
அங்கு
சேரும் ஐம்பூதத்தின் வியன்உலகு
சமைத்தாய்
அததனை உலகமுமம வண்ணக் களஞ்சியம்
ஆகப் பலப்பல அழகுகள் சமைத்தாய்
(எத்தன)

அடுத்து இவை அனைத்தும் உயிரும் இறை உணர்வில் ஒன்றிக் கலக்கும் நிலையினை.

'முத்தி என்று ஒருநிலை சமைத்தாய்—அங்கு
முழுதினையும் உணரும் உணர்வு அமைத்தாய்
பத்தி என்று ஒருநிலை வகுத்தாய்—எங்கள்
பரமா! பரமா! பரமா!

என்றும் காட்டி, முடிவிலா இன்ப நிலையினையும் விளக்கி விட்டார். இவற்றால் அண்டங்கள் பல என்பதும் அவற்றுள் உள்ள உலக உருண்டைகள் எல்லையற்றன என்பதும் அவை சுழன்று கொண்டே நகர்ந்து கொண்டே இடம் விட்டு இடம் பெயர்ந்து கொண்டே இருக்கின்றன என்பதும் அவற்றின் எண்ணிக்கையினை யாரும் அளவிட முடியாது என்பதும் இந்த உலகக் கூட்டங்கள் யாவும் இறைவனும் அவன் சக்தியுமே வழிகாட்ட—ஆற்றுப் படுத்த அமைகின்றன என்பதும் அனைத்தும் ஐந்தொழில் நடத்தும் அம்மை அப்பரின் எண்ண அளவில் இயைகின் றன என்பதும் அறிய முடிகின்றது. இவற்றையெல்லாம் அடுக்கியே பாரதி பாடுகிறான்?

'ஆதிப்பரம் பொருளின் ஊக்கம்—அதை
அன்னை எனப் பணிதல் ஆக்கம்
சூதில்லை காணும் இந்த நாட்டீர்—மற்றத்
தொல்லை மதங்கள் செய்யும் தூக்கம்
மூலப் பரம்பொருளின் நாட்டம்—இந்த
மூன்று புவியும் அதன் ஆட்டம்
காலப்பெருங் களத்தின் மீதே—எங்கள்
காளி நடம் உலகக் கூட்டம்!'

என்று அவர் அனைத்தும் அருட்சக்தியின் ஆடலே என முடிக்கின்றார். இதில் 'காலம் பெருங்களன்' என்கின் றார்; அண்ட எல்லையைப் போன்றே கால எல்லையும் கணக்கிட முடியாதது என்கிறார். இதை மேலே ஜாம்ப வான் காட்டிய எல்லையிலும் கண்டோம். மணிவாசகர்,

'மேலை வானவரும் அறியாத தோர்
கோலமே எனை ஆட்கொண்ட கூத்தனே
ஞாலமே விசும்பே இவை வந்துபோம்
**காலமே** உனை என்று கொல் காண்பதே'

என்கின்றார். தொங்கும் உலகு, அதற்கு மூல காரண மாகிய விசும்பு இவை எத்தனை எத்தனையோ கால மாக வந்து வந்து சென்று கொண்டிருக்கின்றன. எனவே அண்ட எல்லையினையும் கால எல்லையினையும் அறிய முடியா நிலை உள்ளது. அவை யாவும் இறைவனை யும் ஒத்தன என்பதைத்தான் மணிவாசகர் 'இவை வந்து போம் காலமே' என ஆண்டவனையே அந்த வரை யறுக்க முடியாத காலமாகக் காட்டி அழைத்து, அதன் திறத்தினை என்று காண்பதென வியக்கின்றார்.

இங்கே மற்றொன்றும் காட்ட வேண்டியுள்ளது. இன்றைய விஞ்ஞானிகள் இன்றும் காணமுடியாத— நேற்று முயன்று கண்டு பிடித்த பல உண்மைகளை நம் தமிழறிஞர் என்றோ கண்டனர் என்றேன். அவற்றுள் உள்ளன இந்த எல்லை கடந்த ஞாலமும் காலமும் அண்ட மும் ஊழியும். அப்படியே பிறக்கு முன் கருவின் நிலை காண ஏழாம் நூற்றாண்டிலேயே முறைப்படுத்தி அப்பரடிகள் காட்டுகின்றார். மனித உடம்பில் முன் தோன்றியது நரம்பா? எலும்பா? என்ற வினா இந்த நூற்றாண்டின் தொடக்கம் வரை விடை காணா வகையில் இருந்ததை அறிவியலாளர் அறிவர். ஆனால் அப்பர் அன்றே முதலில் தோன்றியது நரம்பு என்பதைத் திட்ட மாகக் காட்டி விட்டார். அத்துடன் அக்கரு எப்படி எப்படி முறையாக வளர்கின்றது என்பதனை, இன்றைய **'X Ray'**யும் காட்ட முடியாததைத் தெளிவாகக் காட்டி விட்டார்.

'கருவாகிக் குழம்பிருந்து கலித்துமூளை
கருநரம்பும் வெள்ளெலும்பும் சேர்ந்து
ஒன்றாகி

உருவாகிப் புறப்பட்டு இங்கு ஒருத்திதன்னால்
வளர்க்கப் பட்டு'

என்கின்றார் அவர். ஆம் முதல் கரு குழம்பாக (Liquid) இருக்கிறது; பின் கட்டியாகிறது (Solid). பின் மூளை உண்டாகிறது; பின் தோற்ற அசைவுகளுக்கு முதற் காரணமாகிய கரு நரம்பு (Originating nerves) உண்டாகிறது. பின் வெண்ணிற எலும்பு உண்டாகிறது. பின் முழு உருவம் பெற்று, உலகில் பிறந்து, இந்த உலகத் தாயால் வளர்க்கப் பெறுகிறது என்கிறார். இது இங்கே தேவையில்லையாயினும் முன்னரே கூறியுள்ள போதிலும் தமிழர்தம் அறிவியல் ஆய்வின் தொன்மை காட்டவே இங்கும் குறித்தேன். இப்படி அண்டம் தொடங்கி அதில் தோன்றும் மனிதப் பிண்டம் வரையில் அறிவியல் வழி உணர்த்தும் அனைத்தும் ஆண்டவன் செயலே எனக் கண்டனர் முன்னோர்.

இந்த மணிவாசகர் காட்டிய உவமையினையும் பாரதியார் விளக்கிய பன்மைக் கூட்டத்தினையும் நினைக்கும் போது என் முன் இன்றைய விஞ்ஞான விளைவு ஒன்று எதிர் நிற்கின்றது. அறிந்தோ அன்றி அறியாமலோ தொலைக்காட்சிப் பெட்டியில், இந்த அண்ட கோளத்தினை—'இல்நுழை கதிரின் துன் அணுப்புரையும்' நிலையினைக் காட்டுகின்றன. தமிழில் செய்தியைத் தொடங்கு முன் வெற்றிடம் காட்டி, பின் ஒளியிடையில் பலப்பல—எண்ணற்ற சிறு துகள்கள் உழன்று கொண்டே—ஓடிக் கொண்டே இருக்க அவற்றின் நடுவே நம்பூமி உருண்டு உருண்டு வருவதையும் அதைச் சுற்றிச் சில வளையங்கள் தொடரப் பின் செய்திகள் வரும் குறிப்பினையும் காட்டுகின்றனர். இதைப் பார்க்கும் போதெல்லாம் பரந்த அண்டகோளமும் அதில் சுற்றிச் சுற்றிப் பெயர்ந்தோடும் உலகங்களும் அவற்றிற்கிடையிலுள்ள பூமியும் ஒன்றாகச் சுழல்வதையும் நான் நினைத்துக் கொள்வேன். பிற

அனைத்தும் அணுவென நிற்க நாம் காணும் உலகைப் பெரிதாகக் காட்டுவதும் போற்றுவதற்குரித்து எனவே இது போன்று நம்மைச் சுற்றியுள்ள—அறிவியற் பொருள்கள்—அல்லாதன அனைத்தும் நமக்கு எத்தனையோ உண்மைகளை உணர்த்திக் கொண்டுள்ளன. இனி மேலே காண்போம்.

இவ்வாறு அண்டங்களிலும் ஐம்பூதங்களிலும் உயிர்களிடத்தும் உள்ளவன் அந்த ஒப்பற்ற அம்மை அப்பனே என்ற உண்மையினை அடியவர் பலர் பலவாறாகக் கூறியுள்ளனர். முன்னர் சில குறித்தோம். இங்கேயும் இரண்டொன்று காணலாம்

திருமங்கையாழ்வார்,

'பார் உருவி நீர் எரி கால் விசும்பும் ஆகிப்
பல்வேறு சமயமுமாய்ப் பரந்து நின்ற
ஏர் உருவில் மூவருமே என்ன நின்ற
இமையவர் தம் திருஉருவே; எண்ணும் போது
ஓர் உருவம் பொன் உருவம் ஓர் உருவம் செந்தீ
ஒன்று மாகடல் உருவம் ஒத்து நின்ற
மூவுருவம் கண்டபோது ஒன்றாம் சோதி
முகில் உருவம் எம் அடிகள் உருவம் தானே'

(2)

என்று திருநெடுந் தாண்டகத்தில் கூறுகின்றார். இதில் இறைவன் யாவுமாய் நின்ற காரணத்தால், நாம் வணங்கும் மூன்று நிலை கொள்ளும் மும்மூர்த்திகளும்

தனியாக அல்லாது ஒன்றாய் அமைந்தே உள்ள நிலையினையும் சுட்டிக் காட்டுகின்றார். நம்மாழ்வாரும்,

'அடியேன் உள்ளான் உடன் உள்ளான்
அண்டத்து அகத்தும் புறத்தும் உள்ளான்
படியே இது என்று உரைக்கலாம்
படியன்று அல்லன் பரம்பரன்'
(8. 8. 2.)

என்றும்,

'தானே உலகெலாம் தானே படைத்து, கிடந்து
தானே உண்டு உமிழ்ந்து தானே ஆள்வான்'
(10. 5. 5.)

என்றும் கூறுவர். பாரதியும் இறைவனின் ஊழிக் கூற்றினைச் சக்தியின் கூற்றாகக் காட்டி நம்மை விழிக்க வைக்கிறார்.

'வெடிபடும் அண்டத்து இடிபல தாளம்
போட—வெறும்
வெளியில் இரத்தக் களியோடு பூதம்
பாட—பாட்டின்
அடிபடு பொருளின் அடிபடும் ஒலியில்கூட—
களித்து
ஆடும்காளி! சாமுண்டீ! கங்காளி!'

என்றும்,

'காலத்தொடு நீர்மூலம்படு மூவுலகும்— அங்கே
கடவுள் மோனத்து ஒளியே தனியாய்
இலகும்—சிவன்
கோலம் கண்டு உள்கனல் செய்சினமும்
விலகும்—கையைக்
கொஞ்சித் தொடுவாய் ஆனந்தக்
கூத்திடுவாய்'

என்றும் பாடிக் களிக்கின்றார். இதில் முதல் பாட்டில் ஆதிகாலம் தொட்டு அண்டங்கள் ஒன்றற்கொன்று இடிபட்டு அழிவதையும் மாறுவதையும் பஞ்சபூதச் செயல்கள் படும்பாட்டையும் காட்டுகின்றார். அடுத்ததில் கால எல்லை கணக்கிட முடியாத நிலையில் எத்தனையோ உலகங்கள்—மேல் கீழ் நடு என நின்ற உலகங்கள் நிர்மூல மாவதையும் அங்கேதான் கடவுள் மௌன உருவாய் உள்ளான் என்பதையும் அங்கே அம்மை அப்பனாக இரண்டுருவம் ஒன்றாய் இசைந்து ஆனந்த நடமிடும் சிறப்பினையும் காட்டுகிறார். இவ்வாறு காலமெலாம் கணக்கிட முடியாது கழிந்த ஊழிகள் பலப்பல. இவற்றை எண்ணிப்பார்த்த கீரந்தையார் என்ற சங்க காலப் புலவர்—திருமால் உருவினைப் பாடவந்த நிலையில் இக் காலமும் கணக்கும் நீத்த தன்மையினை விளக்குகிறார்

'பசும்பொன் உலகமும் மண்ணும் பாழ்பட
விசும்பில் ஊழி ஊழ் ஊழ் செல்ல
கருவளர் வானத் திசையில் தோன்றி
உருவு அறிவரா ஒன்றன் ஊழியும்
முந்துவளி கிளர்ந்த ஊழும் ஊழியும்
செந்தீச் சுடரிய ஊழியும், அவையிற்று
உள்முறை வெள்ளம் மூழ்கி ஆர் தருபு
மீண்டும் பீடு உயர்பு ஈண்டி யாவற்றிற்கும்
உள்ளீடாகிய இருநிலத்து ஊழியும்
நெய்தலும், குவளையும், ஆம்பலும், சங்கமும்
செய்குறி ஈட்டங் கழிப்பிய வழிமுறை
கேழல் திகழ்வரக் கோலமொடு பெயரிய
ஊழி ஒருவினை உணர்த்தலின் முதுமைக்கு
ஊழி யாவரும் உணரா
ஆழி முதல்வ நிற்பேணுதும் தொழுது'

(பரிபாடல் 2)

என்று கீரந்தையார் காலங்கடந்த பல்வேறு ஊழிகளை நம் முன் காட்டுகிறார். உலகு ஊழி, நீர் ஊழி, நெருப்பு ஊழி, காற்றூழி, உரு அறிவாரா விசும்பு ஊழி, எனப் பகுத்து ஐந்தின்—ஐந்து பூதங்களின் ஆட்டத்தினையும் செயல்களையும் கூறி, அவற்றையெல்லாம் ஆக்கி, அவற்றுள்ளும் அவற்றிற்கு அப்பாலும் நின்று நிலை பெறும் ஆண்டவன் நிலையினைக் காட்டுகின்றார். இதில் வரும் நெய்தல், குவளை, ஆம்பல், சங்கம் என்பன கால எல்லையைக் குறிப்பன. பலப்பல கோடி ஆண்டுகள் கொண்ட நிலையில் ஒன்றற்கொன்று உயர்ந்து செல்லும் கால நிலைகளை—கணிப்பிட முடியாத பேரெண்களாகக் கொள்ளும் இவற்றை—ஓரளவு நமக்குக் காட்ட விழைகின்றார் புலவர். மணிவாசகரும்,

'ஞாலமே விசும்பே இவை வந்துபோம்
காலமே உனை என்று கொல் காண்பதே'

என்று கூறியதை முன்பே காட்டியுள்ளேன்.

இவ்வாறான அண்ட கோளங்கள் எப்படி உருப் பெற்று உலக அமைப்பை உண்டாக்குகின்றன என்பதை நான் முன்னே காட்டிய படி யாரும் கண்டறியவில்லை; கண்டறியவும் முடியாது. சிவப்பிரகாசச் சுவாமிகள் இந்த உலகம் எப்படி—யார் மூலமாகத் தோன்றியது என்பதைப் பிரமமாகிய பரமசிவம் தொடங்கி, பிரம்மா வாகிய படைத்தற் கடவுள் வரையில், அவர்தம் சமய நெறியில் நின்று காட்டுகின்றார். அவற்றை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று நான் கூறவில்லை. அதன் வழி ஊழி தோறூழி தோன்றி—வாழ்ந்து மறையும் உலக நிலையினை அவர் வழியே சுட்டிக் காட்ட நினைத்தேன். அவ்வளவே!

'பரசிவம் பிரமம் என்னப்பட் டொருதிரிவு
மின்றி
உரை மனம் இறந்துநின்ற ஒருசிவலிங்கம்
தன்னுள்
வரும் உயர் சதாசிவம் தான் மற்றவன்
தனைப் பொருந்தும்
அருவம் கொள் ஞானசக்தி அவர்களால்
சிவன் உதிப்பன்'

'சாற்று அச்சிவனுக்கு இச்சாசத்தி
அவ்விருவரானும்
தோற்றுவன் உருத்திரன் தான் சொல்லிய
இவற்குச் சக்தி
மாற்றரும் கிரியை என்பர் மற்றவர் இருவர்
பாலும்
போற்றுறும் அரிஉதிப்பன் பொறி அவள்
சத்தியாமால்'

'அத்திருமாலும் மாவும் அளிப்பவந்து
உதிப்பன் வண்டு
பொய்த்து இசைமுரலும் செங்கேழ்
முளரிவானவன் அவற்குச்
சத்தி வெண்கமலை அன்னோர் தரவரும்
உலகத்தோற்றம்
நித்தன் எம்குருகுகேசன் நினைவு
மாத்திரையின் ஆமால்'

சிவப்பிரகாசர் இந்த அண்டத்தினை 'நான்முக அண்டம்' என்கின்றார். பிறவற்றை நீக்க இவ்வாறு அவர் சமயநெறி நின்று காட்டி, முடிவில் இறைவன் நினைவு மாத்திரையில் நடைபெறும் எனவும் கூறி முடிக்கின்றார் இவ்வாறு அறிஞர் பலர் இந்த அண்ட கோளத்தையும் அதன் ஒரு சிறு துளியாகிய அவனியையும் அவற்றின் தோற்ற

வளர்ச்சி, மறைவு நிலைகளையும் கூறிச் சென்றுள்ளனர். பிற சமயங்களும் ஏறக்குறைய இந்த நிலையில்தான் இறைவன் அருளே இந்த அண்டமும் அவனியும் எனக் கண்டு எழுதியுள்ளன. இனி இந்த அண்ட கோளத்தில் பலப்பல அண்ட கோளங்களுள் ஒன்றாகிய நம் அண்ட கோளத்தில் அமைந்த நம் உலகத்தையும் அதன் காலத்தை யும் அதில் வாழும் நம் கால நிலையினையும் காணல் நலம் பயக்கும் என எண்ணுகிறேன்.

பரந்த அண்ட கோளமாகிய கடலில் நம் உலகம் ஒரு துளி நீர், அப்படியே விரிந்த கால எல்லையாகிய கோடி கோடி ஆண்டுகளுக்கு அப்பாற்பட்ட ஆம்பலும் நெய்தலும் அளவிட முடியாத கால எல்லையில் நம் வாழ்வு ஒரு நொடியில் கோடி கோடியில் ஒரு பங்கு; இந்த உண்மையினை உணர்ந்தால் உய்வு உண்டு.

இந்தப் பரந்த அண்ட கோளத்தின் ஒரு பகுதியாகிய இவ்வுலகில் வாழும் நாம் நம்மைப் பற்றியே சிந்தித்து—நம் வாழ்வே வாழ்வென எண்ணி வாழ்கின்றோம். 'யான்' 'எனது' என்னும் அகங்காரமமகாரமாகிய மயக்கத்தில் வாழ்கின்றோம். வள்ளுவர்,

'முந்திரிமேல் காணி மிகினும் கீழ்தன்னை
இந்திரனாப் போற்றி விடும்'

என்று கூறுவது போன்று எல்லா உலகங்களும் நமக்கு அடக்கம் என இறுமாப்பும் கொள்கின்றோம். நாம் வாழ—நமக்கு உலகம் அடிமையாக உள்ளது என்ற உணர்வு மிகுகின்றது. அப்படியே நாம் என்றும் வாழ் வோம் என்று தருக்கியும் வாழ்கின்றோம்.

'கண்ணுக்குக் கண்ணெதிரே
கட்டையில் வேகக் கண்டும்
எண்ணும் திறமாய் இருப்போம்
என்றெண்ணுதே'

என்று பெரியவர்கள் (பட்டினத்தார்) கூறியபடி வாழ்வு மாறி மறைபவர்களைக் கண்முன் கண்டு கொண்டே, 'நாம் என்றும் இருப்போம்' என்று ஏதேதோ செய்து கொண்டிருக்கின்றோம். ஆனால் பெரியவர்கள் தம்மை மறந்து உலகையே நினைப்பார்கள்.

இந்த உலக வாழ்வை நல்லவர்களுக்கு ஆண்டவனே உணர்த்துகிறார். 'உலகம்' என்ற ஒன்றோடு அமையாது, 'உலகெலாம்' என்றும் 'உலகம் யாவையும்' என்றும் அண்ட கோள எல்லையில் சுழன்று வருகின்ற எல்லா உலகங்களும் அவர்கள் கண்முன் காட்சி தருகின்றன. சேக்கிழார் தம் பெரிய புராணத்தினை 'உலகெலாம்' என்றே தொடங்குகிறார். மற்றும் அத்தனைப் பாடல் களுக்கும் நடுச்சொல்லாகவும் கடைசிச் சொல்லாகவும் அதையே பயன்படுத்தி உள்ளார் என்று கூறுவர். அவர் தில்லை ஆண்டவன் முன் நின்று அடியவர் பெருமையை எப்படிப் பாடுவேன் என்று ஏங்கி, இறைவனை வேண்டும் போது இறைவனே இந்த 'உலகெலாம்' என்று அடி எடுத்துக் கொடுத்தார் என்று அவர் வரலாறு பாடிய சந்தான குரவர்களுள் ஒருவராகிய உமாபதி சிவனார் கூறுவர். இவ்வாறே இதற்கு முதல் முதல் பாடல்களாக அமைந்த திருத்தொண்டத் தொகைக்கும் சுந்தரருக்கு இறைவனே அடி எடுத்துக் கொடுத்தார் என்பது வரலாறு. இங்கே உமாபதி சிவம் கூறியதைக் காண்போம்.

'அடையார்புரம் நீறுஎழத் திருநகை செய்து
அன்று ஒரு மூவரை
படியின் மேல் அடிமைக் கொள்ளும் பாத
பங்கையங்கள் பணிந்து நின்று

அடிகளே உனது அடியவர்சீர் அடியேன்
உரைத்திட அடி எடுத்து
இடர் கெடுத்தருள் வாயெனத் திருவருளை
எண்ணி இறைஞ்சினார்'

(31)

இவ்வாறு சேக்கிழார் இறைஞ்ச இறைவன் அடி எடுத்துக் கொடுத்தார்.

'அலைபுனல் பகீரதிநதிச் சடையாட
வாட அரவாட நின்று
இலகு மன்றினில் ஆடுவார் திருவருளினால்
அசரீரி வாக்கு
'உலகெலாம்' எனஅடி எடுத்துரை செய்த
பேரொலி ஓசை மிக்கு
இலகுசீர் அடியார் செவிப்புலத்து எங்குமாகி
நிறைந்ததால்'

(31)

என்று அவர் இந்த நிகழ்ச்சியை எடுத்துரைக்கின்றார். பின்னும் இப்பெரிய புராணம் பாடச் சொல்லிய அனபாயனுக்கு இறைவன் தான் அடி எடுத்துக் கொடுத்த தைக் குறித்து, அதை அரங்கேற்றச் சொல்லுகின்றார்.

'சேக்கிழான் நமது தொண்டர் சீர்பரவி
நாம் மகிழ்ந்து உலகம் என்று நம
வாக்கினால் அடிஎடுத்து உரைத்திட வரைந்து
நூல் செய்து முடித்தனன்
காக்கும் வேல்வளவ! நீ இதைக் கடிது
கேளெனக் கனக வெளியிலே
ஊக்கமான திருவாக்கு எழுந்தது திருச்சிலம்
பொலியும் உடனெழ'

(64)

என்று உமாபதி சிவம் இந்நிகழ்ச்சியினை அழகுறக் காட்டுகிறார். இந்த 'உலகெலாம்' என்ற தொடரின் சிறப்பை அண்மையில் வாழ்ந்த வள்ளலார் எவ்வெவ்வாறு பாராட்டுகிறார் என்பதைப் பின்பு காணலாம்

நல்லவர்கள் காவியமோ கவிதையோ பாடினால் முதலில் நிற்பது உலகம் என்று கூறினேன். இதற்கு, மேலே கண்ட சேக்கிழார் மட்டும் சான்று என்று எண்ண வேண்டா? இன்னும் பலர் உளர். கம்பர் தம் பெருங் காப்பியமாகிய இராமாயணத்தைத் தொடங்கு முன்,

'உலகம் யாவையும் தாமுள ஆக்கலும்
நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா
அலகிலா விளையாட் டுடையார் அவர்
தலைவர்; அன்னவர்க்கே சரண் நாங்களே'

என்று இறைவனை வாழ்த்தியே தொடங்குகிறார். இருவரும் 'உலகம்' என்னாது 'உலகமெலாம்' என்றும் 'உலகம் யாவையும்' என்றும் கூறுவதன் சிறப்பினையே நாம் இங்கு எண்ண வேண்டும். அண்ட கோளங்கள் அளப்பரியன. அதில் அதன் சுழற்சியில் தனித்தனியாகச் சுழன்று வரும் உலகங்கள் எண்ணற்றன. அவற்றின் செயல், தன்மை, தோற்ற மறைவு, பிற நிகழ்ச்சிகளைப் பற்றி இது வரையில் யாரும் அறியவில்லை அறியவும் முடியாது. இத்தகைய உருளும் உலகங்களையெல்லாம் ஒன்றாக விளக்கவே இருவரும் 'உலகெலாம்' என்றும் 'உலகம் யாவையும்' என்றும் பாடித் தத்தம் காவியங்களைத் தொடங்குகின்றனர். சேக்கிழார் 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கு அரியவன்' என்கின்றார். ஆம்! அண்ட கோளங் களின் எல்லையில் அமைந்த உலகங்களையெல்லாம் யாரால் உணர்ந்து அறிய முடியும்? யாரால் கணக்கிட முடியும்? அவை அனைத்தையும் ஆக்கி அவற்றிற்கு உள்ளே அமைந்து, புறத்தும் யாண்டும் நிறைந்துள்ள

இறைவனை ஓத முடியுமா என்றால் அதுவும் இயலாது என்கின்றார். ஆக ஆண்டவனைப் போன்று அண்டத்தின் சுழற்சியினையும் அவற்றில் அமையும் உலகங்களையும் உணர்த்தல் அரிது; உணர்த்த முயன்ற என்னுடைய நிலையும் இரங்கத்தக்க ஒன்றாகும்.

கம்பரோ இந்த உலகங்களையும் அவை அமைந்த அண்ட கோளங்களின் அமைப்பையும் இறைவன் வெறும் விளையாட்டாகச் செய்கின்றார் என்கின்றார். ஆக்கி, காத்து, நீக்கி, மறைத்து அருளும் இறைவன் செயல் பெருவிளையாட்டே என்கிறார். இறைவன் இவற்றை ஏன் உண்டாக்கிக் காத்து மறைக்கின்றான் என்பதை யாரால் உணர முடியும்? இதைத்தான் உயர்ந்த அறிவியல் அறிஞன் ஐன்ஸ்டைன் 'ஏன் உண்டாகின்றது என்பதை என்னால் சொல்ல முடியாது' என்கிறான். இந்த இறைவன் அடியார் பெருமையைப் பாடவந்த சேக்கிழாரும் மனிதனாகப் பிறந்து மாநிலத்தை வாழவைத்த திருமாலின் சிறப்பினைப் பாடவந்த கம்பரும், தாம் எடுக்கும் இலக்கியத்துக்கு முன் அம்மையப்பராகிய இறைவனின் அருளினையும் புகழையும் செயலையும் பாடியே மேலே செல்கின்றனர்.. இவ்வாறு பல புவவர் தம் கவிதைகளைத் தொடங்குகின்றனர்.

கடைச்சங்கத்துப் புலவர்களுக்குத் தலைவராக இருந்து ஒப்பற்ற திறனும் அருளும் பெற்ற நக்கீரர் முதல் முதலாகப் பாடிய தெய்வ நெறிப் பாடலாகிய திருமுருகாற்றுப் படையினை,

'உலகம் உவப்ப வலன் ஏர்பு திரிதரு
பலர்புகழ் ஞாயிறு கடற்கண் டாங்கு'

என்று தொடங்குகின்றார். இங்கே உலகையும் அதன் மூல காரணமாகிய 'ஞாயிறு' எனும் சூரியனையும் முதலாகவே கொள்ளுகின்றார். 'ஞாயிறு' பலர்புகழ் ஞாயிறு ஆகின்

றது. ஆம்! அது உலகம் உவப்பத் தோன்றுவதால் கடவுளை நேருக்கு நேராக நின்று வரம் வேண்டும் பக்திப் பாடல்களுள் சிறந்ததும் முதலாவதுமாகிய திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் இவ்வாறு உலகையும் ஞாயிறு எனும் ஓர் அண்டத்தின் நுனியாக அமையும் சூரியனையும் குறிக்கின்றார். சூரியனுடைய விரைந்த சுழற்சியினாலே துண்டாக்கப் பெற்று விடுபட்டு வந்த ஒரு சிறு துகளே உலகம் என்று இன்றைய ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர். எத்தனையோ கோடி கோடி ஆண்டுகளுக்கு முன் இப் பிரிவு நிகழ்ந்து, நிலம் மெல்ல மெல்லக் குளிர்ந்து உயிர்கள் வாழும் இடமாகப் பல கோடி ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும். அப்படியே இதில் உயிரினம் தோன்றி இலட்சக்கணக்கான ஆண்டுகள் கழிந்திருக்க வேண்டும். இதை ஓரளவு இன்றைய விஞ்ஞானிகள் எண்ணிக் கணக்கிடுகிறார்கள்.

நக்கீரர் பாடிய மற்றொரு பாடலாகிய நெடுநல் வாடை எனும் பத்துப்பாட்டில் ஒரு பாட்டாக அமைந்த அப்பாட்டினை,

> 'வையகம் பனிப்ப வலன் ஏர்பு திரிதரு
> பொய்யா வானம் புதுப்புனல் பொழிந்தென'

எனத் தொடங்குகிறார். இதற்கு உரை கூறவந்த நச்சினார்க்கினியர் 'பருவம் பொய்யாத மேகம் உலகெலாம் குளிரும்படியாகத் தான் கிடந்த மலையை வலமாக வளைந்து எழுந்திருந்து கார்காலத்து மழையைப் பெய்ததாக' எனப் பொருள் எழுதுவார். ஆம்! கார் கால வரவும், அதன் முடிவில் குளிர் காலமாகிய வாடையும் பற்றிக் கூற வந்த நக்கீரர் இந்த வகையில் தம் நெடுநல் வாடையினை — நல்வாடையினைத் தொடங்குகின்றார். நல்லவர் கைப்பட்ட அல்லவும் நல்லவாம் என்பது உண்மையாக அமைய நக்கீரர் வாக்கில் நடுங்கும் குளிர்

தரும் வாடையும் 'நல்வாடையாயிற்று'—ஏன்? அதுவும் உலகை உய்விக்கலான்.

உலகம் உய்யக் குறள் இயற்றிய திருவள்ளுவர்,

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'

என்கின்றார். இதில் 'அகரம்' எழுத்துக்கெல்லாம் முதன்மையாகும் என்கிறார். நாம் காணும் உண்மையை உவமையாகக் காட்டி ஆதி பகவனையும், இடைப்பட்ட அண்டத்தினையும் அதன் அங்கமாகிய உலகினையும் குறித்தே தம் பெருநூலைத் தொடங்குகின்றார். 'எழுத்தெல்லாம்' என்பதற்கு, தமிழ் எழுத்துக்கள் மட்டுமன்றி 'உலக மொழிகளில் உள்ள எல்லா எழுத்துக்களுக்கும், எனப் பொருள் கொள்ளல் பொருந்தும். 'அ' ஒலி கொண்ட 'ஏ' எனும் ஆங்கில மொழியும் 'அ' எனும் முதல் எழுத்தினைக் கொண்ட வடமொழியும் அவை சார்ந்த பிற உலக, மேநாட்டு, கீழ்நாட்டு மொழிகளும் இந்த 'எழுத்தெல் லாம்' என்ற தொடருக்குள் அடங்கும் தன்மையினவே. நாம் காணும் நம் வழக்கில் உள்ள தமிழை முன் வைத்து, காணாத அல்லது தெரியாத பிற எல்லா மொழிகளையும் நமக்குக் காட்டி, உள்ளடக்கி, 'எழுத்தெல்லாம்' என்பதைப் போன்று, காணும் இவ்வுலகினைக் காட்டி, இந்த உலகு ஓர் அம்சமாக உடைய அண்டத்தினையும் பிற பல அண்டங்களையும் உள்ளடக்கி, 'உலகு ஆதிபகவன் முதற்று' என்கின்றார். எனவே வள்ளுவர் உலகச் சுழற்சியாகிய சமுதாய வாழ்வுக்கேற்ற பாடல்களை—குறட்பாக்களை மட்டும் எழுதாது உலகங்களையும் அண்ட கோளங்களையும் அவற்றை எல்லாம் ஆக்கி, காத்து மறைக்கும் அருள் நெறிப்பாடல்களாக அவை விளங்குமாறு ஆக்கியுள்ளார். ஓர் உவமை முகத்தான், 'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் ஆற்றலரிது' என்று

உலகையும் அதன் மூலமாக வானத்தையும் காட்டி அண்ட முகட்டின் அளவிற்கு நம்மை அழைத்துச் செல்கின்றார். இவ்வாறே குறளில் பல பாடல்கள் உள்ளன.

இவையன்றி நாம் மேலே கண்ட நக்கீரர் தம் திருமுருகாற்றுப்படை, நெடுநல்வாடை இவற்றை உள்ளடக்கிய பத்துப்பாட்டில் மற்றைய பெரும்புலவர்களும், இதே வகையில் உலகையும், சூரியனையும் விண்ணையும் முதலாகக் கொண்டே தம் பெரும்பாடல்களைத் தொடங்குகின்றனர். தலையாலங்கானத்துச் செருவென்ற பாண்டியன் நெடுஞ்செழியனைப் பாடவந்த புலவருள் சிறந்தவராகப் போற்றப்பெறும் மாங்குடி மருதனார் தம் மதுரைக் காஞ்சியினை,

'ஓங்குதிரை வியன் பரப்பின்
ஒலி முந்நீர் வரம்பாகத்
தேன் தூங்கும் உயர்சிமைய
மலைநாறிய வியன் ஞாலத்து'

என்று தொடங்குகிறார். இதற்கு நச்சினார்க்கினியர் 'அகலத்தை உடையதாகிய நீர்ப்பரப்பின் கண்ணே ஓங்குதிரை ஒலிக்கும் கடல் எல்லையாக தேன் இறால் தூங்கும் உயர்ந்த உச்சியினை உடைய மலைகள் தோன்றிய அகலத்தை உடைய ஞாலத்தின் கண்ணே' என உரை எழுதுகின்றார் இதனால் கடல் எல்லையும் தொங்கும் ஞாலமாகிய உலகும் அதில் உயர்ந்த—தோன்றிய மலைகளும் கூறப் பெறுகின்றன. பின் அவன் நாட்டின் சிறப்பையும் நல்லார் வாழும் நலத்தையும் கூறிக் கொண்டே செல்கின்றார். இந்தப் பாட்டில் மருதனார் மற்றொரு உயர்ந்த உண்மையை விளக்குகிறார் 'காஞ்சி' என்றால் நிலையாமை என்பது பொருள். உலக வாழ்வு நிலையற்றது தான் என்பதை இவ்வுலகில் நெடுஞ்செழியன் வாழுமுன் வாழ்ந்து மறைந்த மன்னர் 'திரை இடு

மணலினும் பலரே காண்' (236) என இவரே விளக்கு கிறார். ஆனால் நாட்டை விட்டுத் துறவு கொள்ளல்—நிலையாமை அதுதான் என்று அவர் சொல்லவில்லை. உலக வாழ்வு நிலையற்றதானமையின் உள்ள வரையில் வாழ்வாங்கு வாழ்க என வற்புறுத்துகின்றார். அவ்வாறு வாழும் போது அப்பொருள்களே வாழ்வு என அவற்றுள் ஆழ்ந்து, தம்முடைய வினை மறந்து மாயையுள் மூழ்கி மாறாது, 'காதி விளையாடி இரு கை வீசி வந்தாலும் தாதி மனம் நீர்க்குடத்தே தான்' என்றபடி, வைய வாழ்வு வான் உலக வழிகாட்டி என்று ஒட்டி, அதே வேளையில் எட்டி நின்று வாழ வழி காட்டுகின்றார். மாயை கெடு வதாக (206) எனக் காட்டுகின்றாரே ஒழிய வாழ்வு கெடு வதாக என்று காட்டவில்லை. 'அம்மை அப்பரைப் போன்று இவ்வழி நெறியினை நல்லறமாகக் கொண்டு வாழ்வாங்கு வாழின், வானுறையும் தெய்வத்தின் மேலாகப் போற்றப் பெறுவான்' என்று அண்டச் சுழற்சி யினும் தெளிவுபடக் காட்டுகின்றார்.

இவ்வாறே பத்துப் பாட்டில் பிற புலவர்களும், வையத்தையும் வானத்தையும் அவற்றை அங்கமாகக் கொண்ட அண்டத்தினையும் அதன் சுழற்சியினையும் குறித்தே தத்தம் பாடல்களைத் தொடங்குகின்றனர்.

**'மணிமலைப் பனைத்தோள் மாநிலமடந்தை**
**அணிமுலைத் துயல்வரூஉம் ஆரம்போல'**

என உலகை முன்னிறுத்தித் தன் சிறுபாணாற்றுப் படை யினை இடைக்கழி நாட்டு நல்லூர் நத்தத்தனார் தொடங்குகின்றார்.

**'அகல் இருவிசும்பில் பாய்இருள் பருகி**
**பகல் கான்று எழுதரு பல்கதிர்ப் பருதி'**

என உலக முதற்காரணமாகிய விசும்பினையும் அதன் இருள் நீக்கும் சூரியனையும் முன்னிறுத்திப் பெரும் பாணாற்றுப் படையினைக் கடியலூர் உருத்திரங் கண்ணனார் தொடங்குகின்றார்.

'நனந்தலை உலகம் வளைஇ நேமியொடு
வலம்புரி பொறித்த மாதாங்கு தடக்கை
நீர்செல நிமிர்ந்த மால்'

என உலகினையும், அதன் முதற்காரணமாகிய முதல்வனையும் உவமைப்படுத்தித் தம் முல்லைப் பாட்டினைக் காவிரிப்பூம் பட்டினத்துப் பொன் வாணிகனார் நப்பூதனார் தொடங்குகின்றார். முல்லை நிலத்திற்கு 'மால்' தலைவன் ஆதலால் அவனொடு உலகையும் இணைத்து மேலே செல்கின்றார்.

பட்டினப்பாலையில் கடியலூர் உருத்திரங்கண்ணனார், 'வான் பொய்ப்பினும் தான் பொய்யா மலைத் தலைய கடற் காவிரியை' முதலாவதாக வைத்து, அதன் கடல் எல்லையில் அமைந்த வளமார்ந்த தமிழர்தம் தலை நகராக இருநத 'புகார்' எனும் காவிரிப் பூம்பட்டினத்தைப் பாடுகிறார்.

கடைசியாகிய 'மலைபடுகடாம்' எனும் பத்துப் பாட்டின் இறுதிப் பாட்டினை, அதன் ஆசிரியர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங்கௌசிகனார்,

'திருமழை தலைஇய இருள்நிற விசும்பில்
விண் அதிர் இமிழ் இசைக்கும்'

எனத் தொடங்குகின்றார். இதில் உலக முதற் காரண மாகிய விசும்பினையும் உலக வாழ்வின் அடிப்படையான மழையினையும் அவற்றொடு கலந்த பிறவற்றையும்

ஆசிரியர் காட்டுகின்றார். இவ்வாறு நல்லவர் யாவருமே எடுத்த பொருளைப் பாடுமுன் உலகையும்அதன் மூலங்களையும் அண்ட கோளத்தையும் பாடியே செல்வர். விரிப்பின் பெருகும் என அமைகின்றேன். கண்ணுக்கு எட்டாத - கருத்திற்கு அப்பாற்பட்ட—எண்ணத் தொலையாத--ஏட்டில் எழுதிக்காட்ட முடியாத அண்டத்தினைப் பற்றியும் அதன் சுழற்சி பற்றியும் அது பற்றி அறிந்த ஒரு சில—மிகச் சிலவாகிய உண்மைகளைப் பற்றியும், அந்தப் பேரண்டத்தின் சிறு துகளாகிய—அணுவினுக்கு அணுவாகிய நாம் வாழும் இந்த உலகினைப் பற்றியும் இது வரையில் கண்டோம். நான் முன்னரே கூறியபடி இதன் விரிவு—இறைவனைப் போன்று—அம்மை அப்பரைப் போன்று அளவிடற்கரிது. எனினும் நாம் வாழும் உலகை முன்னிறுத்தி ஒரு சில கண்டோம். இனி இந்த உலகெலாம் என்ற தொடரைப் பற்றி வள்ளலாகிய இராமலிங்க அடிகளார் மிக விரிவாக விளக்கம் கண்டதைச் சுட்டிக் காட்டி இன்றைய நிகழ்ச்சியினை முடிக்கலாம் என் எண்ணுகின்றேன்.

சேக்கிழார்க்கு 'உலகெலாம்' என்று அடி எடுத்துக் கொடுத்தவரே அம்பலத்தாடும் அம்மை அப்பன். எனவே இத்தொடரையே 'மெய்ம்மொழி' என்கிறார் வள்ளலார். 'நிறைமொழி மாந்தர்' என்று வள்ளுவர் கூறிய நிறை மொழியை விளக்குகிறார். இங்கே வள்ளலார் இம்மெய்ம் மொழியாம் 'உலகெலாம்' என்ற முதல் தொடரைப் பல வகையில் விளக்குகின்றார். அச்சிட்ட பெருநூலில் (Royal Size 1/8) 40 பக்கங்களுக்கு மேலாக (பக்கங்கள் 1011—1051) இச்சொற்றொடருக்கு விளக்கம் தந்துள்ளார். அவற்றுள் பல, பலருக்கு இன்றும் புரியாத—விளங்காத—இறைவனைப் போன்று காட்டி மறைக்கும் வகையில் இருக்கின்றன. இத்தொடருக்கு 'மெய்ம்மை உடைய மொழி' என்று வேற்றுமை வழியானும் 'மெய் யாகிய மொழி' என்று அன்மொழி வழியானும் உரை

கண்டு பெருவிளக்கம் தருகின்றார். முதலாவதாக அந்தப் பாடலை எழுதி அதற்குத் தனிப்பொருள் விளக்கம் தந்து, பின் பல வகையில்—பல முறையில் விளக்கங்களைத் தந்து கொண்டே போகின்றார். தம்மை மறந்து, உலகம் உய்யவே வந்து வாழ்த்த—வாடிய பயிரைக் கண்டபோது வாடிய, காலின் மேல் கால்வைக்கப் பயந்து அமைதியாக ஆண்டவனைச் சோதி வடிவில் கண்டு, நம்மை எல்லாம் 'காண வாரும்' என அழைத்துத் தாமே கடவுளாக அமைந்த அருள் பெருஞ்சோதி கண்ட வள்ளலார், இந்தப் பாட்டிற்கு உரை காண்பதை முதலில் கண்டு மேலே செல்வோம்.

## மெய்ம்மொழிப் பொருள் விளக்கம்

''உலகெலாம் என்னும் மெய்ம்மொழிப் பொருள் விளக்கமென்பது எங்ஙனமெனில்:-

திருவருளின்பத்தை அங்கைக் கனியிற் பெற்ற பெரியாரையும், அத்திருவருளையும் வாச்சிய லட்சியமாகக் கொண்ட பெரியபுராணத்தில், தெய்வத் தற்சிறப்புச் செந்தமிழ்ச் செய்யுட்கண் எல்லாம் வல்ல ''இறைவன் திருவருளால்'' எடுத்துக் கொடுக்கப்பட்ட ''உலகெலா முணர்ந்தோதற்கரியவன்'' என்னும் மெய்ம்மொழியினது பொருள் விளக்கமாகலின் மெய்ம்மொழிப் பொருள் விளக்கமென்றாயிற்று என்க.

இனி, இம் மெய்ம்மொழிக்குப் பொருள் விளக்கங் கூறுதும்;

'உலகெலா முணர்ந் தோதற் கரியவன
நிலவு லாவிய நீர்மலி வேணியன்

அலகில் சோதியன் அம் பலத்தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்'

இதனுட் கலிவிருத்தவியலின் நாற்சீரோரடியான் முடிந்த ''உலகெலா முணர்ந்தோதற் கரியவன்'' என்னும் திருவருட் பரவயிந்துவத் துரிய மெய்ம்மொழித் தொடர்க்கண் உலகெலாமென்று முதன் மெய்ம்மொழிப்பொருள் விளக்கம் வருமாறு:-

''உலகெலாமென்பது'' சூக்கும ஸ்தூல அந்தரங்க பகிரங்க சாதாரண அசாதாரண பவுதிகப் பிரத்தியட்ச வியக்திரூப சமவாயகாரண மூலமா யாந்தராங்கார ரேகதேசோத்பவ தன்மாத்திரை காரியபூத தத்துவவுலகு.

'சூக்குமாந்தர சிநேகாணுத்வ சவிகற்ப கன்மசத்திய சாதகவிசித்திர பூத சுபாவசத்தியுலகு. சூக்கும ஸ்தூல வாகியாந்திர கிரியா சிநேகாணுத்துவ சவிகற்பகன்மசாத்தியாசாதக விசித்திர பூத சுபாவ சத்தியுலகு. காரண காரிய பரியந்த சாத்தியத்வ பூதசாதி சாமானிய வியாத்தி சத்தியுலகு. காரியாணு கரணபரியந்த சாத்தியத்வ பூதோபாதி சாமானிய வியாபகசத்தியுலகு. விவிதரூப சாத்திய பூதவிசேட சத்தியுலகு. விவிதாணு வியாபாரத்துவ பூதகுண சத்தியுலகு. பாகியேந்திரிய சூக்கும விகற்ப விஷய சாத்தியத்துவ பூதவர்ன சத்தியுலகு. விசேஷாணுத்துவ சாத்திய பூதபரத்துவ சத்தியுலகு. சாமானியாணுத்வ சாத்தியபூதாபரத்துவ சத்தியுலகு. அநேகாணுத்துவ விசித்திர சாமானிய சமவாய சாத்தியபூத பாவசத்தியுலகு. அதிட்டாநமாத்திர பூத நிமித்த சத்தியுலகு. அதிட்டாந விசேடமாத்திர பூத நிமித்த விசேடசத்தியுலகு. அன்றிச் சூக்கும ஸ்தூல சிநேகாணுத்துவ சம்பந்த ரூப வியத்தியாதி சாதக சாத்திய பூதோத்பவ சத்தியுலகு. பூதோத்பவாதிகரண சத்தியுலகு. பூதோத் பவகரண சத்தியுலகு. பூதோத்பவ

பருவ சத்தியுலகு. பூதோத்பவகன்ம சத்தியுலகு. பூதோத்பவ உபகார சத்தியுலகு. பூதோத்பவ உபகாரபிரேரக சத்தியுலகு. பூதாதிகார சத்தியுலகு. பூதாதிகார வதி கரண சத்தியுலகு. பூதாதிகார கரண சத்தியுலகு. பூதாதிகார பருவ சத்தியுலகு. பூதாதிகார கன்ம சத்தியுலகு. பூதாதிகாராபகார சத்தியுலகு. பூதாதிகாரோபகார பிரேரக சத்தியுலகு. பூதலய சத்தியுலகு. பூதலயாதிகரண சத்தியுலகு. பூதலயகரண சத்தியுலகு. பூதலயபருவ சத்தியுலகு. பூதலயகன்ம சத்தியுலகு. பூதலயோபகார சத்தியுலகு பூதலயோகாரப் பிரேரகசத்தியுலகு.'

இவ்வாறு இப்பாடலுக்கு உரை எழுதிய பின் 'உலகெலாம் என்பது பெருநோக்குடைய பெருமொழி பூரண நிட்களத்தின் நிர்க்குணமாகத் தோன்றிய நன்மொழி' எனப் பல்வேறு விளக்கங்களைக் காட்டு கின்றார். ஒரு சில தொட்டு அமைவோம். உலகு என்பதற் கென அவர் கொண்ட விளக்கம் அளப்பரிது. ஒரு சில பகர்வோம்.

முதலாவதாக 'உலகெலாம்' என்ற பாடலுக்கு விளக்கம் தந்த வள்ளலார், பின் அடுக்கடுக்காக உள்ள பல்வேறு வகைப்பட்ட உலகுகள் (அமைப்பு—அளவை—அனாதி நிலை—பரிமாணம் போன்றவற்றை உள்ளடக்கி) எத்தனை எத்தனையோ என எடுத்துக் காட்டுகிறார் அவர் காட்டிய அத்தனை உலகுகளுக்கும் இன்று பொருள் பொதி விளக்கம் காண்பார் இல்லை எனலாம். ஆனால் அத்தனையும் இல்லையென்றோ-மாறுபட்டவை என்றோ நம்மால் சொல்லவும் முடியாது. தம்மை மறந்து இறை நிலை உற்றவற்கே—இறையுணர்வு காட்ட—அவற்றின் உண்மை நிலைகளை உணர முடியும். அத்தகைய நிறை நிலை பெற்றார் இன்று காண்பது அரிதல்லவா?

ஐம்பூதங்களையும் எடுத்துக் கொண்டு தனித்தனியே பிருதிவி, அப்பு, வாயு, தேயு, ஆகாய நிலைகளில் அமைந்த உலகங்களையும் சூக்கும—தூல சரீரங்கள் காண முடியாத அப்புறத்தே அமைந்த உலகங்களையும் வகைப்படுத்தி அவர் காட்டுவதை நல்லவராகிய வல்லவரே உணர முடியும்; அல்லது உலகெலாம் என அடி எடுத்துத் தந்த அந்த ஆண்டவனாலேதான் முடியும். பின்பு சரியை, கிரியை, யோகம், ஞானம் என்கின்ற வகைகளிலேயும் உலகுகளைக் காட்டுகின்றார் இவ்வாறு பலப்பல வகைகளில் அந்தப் பெரிய அளவில் நாற்பத்தொரு பக்கங்களில் காட்டும் உலகங்களை நம்மால் எண்ண முடியாது. ஒரு வேளை இந்த அண்டத்திற்கு அப்பாற்பட்ட உலகங்களாகவும் இருக்கலாம் 'கண் உள்ளவன் காணக் கடவர்' என்று பெரியோர்கள் கூறுவது போன்று, தெளிந்த ஞானக் கண்ணுடையவர்களே அத்தனை உலகங்களையும் எண்ணிப் பார்க்க முடியும்.

அத்தனையும் காட்டி முடிவில் 'சச்சிதானந்த—அகண்ட—ஐக்கிய—சிவசாட்சாத்தார — அனுபவ உலகு' என முடிக்கின்றார். இவ்வாறு அளப்பருந் தன்மைத்தாய் அண்டாண்டங்களில் அமைந்த உலகங்கள் எண்ணற்றன. அவற்றுள் ஒன்றாகிய—அணுத்தன்மை வாய்ந்த இச்சிறு உலகத்தில் வாழும் நாம் இன்று இந்த அண்டச் சுழற்சியில் நின்று கொண்டிருக்கிறோம்.

நாம் வாழும் உலகம் சுற்றுவதை நாம் அறிவோம். விஞ்ஞானமும், விண்வெளிப் பயணமும் காட்டுகின்றது. அப்பூவுலகம் 'ஞாலமாய்' யாதொரு பற்றுக்கோடும் இன்றி, இது போன்ற பிற உலகங்களுடன்—ஒன்றனுக்கொன்று ஈர்க்கும் சக்தியால் கூடியவரையில் இடம் பெயராது உழன்று கொண்டே இருக்கிறது. நான் மேலே கூறியபடி இந்த ஞாலம் அணுவுக்குள் அணு; இதன் காலம்

நொடிக்குள் நொடி, அதில் ஒரு சில ஆண்டுகளே வாழும் நம் காலத்தையும் இடத்தினையும் எப்படி கணக்கிட முடியும்?—தூசுக்குள் தூசாகவும் எண்ண இயலாதே. இந்த உண்மையை உணர்வதே நம் கடமை. எனவே பரந்த அண்ட கோளச் சுழற்சிக்கிடையில் தொங்கிச் சுழலும் நம் ஞாலத்தின் நிலையினையும் அதில் சில நாள் வாழும் நம் நிலையினையும் எண்ணிப் பார்த்தால் மனிதன் மனிதனாகவே வாழ்வான். அப்படி வாழும் போது 'எவ்வுயிரும் தம் உயிர் போல்' எண்ணும் இரக்க நெறியும் 'எவ்வுயிரும் பராபரன் சன்னிதியதாகும்' என்ற தெய்வ நெறியும் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்ற தெளிந்த நெறியும் 'ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்' என்று ஒன்றிய நெறியும் அவன் வாழ்க்கை நெறிகளாக அமையும். அத்தகைய உயர்ந்த தெய்வ நெறி கலந்த மனித வாழ்வுக்கு வழி காட்டுவதே இம்மாதத்திய நான்கு சொற்பொழிவுகளின் முடிந்த முடிபாகும். காணக் கண் வேண்டும், கருத உளம் வேண்டும்.

பெரியோர்களே!

இத்தகைய மனித நெறிக்கு ஆற்றுப் படுத்துவதே பெரியார் வாய் மொழிகளும் செயல்களும், இறைவன், அம்மை, உயிர், அண்டம் இந்த நான்கினையும் இணைத்து எண்ணி உணர்ந்து நிற்கின்ற நாம், இந்த நிர்வாண் வழியே தெய்வ நெறி பெற்றவர்களாகின்றோம். பாரியும், பேகனும், வாடிய பயிரைக் கண்டபோது வாடிய வள்ளலாரும், சிறுத்தொண்டரும், கரிக்குருவியும், பன்றியும் வாழ்ந்து காட்டிய வாழ்க்கை நெறிகளைக் கண்டோம். அப்படியே அன்று தொட்டு இன்று வரை தமிழிலும் பிற மொழிகளிலும் நல்லறிஞர் கூறிய — பாடிய சொல்லோவியங்களையும் கண்டோம். இதே வகையில் ஆண்டு முழுவதும் ஒவ்வொரு புதன்கிழமையிலும், கடந்த பல ஆண்டுகளாக, 'நிர்வாண்' நல்ல சொற்பொழிவுகளைக்

கேட்டு உணர வைக்கிறது. உணர்கிறோம். உணர்ந்து அவற்றின் வழியே செயலாற்ற முயல்வோமாக!

இம்மாதத்திய நான்கு சொற்பொழிவுகளில் என்றும் உள்ள பதி, பசு, பாசம் ஆகிய அண்டத்தின் சுழற்சி ஆகியவற்றை அப்பனாகவும், அம்மையாகவும், இரண்டையும் பெற்ற ஆன்மாவாகவும் உலக நெறியாகவும் கண்டோம். இவற்றால் 'அடித்தடித்து அக்காரம்' தீற்றிய—தீற்றி மக்களை ஆன்மாக்களை — உயிர்களைத் தன் வழிப் படுத்தும் இறைவன் கருணை உள்ளத்தையும் அவ்வுள்ளத்தில் இடம் பெற்று என்றும் வாழ்கின்ற வரம் பெற்ற நல்லவர் தம் வாழ்க்கை நெறிகளையும் கண்டோம். இவற்றையெல்லாம் காட்டியும் காணவும் ஆதாரமாகிய அண்டத்தின் தன்மையினையும் அதில் உள்ள தூசாகிய நம் உலகத்தின் தன்மையினையும் அதில் வாழும் நம் உயிர்களின் நிலையினையும்—ஓரறிவு தொடங்கி ஆறறிவுடைய மனிதன் வரை அமைந்த அவற்றின் நிலைகளையும் அவை தவறின் இறைவன் அடித்துத் திருத்தும் அருள் நிலையினையும், அவற்றால் நாம் பெறும் பேற்றினையும் கண்டோம். எனவே இம்முப்பொருள் உண்மையை—பதி—பசு பாசத்தின் தன்மையை உணர்ந்து, இம்மூன்றல்லால் வேறு இல்லை என்பதைத் தெளிந்து, உலகம் வாழ நாம் நம்மாலானதைச் செய்ய முயல வேண்டும். பாரதியார் கூறியபடி,

'நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்
மதுரத்தேமொழி மாந்தர்க ளெல்லாம்
வாணி பூசைக்கு உரியன பேசீர்!
எதுவும் நல்கி இங்கு எவ்வகையானும்
இப்பெருந்தொழில் நாட்டுவம் 'வாரீர்'

என்று கூறி, நானும் உங்களை அழைக்கின்றேன். தாயுமானவர் கூறியபடி,

'காகமுறவு கலந்துண்ணக் கண்டீர்
அகண்டாகார சிவ
போகம் எனும் பேரின்ப வெள்ளம் பொங்கித்
ததும்பிப் பூரணமாய்
ஏக உருவாய்க் கிடக்குது ஐயோ! இன்புற்றிட
நாம் இனி எடுத்த
தேகம் விழுமுன் புசிப்பதற்குச் சேரவாரும்
செகத்தீரே!'

என்று உங்களை — உலகத்தவரை அழைக்கின்றேன். உணருங்கள் — உணர்த்துங்கள் — செயல்படுத்துங்கள்! செம்மை நலம் காணுங்கள். அப்போது இச்சகமே இறைவன் கோயிலாய்—இன்பச் சோலையாய்—எல்லையற்ற கருணையங் கடலாய்க் காட்சி தரும். 'நிர்வாண' இந்நிலையினை நாட்டுக்கு நல்குவதாக! நலம் பெருகுவதாக! இன்பம் செழிப்பதாக! எழில் மிகுவதாக! வாழி!

ஈன்றுமாய் எனக்கு எந்தையுமாய் உடன்
தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துகந்தான் மனதுள்
ளிருக்க
ஏன்றான் இமையவர்க் கன்பர் திருப்பாதிரிப்
புலியூர்த்
தோன்றாத் துணையாய் இருந்தனன் தன்
அடியோங்களுக்கே

—அப்பர்

தாயாய் முலையைத் தருவாளே தாரா
தொழிந்தால் சவலையாய்
நாயன் கழிந்து போவேனோ நம்பி
இனித்தான் நல்குதியே
தாயே என்றுன் தாளடைந்தேன் தயாநீ
என்பால் இல்லையே
நாயேன் அடிமை உடனாக ஆண்டாய்
நான்தான் வேண்டாவோ

—மணிவாசகர்

எந்தாயும் எனக்கருள் தந்தையும் நீ
சிந்தாகுலம் ஆனவை தீர்த்து எனைஆள்
கந்தா! கதிர் வேலவனே! உமையாள்
மைந்தா! குமரா! மறை நாயகனே!

—அருணகிரியார்

## ஆசிரியர் அ. மு. ப அவர்கள் எழுதிய நூல்கள்—85 க்கு மேல்

### தற்போது உள்ளவை

| | | |
|---|---|---|
| இளமையின் நினைவுகள் | 2 | 50 |
| கொய்த மலர்கள் | 4 | 50 |
| துன்பச்சூழல் (நாவல்) | 2 | 00 |
| மக்கட் செல்வம் | 2 | 00 |
| பெண் | 1 | 50 |
| மனிதன் எங்கே செல்கிறான்? | 1 | 50 |
| தாயின் மணி வயிற்றில் | 1 | 00 |
| தொழில் வளம் | 5 | 00 |
| வெள்ளிவிழாச் சொற்பொழிவுகள் | 3 | 00 |
| மலைவாழ் மக்கள் | 5 | 00 |
| சிறுவர்களுக்கு | 2 | 00 |
| வானொலி வழியே | 3 | 00 |
| நாலும் இரண்டும் | 2 | 00 |
| 19ம் நூற்றாண்டு உரைநடை | 8 | 00 |
| புதிய கல்விமுறை | 3 | 00 |
| பல்கலைக் கழகச் சொற்பொழிவுகள் | 20 | 00 |
| சாத்தனார் | 6 | 00 |
| கவிதை உள்ளம் | 5 | 00 |
| மு. வ. தமிழ்த்தொண்டு | 5 | 00 |
| வையைத் தமிழ் | 3 | 00 |
| கங்கைக் கரையில் காவிரித் தமிழ் | 5 | 00 |
| தமிழ்நாட்டு விழாக்கள் | 4 | 00 |
| காஞ்சி வாழ்க்கை | 5 | 00 |
| கவிதையும் வாழ்க்கையும் | 20 | 00 |
| வழுவிலா மணிவாசகர் | 7 | 00 |

### புதிய நூல்கள்

| | | |
|---|---|---|
| ஏழு நாடுகளில் எழுபது நாட்கள் | 36 | 00 |
| திரும்பிப் பார்க்கிறேன் திகைத்து நிற்கிறேன் | 16 | 00 |
| வரலாற்றுக்குமுன் வடக்கும் தெற்கும் (புதிய பதிப்பு) | 16 | 00 |
| தமிழர் வாழ்வு | 16 | 00 |
| ஓங்குக உலகம் | 16 | 00 |
| தாய்மை | 20 | 00 |
| கல்வி எனும் கண் | 12 | 00 |
| ஆனந்த முதல் ஆனந்த வரை | 40 | 00 |
| சான்றோர் வாக்கு (குறள் வழி) | 17 | 00 |
| நல்லவை ஆற்றுமின் (வானொலிப் பேச்சு) | 20 | 00 |
| அருந்திறலாளர் அ. மு. ப. (மாணவர் தொகுத்தவை-1992) | 20 | 00 |
| அம்மையும் அப்பனும் | 20 | 00 |